

# உஷ்

கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் முக்கியமான பிரமுகர்கள் மேயர் பதவிக்கு போட்டியிடவுள்ளனர்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் சார்பில் நாற்காலி சின்னத்தில் தீபா எதிரிசிங்க, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் தாமரை மொட்டுச் சின்னத்தில் அருந்திக்க பெர்னாண்டோவும் ஐக்கிய மக்கள் சக்தியின் தொலைபேசி சின்னத்தில் எரான் விக்ரமரத்னவும் தேசிய மக்கள் சக்தியின் திசைகாட்டி சின்னத்தில் கெலி பல்தசாரும் ஐக்கிய தேசியக் கட்சியின் யானைச் சின்னத்தில் ரோஸி சேனநாயக்கவும் சர்வசன அதிகாரத்தின் பதக்கம் சின்னத்தில் ஹசன் ஹலால்தீனும் மேயர் பதவிக்கு போட்டியிடவுள்ளனர்.




Follow us:


# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர்: 05, இதழ்: 191 குரோதி வருடம், பங்குனி மாதம் 03ஆம் திகதி திங்கட்கிழமை (17.03.2025) ஹிஜ்ரி 1446, ரமழான் - 16, 0115 886187- விலை ரூ.40 பக்கங்கள் 12


## கமெண்ட் கந்தர்...






கனேடிய அமைச்சர் கரிக்கு வாழ்த்துகள்

பக்கம் 04



43 நாடுகளுக்கு அமெரிக்கா தடை!

பக்கம் 10



போதைப்பொருள் வழக்கில் சிக்கிய ஆஸி. கிரிக்கெட் வீரர்

பக்கம் 12

## தொடர் வேலை நிறுத்தத்துக்கு தயாராகும் தபால் திணைக்களம்

### முதற்கட்ட நடவடிக்கை நேற்று மாலை ஆரம்பம்



» 02 பக்கம்

# பட்டலந்த ஆணைக்குழு அறிக்கையை திட்டவட்டமாக நிராகரித்தார் ரணில்!

## ஜே.வி.பியை பற்றியே அது பேசுவதாகவும் சாடல்

கே.சுபானி

“பட்டலந்த ஆணைக்குழுவின் அறிக்கை, பெரும்பாலும் ஜே.வி.பியினரால் கட்ட விழ்த்துவிடப்பட்ட அராஜகம் குறித்து எடுத்துரைக்கின்றனவே அன்றி, என்மீதான குற்றச்சாட்டுகளை அல்ல. ஆணைக்குழு அறிக்கையை நான் முழுமையாக நிராகரிக்கின்றேன்” என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

» 02 பக்கம்



## க.பொ.த. சாதாரண தரப்பரீட்சை இன்று



கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை நாடளாவிய ரீதியில் இன்று திங்கட்கிழமை (17) முதல் எதிர்வரும் 26ஆம் திகதிவரை நடைபெறவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு 3,663 நிலையங்க ளில் பரீட்சைகள் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

» 02 பக்கம்

## அரச தாதியர் சங்கமும் இன்று பணிப்பகிஷ்கரிப்பு



அரசாங்க தாதியர் சங்கம் இன்று திங்கட்கிழமை (17) 03 மணி நேர வேலைநிறுத்தத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளது.

» 02 பக்கம்



# உதயமாகிறது புதிய கட்சி!

## காஞ்சன விஜேசேகர தலைமையில் மொட்டுக்கட்சி பிரமுகர்கள் திரள்வு

» 02 பக்கம்

## பட்டலந்த விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை: இரண்டு நாள் விவாதம் ஏப்ரல் 10ஆம் திகதி ஆரம்பம்



» 02 பக்கம்

## விமானத்தில் பாலியல் துஷ்பிரயோக முயற்சி

### குழப்பம் விளைவித்த இலங்கையர் கைது



சிங்கப்பூரிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்த விமானத்தில் விமான பணிப்பெண்கள் இருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முயன்ற பயணி ஒருவர் விமான நிலையப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

» 02 பக்கம்

## அரச பணியாளர்கள் பலர் விசாரணை வலயத்துக்குள்

### வனவிலங்கு கணக்கெடுப்புத் திட்டத்துக்கு ஒத்துழைக்காததால் நடவடிக்கை

விவசாயப் பயிர்களுக்குச் சேதம் விளைவிக்கும் வனவிலங்குகளை கணக்கெடுப்பதற்கான படிவங்களை விநியோகிக்காத அரச ஊழியர்க ளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

» 02 பக்கம்

# செவ்வந்தி மாலைதீவில்?

## வெளியானது புதிய தகவல்



கனேமுல்ல சஞ்சீவ கொலைக்கு சூத்திரதாரி யாக செயற்பட்டதாகக் கருதப்படும் பிரதான சந்தேகநபரான இஷாரா செவ்வந்தி, கடல் வழியாக மாலைதீவுக்குத் தப்பிச் சென்றிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

பொலிஸார் தேடலை ஆரம்பிக்க முன், பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த ஒருவரால் செவ்வந்தி மாலைதீவுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாக தகவல்கள் கசிந்துள்ளன.

» 02 பக்கம்

## தேசபந்து தொடர்பில் முக்கிய தீர்ப்பு இன்று

### மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவிக்கும்

வெலிகம பகுதியில் அமைந்துள்ள ‘W15’ ஹோட்டலில் 2023ஆம் ஆண்டு நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை கைது செய்ய மாத்தறை நீதவான் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை நிறுத்திவைக்க இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக் கப்படுமா இல்லையா? என்ற முடிவை மேன்முறையீட்டு...

» 02 பக்கம்

## வாக்குறுதிகளை நிறைவேற்றாவிடின் அரசுக்கு எதிராக போராடுவோம்!

ஏப்ரல் 21 வரை காலக்கெடு விதித்தார் பேராயர்



» 02 பக்கம்








வியாபாரம் முன்னேற இங்கு கரையேறுங்கள்

வருடாந்த வட்டி 7% இலிருந்து

PEOPLE'S BANK BUSINESS LOANS

தேவைகளின் அடிப்படையில் ஆகக் கூடிய கடன் தொகை மற்றும் மீளச் செலுத்தும் காலத்துடன் விவசாயம், தயாரிப்பு, சேவை மற்றும் வணிக வியாபாரம், ஏற்றுமதி, இறக்குமதி மற்றும் நிலையான வியாபாரங்களுக்கான ஏராளமான கடன் திட்டங்கள்

மேலும் விபரங்களுக்கு அருகில் உள்ள மக்கள் வங்கிக் கிளைக்கு வாருங்கள்.

நிபந்தனைகளுக்கு உட்பட்டது

www.peoplesbank.lk 1961 PEOPLE'S BANK CALL CENTRE

PEOPLE'S BANK Pride of the Nation

# குற்றச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவரின் வாக்குமூலங்களை பொலிஸார் ஊடகங்களிடம் வெளியிடுவது சட்டவிரோதமானது

## மருத்துவரும் சட்டத்தரணியுமான பாலித சுபசிங்க கண்டனம்

எம்.ஏ.அமீனுல்லா



குற்றச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவரின் வாக்குமூலங்களை பொலிஸார் ஊடகங்களிடம் வெளியிடுவது சட்டவிரோதமானது எனவும் அநுராதபுர வைத்தியர் தொடர்பான வாக்குமூலங்களை மூன்றாம் தரப்பினருக்கு வழங்கியது யார் என்பது குறித்து உடனடியாக விசாரணை நடத்தப்பட வேண்டுமென சட்டத்தரணி, வைத்தியர் பாலித பண்டார சுபசிங்க தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட ஒருவர் தனக்கு நீதி கிடைப்பதை உறுதிசெய்வதற்காக பொலிஸ் பிரிவினிடம் தான் எதிர்கொண்ட அனைத்து சம்பவங்களையும் வெளிப்படுத்துவதாகவும், ஊடகங்கள் மூலம் விளம்பரம் செய்யவோ அல்லது ஒருவரின் குரலை விளம்பரப்படுத்தி தனது யூடியூப் போன்ற சமூக வலைத்தளங்களில் பார்வைகளை அதிகரிக்கவோ அல்ல என்றும் அவர் வலியுறுத்தினார்.

கண்டியில் நேற்று (16) ஊடகவியாளர்களுக்கு தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்துரையாற்றிய சட்டத்தரணி, வைத்தியர் பாலித பண்டார சுபசிங்க, பலாத்காரம் போன்ற பாரதூரமான குற்றச்செயலுக்கு ஆளான பெண், பொலிஸாரிடம் கொடுத்த வாக்குமூலம் இவ்வாறு தவறாகப் பயன்படுத்தப்படும் எனத் தெரிந்தால், தனக்கு நேர்ந்த கொடுமைகளை மௌனமாகச் சகித்துக் கொள்வாள், சட்டத்தின் முன் வரமாட்டாள் என்பது சாதாரணமாகும்.

1995ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க தண்டனைச் சட்டம் (திருத்தம்) சட்டத்தின் பிரிவு 365 (சி) (1) இன் கீழ் "சில குற்றங்கள் தொடர்பான உண்மைகளை வெளியிடுதல்" என்ற தலைப்பின் கீழ் இதற்கான சட்ட விதிகள் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன.

அதன்படி, பாலியல் வன்கொடுமை, விபசாரத்திற்கான கோரிக்கை, கற்பழிப்பு, கடுமையான பாலியல் துஷ்பிரயோகம், விபசாரம், சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் கடுமையான அநாகரீகமான செயல்கள் அல்லது இயற்கைக்கு மாறான பாலியல் செயல்கள் போன்ற குற்றங்களில் பாதிக்கப்பட்டவரின் பெயர் அல்லது அடையாளத்தை வெளிப்படுத்தும் எந்தவொரு விடயத்தையும் பிரசுரிப்பது அல்லது வெளியிடுவது தண்டனைச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது. மேலும் இரண்டு ஆண்டுகள்வரை சிறைத்தண்டனை மற்றும் அபராதமும் விதிக்கப்படலாம்.

இந்த ஏற்பாட்டில் 'பெயர்' அல்லது 'அடையாளம்' என்ற இரண்டு வெவ்வேறு வழக்குகள் குறிப்பிடப்பட்டுள்ளன, அதாவது பெயர் குறிப்பிடப்படாவிட்டாலும் பாதிக்கப்பட்ட நபரை அடையாளம் காண வேறு தடயங்களை வழங்குவது சட்டவிரோதமானது என்றும் சுட்டிக்காட்டினார்.

பாதிக்கப்பட்டவர் உயிரிழந்திருந்தால், வயது குறைந்தவராக இருந்தால் அல்லது மனநலம் குன்றியவராக இருந்தால் அவரின் பெற்றோர் அல்லது பாதுகாவலரிடம் அனுமதி பெற வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## தேசபந்து தொடர்பில்...

நீதிமன்றம் இன்று (17) அறிவிக்கவுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பதில் தலைவர் முகமது லபார் தாஹிர் மற்றும் சாத் திசாநாயக்க ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் இந்த முடிவை அறிவிக்கவுள்ளது.

சம்பவம் தொடர்பாக மாத்தறை நீதவான் நீதிமன்றம் பெப்ரவரி 27ஆம் திகதி பிறப்பித்த உத்தரவுகளை இரத்துச் செய்யும் ரிட் உத்தரவைப் பிறப்பிக்கக்கோரி, ஐ.ஜி.பி. தேசபந்து தென்னகோன் தாக்கல் செய்த ரிட் மனுவின் பரிசீலனை கடந்த 12ஆம் திகதியுடன் முடிவடைந்தது. பின்னர் நீதிமன்றம் அமர்வு தனது முடிவை இன்று அறிவிக்கும் என்று உத்தரவிட்டது.

டிசம்பர் 31, 2023 அன்று, மாத்தறை, வெலிகம பகுதியில் உள்ள W15 ஹோட்டலுக்கு முன்னால் ஒரு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நிகழ்ந்தது. இதன் விளைவாக கொழும்பு குற்றப்பிரிவில் சேவையாற்றிய பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் இறந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக தன்னிடம் வாக்குமூலம் கூட பதிவு செய்யாமல் தன்னை கைதுசெய்ய மாத்தறை நீதவான் பிறப்பித்த உத்தரவு சட்டத்துக்கு முரணானது என்றும் அது செல்லாது என்றும் கூறி தேசபந்து தென்னகோன் இந்த மனுவை தாக்கல் செய்திருந்தார்.

## வாக்குறுதிகளை...

''எதிர்வரும் ஏப்ரல் மாதம் 21ஆம் திகதியன்றுடன் 06ஆவது ஆண்டு நிறைவு தினத்துக்கு முன்னதாக உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியைப் பெற்றுக் கொடுப்பதாகக் கூறிய வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறும் பட்சத்தில் நாம் வீதியில் இறங்குவதற்கு பின்னிற்க மாட்டோம்'' என கொழும்பு மறை மாவட்ட பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை குறிப்பிட்டார்.

2025 ஜூபிலி ஆண்டை முன்னிட்டு கொழும்பு மறை மாவட்ட மக்கள் தொடர்பு மத்திய நிலையத்தினால் கொழும்பு பேராயர் இல்லத்தில் நேற்று முன்தினம் (15) ஏற்பாடு செய்யப்பட்ட விசேட கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்று கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கூறுகையில்,

''நாட்டில் ஊடகச் சுதந்திரம், மானுடத்துவம், மக்கள் சுயாதீனமாக இருத்தல் போன்றவற்றை நிலைநாட்டுவதற்கும் நாட்டில் புதிய கலாசாரத்தை ஏற்படுத்துவதை நோக்காகக் கொண்டு செயற்படுமாறும் அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கிறேன். இதற்காகத் தான், நாம் உங்களிடம் ஆட்சி அதிகாரத்தை ஒப்படைத்தோம். தற்போது உங்களிடம் உள்ள ஆட்சி அதிகாரத்தை வைத்துக்கொண்டு சட்டதிட்டங்களை திருத்துங்கள்.

அவற்றை திருத்துவதற்கு இனியும் காலவேளை தேவையில்லை. சட்டம் திருத்தப்பட வேண்டும் எனக் கூறிக்கொண்டு இனியும் காலதாமதம் ஏற்படுத்தாதீர்கள்.

இந்நாட்டில் 1978 அரசியலமைப்பில் தனி ஒரு நபர் ஒட்டுமொத்த அதிகாரத்தையும் தன்வசப்படுத்துவதற்கான சட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இந்த 1978 அரசியலமைப்பின் பின்னர், ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டமை, ஊடகவியலாளர்கள் காணாமலாக்கப்பட்டமை உள்ளிட்ட ஊடக சுதந்திரத்துக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வருகிறது. இவற்றுக்கு முழு காரணமும் அரசியல் தலைவர்களே ஆவர்.

லசந்த விக்ரமதுங்க கொலை, பிரதீப் எக்னெலிகொட காணாமல் ஆக்கப்பட்டமை, கீத் நொயார் தாக்கப்பட்டமை உள்ளிட்ட இன்னும் பல ஊடகவியலாளர்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் குறித்து எந்தவொரு சட்ட நடவடிக்கைகளும் இல்லை. அவர்களுக்கு நீதியும் இதுவரை கிடைக்கப்பெறவில்லை. தற்போதுள்ள அரசாங்கமும் இந்த விடயங்கள் தொடர்பில் முறையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றனவா என்பது குறித்து எனக்குத் தெரியாது.

உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல் சம்பவம் குறித்தும் எமக்கு அதனையே கூற வேண்டியுள்ளது. பலதரப்பட்ட வகையில் எமக்கு வாக்குறுதி அளித்தார்கள். வாக்குறுதிகளை மாத்திரம் வழங்கினர். எனினும், ஒரு வாக்குறுதியைக் கூட இதுவரை நிறைவேற்றவில்லை.

இனங்களுக்கிடையில் மதங்களுக்கிடையில் பிரிவினைகளை ஏற்படுத்தி நாட்டில் குழப்பங்களை ஏற்படுத்தி, தேர்தல்களின்போது வாக்குகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாடுகளே 1948ஆம் ஆண்டிலிருந்து எமது அரசியல் தலைவர்கள் எமது நாட்டில் செய்து வருகின்றனர். இவ்வாறு, எமது அரசியல் தலைவர்கள் இனங்களுக்கிடையே மதங்களுக்கிடையே குழப்பங்களை ஏற்படுத்திக்கொள்ளும் ஓர் சமூகமாக இந்நாட்டு மக்களை உருவாக்கியதுடன், அவர்கள் சொல்வதை செய்யும் அடிமைகளாக்கினர்.

பட்டலந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் மிகவும் மோசமான சம்பவங்களாகும். ஊடகங்களுக்கு சுயாதீனமான பொறுப்பு நிலையை கொண்டு வருவதற்கு கடந்த அரசாங்கம் முயற்சித்திருந்தது. நல்ல வேளையாக இது சட்டமாக்கப்படவில்லை. அவை சட்டமாக இயற்றப்பட்டால் எவரும் கருத்துத்தெரிவிக்க முடியாது வாயை மூடியிருக்க வேண்டியதுதான்.

இவ்வாறு கொண்டு வருவதற்கு காரணம் என்னவெனில், நம்மில் பலர் பக்கச்சார்பாக சிந்திப்பதுதான். சில ஊடகங்களும் பக்கச்சார்பாக செயற்படுவதுண்டு. இவ்வாறு அவர்கள் செயற்படுவதனால் உண்மைத்தன்மையை மக்கள் அறிய முடியாமல் போகின்றது. இந்த முறைமையை மாற்றியமைக்க வேண்டும். இந்த அரசியல் கலாசாரத்தை மாற்றியமைப்பதற்காகவே, நாம் இந்த அரசாங்கத்தை ஆட்சிபீடம் ஏற்றினோம். இந்த அரசியல் கலாசாரத்தில் மாற்றம் ஏற்படவில்லை என்றால் நாம் மீண்டும் சிந்திக்க வேண்டியநிலை ஏற்படும்.

ஆகவே, கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுங்கள். விசேடமாக ஊடகச் சுதந்திரம், மானுடத்துவம், சுயாதீனமாக இருத்தல் போன்றவற்றுக்கு தடையாக இருக்காதீர்கள். இந்த கலாசாரத்தை நிறுத்திவிடுங்கள்.

இலங்கையில், புதிய சிந்தனைகள், புதிய புதிய கலாசாரத்தை ஏற்படுத்துவதை நோக்காகக்கொண்டு செயற்படு டுமாறு அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கிறேன்.

இதற்காகவே நாம் உங்களுக்கு ஆட்சி அதிகாரத்தை கொடுத்தோம். இதனை செயற்படுத்துவதற்காக சட்டதிட்டங்களை மாற்றி அமையுங்கள். மாற்றியமைப்பதற்கு காலம் எடுக்கத் தேவையில்லை. தங்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டதாயின், அந்த அதிகாரத்தை பயன்படுத்தி அவற்றை மாற்றியமைக்க முடியும்.

உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்கு இனியும் காலம் தாழ்த்தக்கூடாதென்றும் இவ்விடயம் தொடர்பான எந்தவொரு விடயத்தையும் இரகசியமாக வைத்துக்கொள்ளாமல், எவருடனும் டீல் போடாமல் உண்மையை வெளியே கொண்டு வருவதற்கு தற்போது ஆட்சியிலுள்ள அரசாங்கம் விரைந்து செயற்படுவது அவசியம்.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 21ஆம் திகதியுடன் 06ஆவது ஆண்டு நிறைவு தினத்துக்கு முன்னதாக உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியை பெற்றுக்கொடுக்க வேண்டும். அவ்வாறு எமக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறும் பட்சத்தில், நாம் வீதியில் இறங்குவதற்கு பின்னிற்க மாட்டோம். ஆட்சிபீடம் ஏறியதன் பின்னர் கட்டுவாப்பிட்டிக்கு வந்து மக்களுக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு தவறாதீர்கள்'' என்றார்.

## செவ்வந்தி...

மேலும், இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் வெளிநாட்டில் இருக்கும் பாதாள உலகக் கும்பல் உறுப்பினர் கையாண்டுள்ளதாக மேற்கண்ட வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

எனவே, பிரதான சந்தேக நபரான இஷாரா செவ்வந்தியை கைதுசெய்ய பொலிஸார் தீவிர விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

## உதயமாகிறது புதிய கட்சி!..

புதிய அரசியல் கட்சியொன்று விரைவில் அறிமுகமாகவுள்ளது. முன்னாள் அமைச்சர் காஞ்சன விஜேசேகர தலைமையில் அமையவுள்ள இந்த அரசியல் கட்சியில், பொதுஜன பெரமுனவின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் இணையவுள்ளனர்.

இது தொடர்பான பேச்சுகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. கட்சியின் புதிய சின்னம் மற்றும் பெயர் இன்னும் ஓரிரு நாட்களில் இறுதி செய்யப்படவுள்ளன.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன மக்கள் செல்வாக்கை இழந்துள்ளதால் அதனை சீர்செய்ய நீண்டகாலம் தேவைப்படும் என்பதாலும் அரசியலில் ஈடுபட நிரந்தர தளம் ஒன்று தேவை என்பதாலும் இந்த புதிய அரசியல் கட்சியை உருவாக்க உத்தேசித்ததாக அந்த செயற்பாட்டில் ஈடுபட்டுவரும் முன்னாள் எம்.பி. ஒருவர் தெரிவித்தார். இந்தப் புதிய அரசியல் கட்சியின் புதிய முகங்கள் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

## அரச பணியாளர்கள்...

பொலன்னறுவை, கிரிதலே பிரதேசத்தில் இடம்பெற்ற விவசாயப் பயிர்களுக்குச் சேதம் விளைவிக்கும் வனவிலங்குகளை கணக்கெடுப்பதற்கான நடவடிக்கையின் பின்னர் நேற்று முன்தினம் (15) ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே வீடமைப்பு பிரதி அமைச்சர் டி.பி.சரத் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

''விவசாயப் பயிர்களுக்குச் சேதம் விளைவிக்கும் வனவிலங்குகளை கணக்கெடுப்பதற்கான படிவங்கள் கமத்தொழில் அமைச்சுமூலம் அச்சடிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டது. அதனை பொதுமக்கள் மத்தியில் விநியோகிப்பதற்காக சமுர்த்தி உத்தியோகத்தர்கள், விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள் ஆகியோரை ஏற்பாடு செய்திருந்தோம்.

குறித்த படிவமொன்றை அச்சிட படிவம் ஒன்றுக்கு முப்பது சதம் செலவிடப்பட்டிருந்தது. அது பொதுமக்களின் வரிப்பணம். அதனை வீணாக்க எந்தவொரு அரசாங்க ஊழியருக்கும் இடமளிக்க முடியாது. எனவே உரிய முறையில் விவசாயப் பயிர்களுக்குச் சேதம் விளைவிக்கும் வனவிலங்குகளை கணக்கெடுப்பதற்கான படிவங்களை விநியோகிக்காத அரச ஊழியர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும்'' என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## க.பொ.த. சாதாரண...

இந்தப் பரீட்சைக்கு 4 இலட்சத்து 78ஆயிரத்து 182 பரீட்சார்த்திகள் தோற்றுகின்றனர். அவர்களில் 3 இலட்சத்து 98 ஆயிரத்து 182 பேர் பாடசாலை பரீட்சார்த்திகளாவர் என்றும் பரீட்சைத் திணைக்களம் மேலும் கூறியுள்ளது.

பரீட்சை நிலையங்களைச் சுற்றி சிறப்பு பாதுகாப்புத் திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதேவேளை, க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள வர்கள் பரீட்சைக்கு தேவையான ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணம், பரீட்சை அனுமதிப்பத்திரம் உள்ளிட்ட ஆவணங்களை கட்டாயம் கொண்டுவர வேண்டும் எனப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை தொடர்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை(16) இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இந்த விடயத்தை கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், "க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள பரீட்சார்த்திகள் நாளைய தினம் பரீட்சை மண்டபத்துக்கு முன்கூட்டியே வர வேண்டும். தேவையற்ற பொருட்களை பரீட்சை மண்டபத்துக்கு கொண்டு செல்வதைத் தவிர்க்க வேண்டும். இதனை மீறும் பட்சத்தில், பரீட்சை குற்றமாகக் கருதி அதிகபட்ச ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும். அதன்படி, 05 வருடங்களுக்கு பரீட்சை தடை விதிக்க முடியும்'' என சுட்டிக்காட்டியுள்ளார்.

## விமானத்தில் பாலியல்...

கைதுசெய்யப்பட்ட நபர் கொழும்பு, அத்துருகிரிய பகுதியைச் சேர்ந்த 38 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர் நேற்று முன்தினம் (15) இரவு 10.00 மணியளவில் ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் விமானத்தில் சிங்கப்பூரிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்துள்ளார். வருகையின்போது சந்தேகநபர், அதிக மதுபோதையில் இருந்த நிலையில், விமானத்தில் பணிபுரியும் விமானப் பணிப்பெண்கள் இருவர் மீது பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முயன்றுள்ளார். அதன்படி, விமானப் பணிப்பெண்கள் இருவரும் விமானியிடம் சம்பவம் தொடர்பில் புகாரளித்ததைத் தொடர்ந்து, அது குறித்து கட்டுநாயக்க விமான நிலையக் கட்டுப்பாட்டு அறைக்குத் தெரிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

விமானம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்கியதும் அவர் ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ் பாதுகாப்பு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு கட்டுநாயக்க பொலிஸாரிடம் அழைத்துச் செல்லப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேற்படி விமானப் பணிப்பெண்களிடமிருந்து வாக்குமூலங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

## தொடர் வேலை நிறுத்தத்துக்கு...

தபால் திணைக்களத்தில் உள்ள வெற்றிடங்களை நிரப்புதல் உள்ளிட்ட 07 கோரிக்கைகளை முன்வைத்து பணிப்புறக்கணிப்பை ஆரம்பிக்கவுள்ளதாக தபால் மற்றும் தொலைத்தொடர்பு அதிகாரிகள் சங்கம் மற்றும் ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணி ஆகியன அறிவித்துள்ளன.

நேற்று (16) மாலை 04 மணிமுதல் எதிர்வரும் 18ஆம் திகதிவரை 48 மணிநேர அடையாள வேலைநிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணியின் இணைப்பாளர் சிந்தக பண்டார தெரிவித்துள்ளார்.

தபால் திணைக்களத்தில் சுமார் 7,500 ஊழியர்களின் பற்றாக்குறை காணப்படுவதாகவும் இதற்கு தீர்வைக்கோரி இந்த தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## அரச தாதியர்...

அரசாங்க தாதியர் அதிகாரிகள் சங்கம் இன்று காலை 10 மணிமுதல் பிற்பகல் 01 மணிவரை 03 மணிநேரம் சேவையிலிருந்து விலக முடிவு செய்துள்ளதாக அதன் அழைப்பாளர் சமன் ரத்னபிரிய தெரிவித்துள்ளார்.

பதவி உயர்வு மறுப்பு மற்றும் சம்பளக் குறைப்பு உள்ளிட்டவற்றை அடிப்படையாகக் கொண்டு தாதியர்கள் சங்கம் வேலைநிறுத்தத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, ''நோயாளிகளை ஆபத்தில் ஆழ்த்தும் சிரமத்தை ஏற்படுத்தும் அல்லது சுகாதார சேவையை குறைமதிப்புக்குட்படுத்தும் வகையில் யாராவது செயற்பட்டால், தற்போதைய அரசாங்கம் மக்களின் பக்கம் நின்று அவர்கள் சார்பாக முடிவுகளை எடுக்கக் கடமைப்பட்டுள்ளது என்றும் அது தொடர்பாக தயக்கமின்றி செயற்படும்'' என்றும் சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பட்டலந்த ஆணைக்குழு...

பட்டலந்த பகுதியில் சட்டவிரோத சித்திரவதை முகாம் நடத்திச் செல்லப்பட்டமை தொடர்பான பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை கடந்த வெள்ளிக்கிழமை (14) பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இந்நிலையில், ஆணைக்குழு அறிக்கை குறித்தான தனது நிலைப்பாட்டை எடுத்துரைக்கும் வகையில் நேற்று (16) சிறப்பு அறிக்கையொன்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால் வெளியிடப்பட்டது. அந்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

''1987ஆம் ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தம் கையெழுத்தான பின்னர், மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) நாடு முழுவதும் வன்முறையை கட்டவிழ்த்துவிடும் வேலைகளை மேற்கொண்டது. அந்த நேரத்தில், நாட்டின் முக்கிய இடங்களைப் பாதுகாக்கும் அதிகாரத்தை அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தன, அமைச்சரவை அமைச்சர்களிடம் ஒப்படைத்தார்.

பியகம பகுதியில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம், டீசல் மின் உற்பத்தி நிலையம், மகாவலியிலிருந்து கொழும்புக்கு மின்சாரம் வழங்கும் மையம் மற்றும் வணிக மண்டலம் போன்ற பல பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் இருந்தன. அந்தப் பகுதியில் பாதுகாப்பு உறுதி செய்ய இராணுவம் வரவழைக்கப்பட்டது. பாதுகாப்புப் படையினர் தங்குவதற்காக இலங்கை உர உற்பத்தி கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான பல கைவிடப்பட்ட கட்டடங்கள் மற்றும் வீடுகளை வழங்க முடிவுசெய்யப்பட்டது. அந்த நேரத்தில், இலங்கை மின்சார சபையின் பல அதிகாரிகள் ஏற்கனவே அங்கு பல வீடுகளில் வசித்து வந்தனர். இந்த பாதுகாப்பு காவல்நிலைய முகாமாக சப்ஸ்கந்த பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டு, பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கொல்லப்பட்டார். அந்த நேரத்தில், பாதுகாப்பு பிரதி அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன என்னைத் தொடர்புகொண்டு, வீட்டு வளாகத்தில் காலியாகவுள்ள வீடுகளை இராணுவம் மற்றும் பொலிஸ் அதிகாரிகளின் பாதுகாப்புக்காக வழங்குமாறு கேட்டுக்கொண்டார். அதன்படி, சம்பந்தப்பட்ட வீடுகளை களனி பொலிஸ் கண்காணிப்பாளர் நளின் தெல்கொடவிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதற்கிடையில், ஒரு மாகாண சபை உறுப்பினர், ஒரு கூட்டுறவு சங்கத் தலைவர் மற்றும் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் உட்பட பலர் படுகொலை செய்யப்பட்டனர். அதே நேரத்தில், மற்றொரு மாகாண சபை உறுப்பினரின் வீட்டின் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது. அதிகாரத்திலிருந்த அரசாங்கம், நாட்டில் அமைதியையும் தேசிய பாதுகாப்பையும் உறுதிசெய்த அதேவேளையில், வீழ்ச்சியடைந்த மக்களின் வாழ்க்கையை மீட்டெடுக்கவும் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பவும் பாடுபட்டது.

இதேவேளை, 1994ஆம் ஆண்டுக்குப் பின்னர், பட்டலந்த பகுதியில் சித்திரவதைகள் நடந்ததா என்பதை விசாரிக்க முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆணைக்குழுவொன்றை அமைத்தார். அதற்குப் பலர் அழைக்கப்பட்டிருந்தனர். நான் சாட்சியாக மட்டுமே அழைக்கப்பட்டேன். அந்த நேரத்தில், நான் நாட்டின் எதிர்க்கட்சித் தலைவராகப் பணியாற்றிக்கொண்டிருந்தேன். முழுமையான அரசியல் சேறுபூசும் நோக்கத்துடன் பட்டலந்த ஆணையம் நியமிக்கப்பட்டது. ஆனால், அந்த முயற்சி வெற்றியளிக்கவில்லை.

ஒரு அமைச்சராக, பொலிஸ் கண்காணிப்பாளர், பொலிஸ் அதிகாரிகளுக்கு வீட்டுவசதி வழங்குவது முறையல்ல என்று அறிக்கையில் உள்ள முடிவுகள் கூறுகின்றன. வீடுகளை பொலிஸ் மா அதிபரிடம் ஒப்படைத்து, அவர் மூலம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் ஒப்படைப்பதே சரியான முறையாக இருக்க வேண்டும் எனக் கூறப்பட்டது. இந்தச் செயலுக்கு நளின் தெல்கொடவும் நானும் மறைமுகமாகப் பொறுப்பு என்று ஆணைய அறிக்கை கூறுகிறது. ஆணையத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மற்ற குற்றச்சாட்டுகள் எதுவும் எனக்குப் பொருந்தாது.

ஆணைக்குழுவின் அறிக்கையின் இறுதி அவதானிப்புகள் 1988-90 காலப்பகுதியில் ஜே.வி.பி. செய்த ஏராளமான பயங்கரவாதச் செயல்களைக் குறிப்பிடுகின்றன. அதன் பின்னணியும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆணைக்குழு அறிக்கையின் மூன்றாவது அத்தியாயம், ஜே.வி.பி. செய்த கொடூரமான பயங்கரவாதச் செயல்களை விரிவாக விவரிக்கிறது. முழு வரலாறும் அதில் சேர்க்கப்பட்டுள்ளது. மேற்கூறியவற்றைத் தவிர, வேறு எந்த குற்றச்சாட்டுகளும் எனக்குப் பொருந்தாது. அந்த அறிக்கையை நான் முழுமையாக நிராகரிக்கிறேன். பட்டலந்த ஆணைக்குழு அறிக்கையை மறைத்ததாக யாரும் குற்றஞ்சாட்ட முடியாது. கடந்த 2000ஆம் ஆண்டு பாராளுமன்ற அமர்வின்போது அறிக்கையாகக் கிடைத்திருந்தது. ஆனால், யாரும் அதைப்பற்றி விவாதிக்கக் கேட்கவில்லை. குறைந்தபட்சம் ஜே.வி.பி. அப்படியொரு கோரிக்கையை முன்வைக்கவில்லை. பலர் அந்த அறிக்கையை ஏற்கவில்லை.

எனவே, பாராளுமன்றத்தில் அதைப்பற்றி விவாதிக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதுவரை ஆட்சிக்கு வந்த எந்த அரசியல் கட்சியும் இந்த அறிக்கையின்மூலம் குறுகிய அரசியல் ஆதாயங்களைப் பெற முயன்றதில்லை என்பதையும் கவனத்திற்கொள்ள வேண்டும். மேலும், 25ஆண்டுகளுக்குப் பின்னர் பாராளுமன்றத்தில் ஆணைக்குழு அறிக்கையை விவாதிக்கும் பாரம்பரியம் இந்த நாட்டிலோ அல்லது பிற பாராளுமன்றங்களிலோ இல்லை'' - இவ்வாறு அந்த அறிக்கையில் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

## பட்டலந்த விசாரணை...

உண்ணாட்டரசிறை (திருத்த) சட்டமூலம் தொடர்பான இரண்டாவது மதிப்பீட்டு விவாதத்தை மார்ச் 20ஆம் திகதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் குழுநிலை விவாதத்தின் பின்னர் பி.ப. 06 மணிமுதல் 08 மணிவரை நடத்துவதற்கு சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் சனிக்கிழமை(15) கூடிய பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

அத்துடன், பாராளுமன்றத்தை ஏப்ரல் 08, 09 மற்றும் 10ஆம் திகதிகளில் கூட்டுவதற்கும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.

இதற்கமைய, ஏப்ரல் 08ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணிமுதல் 10.00 மணிவரையில் நிலையியற் கட்டளை 22இல் குறிப்பிடப்பட்டுள்ள 01 முதல் 06 வரையான பாராளுமன்ற அலுவல்களுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. மு.ப. 10.00 மணிமுதல் மு.ப. 11.00 மணிவரையான நேரம் வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காகவும் மு.ப. 11.00 மணிமுதல் 11.30 மணிவரையான நேரம் நிலையியற் கட்டளை 27(2) கீழான கேள்விகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து மு.ப. 11.30 மணிமுதல் பி.ப. 5.30 மணிவரையான காலப்பகுதி குற்றச் செயல்களின் வருமப்படிகள் சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீட்டுக்கான விவாதத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் 09ஆம் திகதி புதன்கிழமை 10.00 மணிவரையில் நிலையியற் கட்டளை 22இல் குறிப்பிடப்பட்டுள்ள 01 முதல் 06 வரையான பாராளுமன்ற அலுவல்களுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. மு.ப. 10.00 மணிமுதல் மு.ப. 10.30 மணிவரையான காலப்பகுதி பிரதமரிடம் கேட்கப்படும் கேள்விகளுக்காக ஒதுக்கப்பட்டிருப்பதுடன், மு.ப. 10.30 மணிமுதல் மு.ப. 11.00 மணிவரையான காலப்பகுதி வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காகவும் மு.ப. 11.00 மணிமுதல் 11.30 மணிவரையான நேரம் நிலையியற் கட்டளை 27(2) கீழான கேள்விகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.


இதனைத் தொடர்ந்து மு.ப. 11.30 மணிமுதல் பி.ப. 5.00 மணிவரையான காலப்பகுதி பெறுமதி சேர் வரி (திருத்த) சட்டமூலம் மீதான இரண்டாவது மதிப்பீட்டுக்கான விவாதத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அன்றையதினம் பி.ப. 5.00மணிமுதல் பி.ப. 5.30 மணிவரையான காலப்பகுதி எதிர்க்கட்சியினால் கொண்டுவரப்படும் சபை ஒத்திவைப்புவேளையின்போதான பிரேரணைக்கான விவாதத்துக்காக நேரத்தை ஒதுக்குவதற்கு இங்கு தீர்மானிக்கப்பட்டது.

ஏப்ரல் 10ஆம் திகதி வியாழக்கிழமை, நிலையியற் கட்டளை 22இல் குறிப்பிடப்பட்டுள்ள 01 முதல் 06 வரையான பாராளுமன்ற அலுவல்களுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. மு.ப. 10.00 மணிமுதல் மு.ப. 11.00 மணிவரையான நேரம் வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காகவும் மு.ப. 11.00 மணிமுதல் மு.ப. 11.30 மணிவரையான நேரம் நிலையியற் கட்டளை 27(2) கீழான கேள்விகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து மு.ப. 11.30 மணிமுதல் பி.ப. 5.30 மணிவரையில், கடந்த 14ஆம் திகதி சபையில் சமர்ப்பிக்கப்பட்ட 'பட்டலந்த வீட்டுத் தொகுதியில் சட்டவிரோத தடுப்பு முகாம் மற்றும் சித்திரவதை முகாம் அமைத்து அவற்றை நடத்திச் சென்றமை தொடர்பான விசாரணை ஆணைக் குழுவின் அறிக்கை' குறித்த விவாதத்தை நடத்துவதற்கும் இதற்கான இரண்டு நாள் விவாதத்தில் பிறிதொரு நாளை மே மாதத்தில் ஒதுக்குவதற்கும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.

# பலுசிஸ்தான் இந்தியாவுடன் சேர விரும்பியபோது நேரு நிராகரித்தாரா? பாகிஸ்தான் என்ன செய்தது.

## ஒரு வரலாற்றுப் பார்வை



இந்தியாவின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேருவுடன் வி.கே.மேனன்

இந்தியாவின் பிரிவினைக்குப் பிறகு கலாத் பிராந்தியம் அதாவது, பலுசிஸ்தான் சுமார் 227 நாட்களுக்கு ஒரு சுதந்திர, இறையாண்மை பெற்ற நாடாக இருந்தது.

பலுசிஸ்தான் பாகிஸ்தானுடன் சேர விரும்பவில்லை. பாகிஸ்தானின் நிறுவுனர் முகமது அலி ஜின்னாவும் இத்துடன் ஒத்துப் போயிருந்தார். ஆனால், ஆங்கிலேயர்கள் சென்ற பிறகு இந்தியாவிலும் சரி, பாகிஸ்தானிலும் சரி சமஸ்தானங்கள் சுதந்திர நாடுகளாக இருக்க முடியவில்லை.

ஈரானிய பீடபூமியின் கிழக்கு ஓரத்தில் அமைந்துள்ள பலுசிஸ்தானின் பெரும்பகுதி கடும் குளிர் நிறைந்த பாலைவனம். பலுசிஸ்தான் தற்போது மூன்று நாடுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணம், ஈரானின் சிஸ்டன் பலுசிஸ்தான் மாகாணம் மற்றும் ஆப்கானிஸ்தானில் உள்ள ஒரு சிறு பகுதி இதில் அடக்கம்.

ஆப்கானிஸ்தானில் உள்ள நிம்ரூஸ், ஹெல்மண்ட் மற்றும் கந்தஹார் ஆகியவை பலுசிஸ்தானின் ஓர் அங்கமாக இருந்தவை. பலுச்கள் சுனி முஸ்லிம்களாக உள்ளனர். ஷியா முஸ்லிம்கள் ஆதிக்கமுள்ள ஈரானின் பலுசிஸ்தானிலும் பலுச்கள் சுனி முஸ்லிம்களாக உள்ளனர்.

பாகிஸ்தான் உருவானது முதலே, பலுசிஸ்தானில் கலகக் குரல்கள் எழுந்துகொண்டேதான் இருந்திருக்கின்றன. ஆனால், பலுசிஸ்தானில் சீனா நுழைந்ததிலிருந்து நிலைமை மேலும் சிக்கலாக மாறியுள்ளது. பலுசிஸ்தானின் குவாதர் துறைமுகத்தை பாகிஸ்தான் சீனாவிடம் கொடுத்திருக்கிறது. உள்ளூர் பலுச்கள் இதற்கு எதிராகப் போராடி வந்திருக்கின்றனர்.

**பாகிஸ்தான்: ஜாஃபர் எக்ஸ்பிரஸ் ரயில் கடத்தலில் சிக்கி மீண்ட பயணிகளின் திகில் அனுபவம்**

பங்களாதேஷ் இராணுவத்தில் பாகிஸ்தான் ஆதரவுக் குழு அதிகாரத்தைக் கைப்பற்ற முயற்சியா?

**பலூச் விடுதலை இராணுவம்:** பாகிஸ்தானில் பயணிகளுடன் ரயிலைக் கடத்தி மிரட்டும் இவர்கள் யார்?

பாகிஸ்தான் ஆட்சியாளரை அகற்ற போராடி இந்தியா வந்த ஷேக் முஜிபுர் ரஹ்மான் - நேரு கூறியது என்ன?

கிழக்கு முதல் மேற்கு வரை பலுசிஸ்தான் எப்போதுமே பெர்சிய மற்றும் இந்திய பேரரசுகளுக்கிடையில் இருந்திருக்கிறது.

பலுசிஸ்தானின் வடக்குப் பகுதி அண்டை நாடான ஆப்கானிஸ்தானும் இந்த பேரரசுகளின் யுத்தங்களின் தாக்கத்தை உணர்ந்திருக்கிறது. ஆனால், அவர்களுக்கு இருப்பதைப் போன்று பலுச்களைப் பாதுகாக்க மலைகள் இல்லை.

கலாத் சமஸ்தானம் பலரால் பாகிஸ்தானின் ஹைதராபாத்தாக அழைக்கப்பட்டது. கலாத் பாகிஸ்தானுடன் சேர மறுத்த சுதந்திர சமஸ்தானம். ஹைதராபாத்தும் இந்தியாவுடன் சேர மறுத்தது.

**தனி பலுசிஸ்தானை ஆதரித்த ஜின்னா**



பாகிஸ்தான் நிறுவுனர் முகமது அலி ஜின்னா

கலாத்தும் ஹைதராபாத்தும் ஆங்கிலேயர் ஆட்சி 15 ஓகஸ்ட் 1947இல் முடிவடைந்த பின்னரும் சுதந்திரமும் இறையாண்மையும் உள்ள நாடுகளாகத் தொடரலாமென சட்ட ஆலோசனை வழங்கியவர் முகமது அலி ஜின்னா. இந்த இரண்டு சமஸ்தானங்களுடனும் எந்த உடன்பாடும் எட்டப் படவில்லை.

இராணுவ நடவடிக்கைக்குப் பின்னர் ஹைதராபாத் இறுதியாக 1948ஆம் ஆண்டு செப்டெம்பர் 13ஆம் திகதி இந்தியாவுடன் இணைந்தது.

பலுச் தேசியம் மற்றும் அதன் வரலாறு குறித்து ஜெர்மனிய அரசியல் அறிஞர் மார்டின் ஏக்ஸ்மேன் ஒரு முக்கிய புத்தகத்தை எழுதியுள்ளார். அந்தப் புத்தகம் – 'பேக் டூ தி ஃப்யூச்சர்: தி கானேட் ஆஃவ் கலாத் அண்டு தி ஜெனசிஸ் ஆஃவ் பலுச் நேஷனலிசம் 1915-1955'.

கலாத் குறித்து ஜின்னாவின் ஆலோசனையைக் கேட்டு ஆங்கிலேய ஆட்சியாளர்கள் ஆச்சரியமடைந்ததாக மார்டின் தனது புத்தகத்தில் எழுதியுள்ளார்.

"கலாத் ஹைதராபாத்தை போன்றது அல்ல. 1948 மார்ச் 20ஆம் திகதி கலாத்தின் கான், பாகிஸ்தானுடன் இணைய ஒப்புக்கொண்டார். இந்தியா மற்றும் ஆப்கானிஸ்தான் ஏமாற்றமளித்த பின்னரே அவர் அவ்விதம் செய்தார். சுதந்திர நாடாகத் தொடர கலாத்தின் மன்னர் இந்தியா மற்றும் ஆப்கானிஸ்தானின் உதவியை எதிர்பார்த்தார்."

பாகிஸ்தானைச் சேர்ந்த வரலாற்றாசிரியர் யாகூப் கான், 'பங்காஷ் எ பிரின்ஸ்லி அஃபேர்' என்ற தனது புத்தகத்தில், "கலாத் பாகிஸ்தானுடன் சேர்வதற்கு முன்பே ஒரு ஜனநாயக தேசியவாத இயக்கம் இங்கே செயற்பட்டுக்கொண்டிருந்தது. 1945இல் ஜவஹர்லால் நேரு அகில இந்திய மாநில மக்களின் மாநாட்டுக்கு தலைமை தாங்கிய போது, கலாத் மாகாண தேசிய கட்சியும் (கே.எஸ்.என்.பி.) அதில் பங்கேற்றது. மறுபுறம், முஸ்லிம் லீக்கிற்கு பலுசிஸ்தானில் எப்போதும் ஆதரவு கிடைக்கவில்லை"- என எழுதியுள்ளார்.

**கலாத் மாகாணம் கேட்டது என்ன?**



குவாதரில் சீனாவின் திட்டங்களால் பலுசிஸ்தான் மக்கள் மிகவும் கோபமடைந்துள்ளனர்

"கலாத்தின் கானும், கே.எஸ்.என்.பியும் ஜனநாயக கொள்கை கொண்டவர்கள். தேசியவாதத்தைப் பின்பற்றியவர்கள் என்ற முறையில் முஸ்லிம் லீக் தலைமையிலான பாகிஸ்தானுடன் இணைய கே.எஸ்.என்.பி. விரும்பவில்லை. இந்தியாவுடன் நெருக்கத்தை அதிகரிக்கவோ, கலாத்தின் கானுடன் சேர்ந்து சுதந்திர நாட்டை உருவாக்கவோ கே.எஸ்.என்.பி. விரும்பியது" - என யாக்கூப் கான் பங்காஷ் எழுதியுள்ளார்.

"கலாத்தின் கான் ஜனநாயக இயக்கத்தை ஆதரித்து, அதனடிப்படையில் இரு அவைகள் கொண்ட பாராளுமன்ற அமைப்பு இங்கு உருவாக்கப்பட்டது. பலுச்கள் இஸ்லாமியர்கள் என்ற ஒரே காரணத்துக்காக அவர்கள் பாகிஸ்தானுடன் இணையக்கூடாதென கலாத்தின் பாராளுமன்றம் நம்பியது. ஆனால், இந்த எதிர்ப்பு பாகிஸ்தான் அரசால் நசுக்கப்பட்டு கலாத் கட்டாயப்படுத்தி இணைக்கப்பட்டது."

அரசு அவற்றின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாது என்ற நிபந்தனையுடன்தான் பிரிட்டிஷ் இந்தியாவின் சமஸ்தானங்கள் பாகிஸ்தானுடன் இணைக்கப்பட்டன என நன்கு அறியப்பட்ட பாகிஸ்தான் வரலாற்றாசிரியர் முபாரக் அலி சொல்கிறார்.

முபாரக் அலியின் கூற்றுப்படி, "இந்த சமஸ்தானங்களின் சுயாட்சி படிப்படியாக முழுமையாக அழிக்கப்பட்டது. இதனால் பல மாநிலங்களின் அடிப்படை அடையாளம் முடியத் தொடங்கியது. அந்த சமஸ்தானங்களில் பலுசிஸ்தானும் ஒன்று. பலுசிஸ்தான் பாகிஸ்தானுடன் இணைவதற்கு துளியும் ஆதரவாக இருக்கவில்லை. பாகிஸ்தான் கட்டாயப்படுத்தி அதை இணைத்தது. கலாத்தின் கான் ஒரு சுதந்திர கலாத் வேண்டுமென விரும்பினார். ஆனால், பாகிஸ்தான் அதை விரும்பவில்லை. சிறிய சமஸ்தானங்கள், சுதந்திர நாடுகளாக நீடிப்பது அவ்வளவு எளிதாக இருக்கவில்லை''

முதலில் சுதந்திரமான இறையாண்மையுள்ள கலாத்துக்கு ஆதரவாக இருந்த ஜின்னா தனது மனதை மாற்றிக்கொண்டது ஏன் என முபாரக் அலியிடம் கேட்கப்பட்டது.

"அரசியலில் ஒன்றேதான் என எதுவும் இல்லை. காலம் செல்லச்செல்ல அவை மாறுகின்றன. எனவே, தலைவர்களின் கூற்றுகளை வைத்து ஒருவர் முடிவு செய்யக்கூடாது. பாகிஸ்தான் உருவாக்கப்பட்ட போது, பலுசிஸ்தான் குறித்த ஜின்னாவின் பார்வை முற்றிலும் வேறாக இருந்தது. ஜின்னா கலாத் மாகாணத்தைக் கட்டாயப்படுத்தி பாகிஸ்தானுடன் இணைத்தார்"

"பலுசிஸ்தான் புவியியல் ரீதியாக பாகிஸ்தானுடன் இணைக்கப்பட்டாலும் மக்களின் இதயம் இன்னமும் அதில் இணையவில்லை. சிறு சமஸ்தானங்களுக்கு தனியாக அந்தஸ்து ஏதும் இருக்கவில்லை. ஜுனாகாத்தின் நவாப் பாகிஸ்தானுடன் இணைய விரும்பினார். ஆனால், ஜுனாகாத் அமைந்துள்ள பகுதியிலிருந்து பாகிஸ்தானுடன் தொடர்ந்து இணைந்திருப்பது எளிதாக இருக்கவில்லை. அதேபோல் கலாத் இருக்கும் இடத்தில் இருந்துகொண்டு இந்தியாவுடன் இணைந்திருப்பது சாத்தியமில்லாதது" - என்றார் முபாரக் அலி.

**ஜின்னா தனது மனதை மாற்றிக்கொண்டது ஏன்?**



சில நாட்களில் பலுசிஸ்தானில் பாகிஸ்தானுக்கு எதிராக பல பெரிய போராட்டங்கள் நடைபெற்றுள்ளன

இதே கேள்வியை பாகிஸ்தானுக்கான முன்னாள் இந்திய தூதுவரும் வரலாற்றாசிரியருமான டி.சி.ஏ.ராகவனிடம் கேட்டபோது, "ஜின்னா மனதில் என்ன இருந்ததென்பது குறித்து ஏதும் சொல்வதும் கடினம். ஆனால், கலாத் சுதந்திரமாக இருக்க ஜின்னா ஆதரவளித்தார் என்பது முற்றிலும் உண்மை. பக்டி நவாப் மற்றும் கலாத்தின் கானுடன் 1947இல் ஜின்னா கொண்டிருந்த உறவு 1947க்கு பிறகு மிகவும் மாறியது. அவரது மனம் பின்னர் மாறியிருக்கிறது என்பது தெளிவாகத் தெரிகிறது. அதனால்தான் பலுசிஸ்தான் பாகிஸ்தானுடன் கட்டாயப்படுத்தி இணைக்கப்பட்டது"- என கூறினார்.

பலுசிஸ்தானில் ஏதேனும் நடைபெறும் போதெல்லாம், கலாத் சமஸ்தானம் இந்தியாவுடன் இணைய விரும்பியதாகவும் ஆனால், நேரு அதை ஏற்றுக்கொள்ளவில்லை யென்றும் இந்திய ஊடகங்களில் ஒரு பிரிவு சொல்ல ஆரம்பிக்கும்.


இதே கேள்வியை டி.சி.ஏ. ராகவனிடம் கேட்டபோது, "இவையெல்லாம் வட்ஸ்அப் வரலாறுகள். அந்தக் காலகட்டத்தில் அதிகம் மதிக்கப்பட்ட தலைவர் நேரு, கலாத்தின் கானுக்கும் அவர் மீது மரியாதை இருந்தது. கலாத்தின் கான் தனது அரசின் அந்தஸ்து மற்றவற்றிலிருந்து முற்றிலும் வேறாக இருக்க வேண்டுமென விரும்பினார். ஆங்கில பேரரசின் கீழ் கலாத்தின் அந்தஸ்து மற்ற சமஸ்தானங்களிலிருந்து வேறுபட்டிருந்தது" - என்றார்.

டி.சி.ஏ. ராகவனின் கூற்றுப்படி, "கலாத் சமஸ்தானம் இந்தியாவுடன் இணைய விரும்பியதற்கு வரலாற்று ஆதாரம் ஏதும் இல்லை. உண்மை என்னவென்றால், கலாத்தின் கான் தனக்கு தனி அந்தஸ்து வேண்டுமென விரும்பினார். அதற்காக அவர் ஈரான், ஆங்கிலேய பேரரசு, பாகிஸ்தான் மற்றும் இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். கலாத்துக்கு ஒரு தனி பிரிவை உருவாக்குவதுதான் அவரது நோக்கமாக இருந்தது. கலாத் தன்னை ஒரு பகவல்பூராக (பாகிஸ்தானின் ஒரு பகுதி) பார்க்கவில்லை. நாம் அந்தச் சூழ்நிலையைப் புரிந்து கொண்டிருக்க வேண்டும். அதனால் எதுவும் சொல்லாமல் இருந்திருக்கவேண்டும்" கலாத் சமஸ்தானம் எப்போதும் இந்தியாவுடன் இணைய முன்வரவில்லை என்று முபாரக் அலியும் கூறுகிறார்.

"கலாத் சமஸ்தானம் சுதந்திரமான இறையாண்மையுள்ள நாடாக வேண்டுமென விரும்பியது. கலாத் சுதந்திரமாகத் தொடர நேருவின் உதவி அவர்களுக்கு தேவைப்பட்டது. ஆனால், கலாத்தின் கான் தான் இந்தியாவுடன் இணைய விரும்புவதாக எப்போதும் சொல்லவில்லை.

நேரு ஒரு பெரிய தலைவர். எனவே, கலாத்தின் கான் அவர் மீது மரியாதை வைத்திருந்தார். ஆனால், கலாத்தை இந்தியாவுடன் இணைக்கும் திட்டத்தை நேரு நிராகரித்தார் எனக் கூறுவது முற்றிலும் தவறானது." என்கிறார் முபாரக் அலி.

**முஸ்லிமாக இருப்பது மட்டும் போதாது**



பாகிஸ்தான் உருவாக்கப்பட்ட பின்னர், பலுசிஸ்தான் குறித்த ஜின்னாவின் பார்வை முற்றிலுமாக மாறியது

ஆனால், பாகிஸ்தானுடன் இணையாதது குறித்து பலுசிஸ்தானுக்குள் சூடான விவாதங்கள் இருந்தன.

"1947இல் மிர் காஸ் பக்ஸ் பிஜென்ஜோ, கலாத் மாகாண தேசிய கட்சியின் உறுப்பினராக இருந்தார். ஈரான் மற்றும் ஆப்கானிஸ்தானைப் போல் நமது பண்பாடு வேறுபட்டது. நாம் முஸ்லிம்கள் என்பதால் பாகிஸ்தானுடன் இணையவேண்டுமென்றால் ஈரானும் ஆப்கானிஸ்தானும் பாகிஸ்தானுடன் சேரவேண்டுமென 1947ஆம் ஆண்டு டிசம்பரில் திவான்- இ -சபையில் பிஜென்ஜோ கூறினார்" - என பலுச் நேஷனலிசம் இட்ஸ் ஆரிஜின் அண்டு டெவலப்மெண்ட் அப் டு 1980, என்ற புத்தகத்தில் தாஜ் மொகமது ப்ரெசிக் எழுதியுள்ளார்.

"அணு ஆயுதங்களின் காலத்தில் நம்மால் நம்மைப் பாதுகாத்துக்கொள்ளமுடியாது என நம்மிடம் சொல்கிறார்கள். ஆனால், எனது கேள்வி, ஆப்கானிஸ்தான், ஈரான் அல்லது பாகிஸ்தானே கூட வல்லரசுகளிடமிருந்து தங்களைக் காத்துக் கொள்ளமுடியுமா? நாம் நம்மையே பாதுகாத்துக் கொள்ளமுடியாவிட்டால் மற்றும் பல நாடுகளும் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளமுடியாது"

பலுசிஸ்தான் தலைவரும் வரலாற்றாசிரியருமான குல் கான் நசீர் தனது முக்கியத்துவம் வாய்ந்த தரிக்-இ-பலுசிஸ்தான் என்ற புத்தகத்தில் 1948ஆம் ஆண்டு மார்ச் 27ஆம் திகதி, வி.கே. மேனனின் செய்தியாளர் சந்திப்பு பற்றிய செய்தியை அகில இந்திய வானொலி ஒலிபரப்பியதாக எழுதியுள்ளார்.

கலாத்தின் கான் இரண்டு மாதங்களுக்கு முன் புதுடில்லியைத் தொடர்புகொண்டு பலுசிஸ்தானை இந்தியாவுடன் இணைத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொண்டதாகவும் ஆனால், அந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதாகவும் மேனன் தெரிவித்ததாக அகில இந்திய வானொலி குறிப்பிட்டது.

கலாத்தின் கடைசி கான், அகமது யார் கானை மேற்கோள் காட்டி குல் கான் நசீர் தனது புத்தகத்தில், "இது முற்றிலும் பொய். கலாத் மற்றும் பாகிஸ்தானிடையே பகைமை ஏற்படுத்துவதுதான் அதன் நோக்கம். இந்தப் போலிச் செய்தி மூலம் பாகிஸ்தானியர்கள் கோபம் கொண்டு, பொறுமையின்றி இந்தியாவுக்கு ஹைதராபாத்தில் ஒரு வாய்ப்பைத் தரும்படி ஏதாவது செய்வார்கள் என்பதுதான் இரண்டாவது நோக்கம். ஆனால், கலாத்தின் கான் மற்றும் இந்தியாவின் பெயர்கள் ஒன்றாகப் பேசப்பட்டமை இது முதல் முறையல்ல. கலாத்தின் கான் அகமது யார் கான் மற்றும் பாகிஸ்தானிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது, பாகிஸ்தானுடன் பேரம் பேசுவதற்கு இந்தியாவுடன் சேரும் வாய்ப்பை வைத்திருந்தது ஓர் உத்தியாக இருந்தது" - எனக் குறிப்பிட்டுள்ளார்.

கலாத் சமஸ்தானம் பாகிஸ்தானுடன் இணைந்து சுமார் ஆறு மாதங்களுக்குப் பின்னர் இந்தியா ஹைதராபாத்தை இணைத்தது.

அகமது யார் கான் குறித்து பாகிஸ்தானுக்கான பிரிட்டன் தூதுவர் (1947) லோரன்ஸ் கிராஃப்டி ஸ்மித் பின்வருமாறு கூறுகிறார், "கலாத் இந்தியாவுடனோ ஆப்கானிஸ்தானுடனோ இணையும் வதந்திகளை மறுப்பது, இந்த வதந்திகளை கலாத்தின் கான் பாகிஸ்தானுடன் பேரம் பேசுவதற்குப் பயன்படுத்திக் கொண்டார் என்பதைத்தான் காட்டுகிறது. அகமது யார் கான் இந்தியா மற்றும் ஆப்கானிஸ்தானுடன் எந்த உண்மையான நோக்கமும் இல்லாமல் வெறுமனே பேசிக்கொண்டிருந்தார் என நம்புவதற்கு போதிய காரணங்கள் உள்ளன"

இதைத் தவிர, 1947 ஓகஸ்ட் 14ஆம் திகதி கவர்னர் ஜெனரல் இந்திய சுதந்திர சட்டம், 1947இன் கீழ் ஓர் உத்தரவைப் பிறப்பித்தார். அதன்படி இந்தியா கலாத்தின் அந்தஸ்து குறித்து கேள்வி கேட்க முடியாது. ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் எல்லையைப் பிரிக்கும் துரண்ட் கோடு பற்றியும் மெக்மோகன் கோடு பற்றியும் பாகிஸ்தான் கேள்வியெழுப்ப முடியாது"

**ஜின்னாவுக்கு பிறகு ஏற்பட்ட மாற்றங்கள்**



பாதுகாப்பு மற்றும் இராணுவம் என்ற கண்ணோட்டத்துடன் மட்டும் பலுசிஸ்தானை பாகிஸ்தான் பார்த்துக்கொண்டிருந்தால் தீர்வு கிடைக்காது என்கிறார் டி.சி.ஏ. ராகவன்

பாதுகாப்பு மற்றும் இராணுவம் என்ற கண்ணோட்டத்துடன் மட்டும் பலுசிஸ்தானை பாகிஸ்தான் பார்த்துக்கொண்டிருந்தால் தீர்வு கிடைக்காது என்கிறார் டி.சி.ஏ. ராகவன்.

பாகிஸ்தானுக்கு ஒரு மத அடையாளம் மட்டுமல்ல, முழுமைக்கும் ஒரே குடியுரிமை வேண்டுமென ஜின்னா விரும்பினார். 1947ஆம் ஆண்டு ஓகஸ்ட் 11ஆம் திகதி தனது புகழ்பெற்ற உரையில், "நீங்கள் உங்கள் கோவிலுக்கும் மசூதிக்கும் செல்ல சுதந்திரம் உள்ளது. பாகிஸ்தானுக்குள் எந்த வழிபாட்டு தலத்துக்கும் செல்ல உங்களுக்கு சுதந்திரம் உள்ளது. மதம், சாதி, இனம் அடிப்படையில் அரசு யாருக்கும் பாரபட்சம் காட்டாது" - எனக் கூறினார்.

ஆனால், ஜின்னாவின் மரணத்துக்குப் பின்னர், பாகிஸ்தானில் அனைத்தும் வேகமாக மாறத்தொடங்கின. பாகிஸ்தான் தனது முதல் அரசமைப்பை 1956இல் அமுல்படுத்தியது. அதன் பின்னர், பாகிஸ்தானுடன் இணைந்த சமஸ்தானங்களில் இராணுவம் மற்றும் அதிகாரிகளின் கட்டுப்பாடு அதிகரித்தது.

சமஸ்தானங்கள் புவியியல் ரீதியாக பாகிஸ்தானுடன் இணைந்தன. ஆனால், சமூக ஒருங்கிணைப்பு ஏற்படவில்லையென யாகூப் கான் பங்கேஷ் எழுதியிருந்தார். கலாத்தில் அரசியல் நடவடிக்கைகளுக்கு அதிக இடமிருக்கவில்லை. இதுபோன்ற சூழ்நிலையில் பலுச் கிளர்ச்சியாளர்கள் பாகிஸ்தானுக்கு எதிராகத் திரும்பினர்.

"பாகிஸ்தான் கலாத்தின் தேசிய இறையாண்மையை மட்டுமே பெற்றிருந்தது. ஆனால், தேசிய அடையாளத்தை உருவாக்கமுடியவில்லை. நாட்டுக்கும் சமூகத்துக்கும் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியவில்லை. இந்த விஷயங்கள் இன்று வரை பாகிஸ்தானுக்கு பிரச்சினையாக இருக்கின்றன" - என பங்கேஷ் எழுதியுள்ளார்.

பாதுகாப்பு மற்றும் இராணுவம் என்ற கண்ணோட்டத்துடன் மட்டும் பலுசிஸ்தானை பாகிஸ்தான் பார்த்துக்கொண்டிருந்தால் தீர்வு கிடைக்காது - என்கிறார் டி.சி.ஏ. ராகவன்.

"1947க்கு முந்தைய நிலைக்கும் இன்றைய நிலைக்கும் நிறைய வேறுபாடுகள் இருக்கின்றன. பாகிஸ்தானில் இதுபோன்ற அனைத்து அரசியல் விடயங்களும் பாதுகாப்பு கோணத்திலிருந்தே பார்க்கப்படுகின்றன. ஆனால், பலுசிஸ்தானுக்கான தீர்வு அதில் இல்லை. பலுசிஸ்தான் மக்களின் கோபத்தை பாகிஸ்தான் புரிந்துகொள்ளவேண்டும்" - என்று கூறுகிறார். டி.சி.ஏ. ராகவன்.

***- இது, பி.பி.சிக்காக கலெக்டிவ் நியூஸ்ரூம் வெளியீடு***

தமிழன் THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2025 மார்ச் 17ஆம் திகதி, திங்கட்கிழமை

# கனேடிய அமைச்சர் கரிக்கு வாழ்த்துகள்

கனடா நாட்டின் நீதி அமைச்சராகவும் சட்ட மா அதிபராகவும் பூர்வீகக் குடிகள் விவகாரங்களுக்கான அமைச்சராகவும் கரி ஆனந்தசங்கரி பதவியேற்றிருக்கும் விடயம் எமது கவனத்தை ஈர்த்திருக்கிறது.

1973ஆம் ஆண்டு பிறந்த கரி ஆனந்தசங்கரி, இலங்கையில் நிலவிய உள்நாட்டு யுத்த சூழ்நிலையை அடுத்து, தனது 13ஆவது வயதில் புலம்பெயர்ந்து கனடா சென்றார்.

சிறுவயது முதலே எமது மண்ணின் பல்வேறு வலிகளைச் சுமந்து, யாழ்ப்பாண மண்வாசனையில் வளர்ந்து, 1983 கறுப்பு ஜூலை கலவரத்தின் உச்ச வலிகளை நேரடியாக எதிர்கொண்ட வண்ணம் கனேடிய தேசத்தை அரவணைத்துக் கொண்ட ஓர் ஆளுமை இன்று அந்த தேச மண்ணில் வேர் பரப்பி, ஆலமரமாக வளர்ந்து, தேசத்தின் நீதி மற்றும் சட்டத்துறையின் உச்ச நிலையை அலங்கரிக்க முடிந்திருப்பது ஈழத் தமிழர்கள் ஒவ்வொருவருக்கும் பெருமையும் மட்டில்லா மகிழ்ச்சியும் தருவதாகும்.

ஸ்கார்பரோ ரூஜ் பார்க் தொகுதியில் மூன்று முறையும் அதிக வாக்குகளைப் பெற்று கனேடிய பாராளுமன்றத்துக்கு பிரவேசித்த கரி ஆனந்தசங்கரி, ஜூன் 2023ஆம் ஆண்டு முதல், அரச பழங்குடி உறவுகள் அமைச்சராகப் பணியாற்றியதுடன், 2024ஆம் ஆண்டு இறுதியில் இடம்பெற்ற அமைச்சரவை மறுசீரமைப்பின் போது மற்றும் வடக்கு விவகாரங்களுக்கான அமைச்சுப் பதவியும் மேலதிகமாக வழங்கப்பட்டது. இந்த இரு அமைச்சுகளிலும் மிகவும் குறுகிய காலப்பகுதியில் பல்வேறு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த உடன்படிக்கைகளையும் செயற்பாடுகளையும் அமைச்சர் ஆனந்தசங்கரி முன்னெடுத்திருந்தார்.

அமைச்சர் ஆனந்தசங்கரி சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமைகள் சட்டத்தரணியாகவும் சமூக ஆர்வலராகவும் உள்ளார்.

இலங்கை அரசாங்கத்தின் தமிழினப்படுகொலையை அங்கீகரிக்கும் வகையில், மே 18ஆம் திகதியை தமிழினப்படுகொலை நாளாக கனேடிய அரசாங்கம் பிரகடனம் செய்தமை, ஜனவரி மாதத்தை தமிழ் மரபுத் திங்கள் மாதமாக பிரகடனம் செய்தமை மற்றும் யுத்தக் குற்றங்களைப் புரிந்த இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் இராணுவப் பிரதிநிதிகளுக்கு எதிராக தடையை அமுல்படுத்தியமை என அமைச்சர் ஆனந்தசங்கரியின் செயற்பாடுகள் குறிப்பிடத்தக்கவையாக உள்ளன.

அவர் கனேடிய தமிழ் இளைஞர் மேம்பாட்டு மையத்தின் தலைவராகவும் கனேடிய தமிழர் வர்த்தக சபையின் தலைவராகவும் கனேடிய தமிழ் காங்கிரஸின் ஆலோசகராகவும் பணியாற்றியுள்ளார்.

அவர் இளைஞர் சவால் நிதியத்தின் சபை உறுப்பினராகவும் டொராண்டோ பொலிஸ்துறைத் தலைவரின் ஆலோசனைக் குழுவின் உறுப்பினராகவும் யுனைடெட் வே நியூகமர்ஸ் கிராண்ட் திட்டத்தின் உறுப்பினராகவும் இருந்தார்.

அமைச்சர் ஆனந்தசங்கரி ஒன்ராறியோவின் ஸ்கார்பரோவில் வணிகம், ரியல் எஸ்டேட் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தில் நிபுணத்துவம் பெற்று தனது சொந்த சட்ட நிறுவனத்தை நிர்வகித்தார்.

மனித உரிமைகளுக்கான தீவிர ஆதரவு நாடுபவராகவும் அவர் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் கனடாவை தொடர்ந்து பிரதிநிதித்துவப்படுத்தினார்.

தவறான மாணவர் வெளியேற்றம் மற்றும் இடைநீக்கம் செய்யப்பட்ட வழக்குகளில் தலையிட்டு, இளைஞர்களுக்கான வலுவான சட்டத்தரணியாகவும் அவர் பணியாற்றினார்.

கார்ல்டன் பல்கலைக்கழகம் மற்றும் ஒஸ்கூட் ஹால் சட்டக் கல்லூரியில் சட்டத்துறையில் பட்டங்களை அவர் பெற்றுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் பிறந்து, தனது சிறுவயதை இந்த மண்ணிலேயே கழித்த நமது இனத்தின் தோன்றலாகிய கரி ஆனந்தசங்கரிக்கு வழங்கப்பட்டுள்ள இந்த கௌரவம் அவருக்குரியதானது மட்டுமல்ல, இலங்கையின் ஒட்டு மொத்தத் தமிழ்த் தேசிய இனத்துக்கும் சர்வதேச ரீதியில் வழங்கப்பட்ட ஒரு கௌரவமும் அங்கீகாரமும் கூட.

ராஜபக்ஷக்களின் காலத்தில் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தைப் பயங்கரவாதமாகச் சித்திரித்த போக்குக்கு மத்தியில், ஈழத் தமிழர்களுக்காக கனடா போன்ற நாடுகளில் இருந்து குரல் எழுப்பிய தமிழ்த் தேசிய சமூகத்தினரை பயங்கரவாதிகளாக வர்த்தமானியில் பட்டியலிட்டு அறிவிக்கும் கீழ்த்தரமான நடத்தையை ஸ்ரீ லங்கா அரசு வெளிப்படுத்தியது.

அத்தகைய ஈழத் தமிழர்களின் கனடா சமுதாயத்திலிருந்து முகிழ்ந்த ஒருவருக்கு அந்த நாடு இன்று நீதி அமைச்சர் மற்றும் சட்ட மா அதிபர் பதவிகளை வழங்கியதன் மூலம் கொழும்பின் பௌத்த - சிங்கள பேரினவாத சிந்தனைப் போக்குக்கு சம்மட்டியடி கொடுத்திருக்கின்றது என்றால் அது மிகையல்ல.

கனேடிய நாட்டையும் அந்த மக்களையும் ஈழத் தேசிய எழுச்சியில் கரிசனை கொண்ட மக்கள் கௌரவத்தோடும் மரியாதையோடும் போற்ற வேண்டிய ஒரு நடவடிக்கையாக இது அமைகிறது.

பயங்கரவாதிகளாகக் கொழும்பினால் அடையாளப்படுத்தப்பட்ட ஒரு சமுதாயத்தின் பிரதிநிதி மேற்குலகில் உயர்ந்த ஒரு தேசத்தின் சட்ட மா அதிபராகவும் நீதி அமைச்சராகவும் நியமனம் பெற்றமை - அதுவும் ஈழத் தமிழ்த் தேச மக்களின் விடுதலைக்கும் வாழ்வுக்குமாக அயராது குரல் எழுப்பும் அந்த மக்கள் கூட்டத்திலிருந்து வந்த ஒருவருக்கு நாட்டின் நீதித்துறை முடிவுகளை எடுக்கும் அந்த உயரிய அந்தஸ்தை வழங்கியமை - ஈழத் தமிழ் மக்களுக்கான பெருமிதமன்றி வேறு யாது?

தேசங்கள் கடந்தாலும் யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற வாக்குக்கிணங்க, பாரபட்சமற்று எல்லோரையும் அரவணைத்து, அனைத்துத் தரப்பினரதும் நீதிக்காகவும் செயலாற்றும் மாண்பும் மனிதாபிமானமும் தமிழனுக்கு உரியது. அதுவே ஈழத் தமிழ்த் தாய்க்கு இந்த நியமனம் மூலம் இந்த உயர்ந்த அங்கீகாரத்தை வழங்கியுள்ளது.

இன, மத பேதமற்று அனைத்து கனேடிய மக்களின் மனங்களை வென்றவராக அவரால் மிளிர முடிந்திருக்கின்றது என்பது இந்த சிந்தனைப் போக்கிலிருந்து மிளிர்ந்ததுதான்.

தமிழ்த் தேசத்துக்கு - தேசியத்துக்கு - அயராது குரல் எழுப்பும் ஓர் உயர்ந்த ஈழத் தமிழ் சகோதரனுக்குக் கிடைத்த இந்த உயரிய பதவி தமிழினத்துக்கே கிடைத்த விருதும் கூட.

ஈழத்தமிழருக்கு நீதிகிடைக்க வேண்டுமெனக்கோரி கடந்த தசாப்தங்களாக தனது சொந்தச் செலவில் ஜெனீவா மனித உரிமைகள் பேரவைக்குச் சென்று அங்கு விவாதங்களில் ஈடுபட்டு இனத்துக்காக அமைதியாக பணியாற்றிய கரி, இந்தப் புதிய பதவியின் ஊடாக அந்தச் சேவையை மேலும் திறமையாகச் செய்வாரென எதிர்பார்க்கலாம்.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், கனேடிய அமைச்சர் கரி ஆனந்தசங்கரிக்கு நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்த வாழ்த்து சிறந்தது என்றாலும் கனடாவின் அந்த சமத்துவத்தை இலங்கை பேணவில்லையே என்பதை அவருக்கு சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

அமைச்சர் கரியை வாழ்த்துவதில் 'தமிழன்' உவகைக்கொள்கிறான். பெருமையடைகிறான்.



# மனிதனின் உணவுப் பழக்கங்கள்

இறைநிலை அல்லது இயற்கையின் படைப்பில் எல்லா உயிர்களும் சமம். இதைத்தான் வள்ளுவப் பெருமகனார், 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்' என்று கூறுகிறார். அதாவது, எல்லா உயிர்களுக்கும் பிறப்பு ஒரு தன்மையானதே. ஆயினும், செய்கின்ற தொழில்களில் உயர்வு, தாழ்வு வேறுபாடுகளால் சிறப்பியல்பு ஒத்திருப்பதில்லை என்பது அக்குறளின் பொருள். ஆனாலும், பிறப்பால் எல்லா உயிர்களும் சமம் என்பது உறுதி.

உணவு உண்ணக்கூடிய அடிப்படையில் நோக்கினால் உலகிலுள்ள உயிர்கள் மூன்று வகைப்படுத்தப்பட்டுள்ளன. முதலாவது, தாவர உணவுகள் அல்லது சைவ உணவுகளை மட்டுமே உண்ணக் கூடிய 'ஹெர்பிவோர்' எனப்படும் தாவர பட்சிணிகள், இரண்டாவது, மற்ற உயிரினங்களை உணவாக உண்ணக்கூடிய அல்லது அசைவ உணவுகளை உண்ணக்கூடிய 'கார்னிவோர்ஸ்' என்று சொல்லக்கூடிய மாமிச பட்சிணிகள். மூன்றாவது, தாவர உணவுகள் மற்றும் மாமிச உணவுகள் இரண்டையும் உண்ணக்கூடிய 'ஆம்னிவோர்ஸ்' என்று சொல்லக் கூடிய சர்வ உண்ணிகள்.

கற்கால மனிதன் ஆரம்ப காலத்தில் காடுகளிலும் குகைகளிலும் அடர்ந்த வனங்களிலும் வாழ்ந்து வந்தான். அவனுக்குப் பசி வரும்போதெல்லாம் தன் பசியைப் போக்கிக்கொள்ள தன்னை விட வலிமை குறைந்த விலங்குகளை வேட்டையாடி அவற்றின் மாமிசத்தை பச்சையாகவே உண்டு வந்தான். அடுத்து, கற்களை உரசி நெருப்பை உண்டாக்கத் தெரிந்தபின்னர் வேட்டையாடிய மாமிசங்களை தீயில் பொசுக்கி வேக வைத்து உண்டு மகிழ்ந்தான். சுட்ட மாமிசம் ருசியாக இருந்ததால், ருசியான உணவுக்கு மனிதன் அடிமையாகிவிட்டான். ஆனால், இதே காலகட்டத்தில் மரங்களிலிருந்தும் செடிகளிலிருந்தும் விளையக் கூடிய பல வகையான கனிகளையும் காய்கறிகளையும் அவை என்னவென்றே தெரியாமல் உண்டு வந்தான்.

காலப்போக்கில் விலங்குகள் குறைவடைந்ததன் காரணமாக அதற்கான தட்டுப்பாடு ஏற்பட்டதாலும் அதனால் ஏற்பட்ட பசியின் கொடுமையாலும் மனிதன் மாற்று உணவைத் தேடத் தொடங்கினான். மனிதன் ஆறறிவு படைத்தவன் என்பது நியதி. அதனால் தன் ஆறாம் அறிவால் சிந்திக்கத் தொடங்கி, தானியங்களைக்கொண்டு பயிர் செய்யும் விவசாயத்தைக் கற்றுக் கொண்டான். இப்போது ஆறாவது அறிவின் பயன்பாட்டாலும், அதை உபயோகிக்கத் தெரிந்து கொண்ட ஆற்றலாலும் மாமிச உணவுடன் தாவர உணவையும் சேர்த்து, இரண்டையும் புசித்து வந்தான்.

ஆறாம் அறிவு இல்லாத, ஐந்தறிவு கொண்ட சீற்றம் நிறைந்த வனமிருகங்கள், தம் பசியைப் போக்கிக் கொள்ள தம்மை விட வலிமை குறைந்த மிருகங்களை வேட்டையாடி வாழ்ந்து வருகின்றன. இதற்காகவே இயற்கை அந்த மிருகங்களுக்கு கோரைப் பற்களைப் படைத்துள்ளது. அந்தக் கோரைப் பற்களைக் கொண்டுதான் வேட்டையாடிய மிருகங்களின் உடல்களைக் கிழித்து உண்ண முடிகிறது. மனிதனுக்கு கோரைப் பற்களை இறைநிலை படைக்கவில்லையே! மனிதன் அசைவ உணவுகளை உண்பது முரணல்லவா?

மேலும், எந்த மருத்துவரும் தானிய உணவுகள் காய்கறி, பழங்கள், கீரை வகைகளை விட புலால் உணவு மனிதனுக்கு சிறந்ததென்று மனமுவந்து பரிந்துரைப்பதில்லை. முடிந்தவரை புலால் உணவைத் தவிர்த்துக் கொள்ளுங்கள் என்றுதான் அறிவுறுத்துகிறார்கள். அதிலும் நாற்பது வயதுக்கு மேல் முதுமை தொடங்குவதால் புலாலில் உள்ள அதிகப்படியான புரதமும் கொழுப்பும் நம் இரத்தத்தில் கலந்து, 'கெட்ட கொலஸ்ட்ரோல்' என்று சொல்லக் கூடிய கொழுப்பை அதிகப்படுத்தி, இரத்தநாளங்களில் அடைப்புகளை ஏற்படுத்தி, மூளை, இதயம் போன்ற முக்கியமான உறுப்புகளைச் செயலிழக்கச் செய்து, பக்கவாதம், மாரடைப்பு போன்ற கொடிய நோய்களுக்கு வழிவகுக்கின்றன.

கோழி நமக்கு முட்டையைத் தருகிறது. முட்டையை விழுங்குவதோடு நில்லாமல் அந்தக் கோழியையே விழுங்கி விடுகிறோம். சேவல் விடியற்காலையில் பொழுது புலர்ந்ததை கூவல் மூலம் அறிவித்து உழவனையும் உலகையும் எழுப்பி விடுகிறது. அந்தச் சேவலையும் பிரியாணி செய்து உண்கிறோம்.

எந்தப் பாவமும் அறியாத ஆடு தன் கழிவு மூலம் விவசாய பூமியை வளம் பெறச் செய்கிறது. மேலும் ஆட்டுப்பால் மிகுந்த சக்தி தரக் கூடிய, அஹிம்சா மூர்த்தி அண்ணல் காந்தியடிகளால் மிகவும் விரும்பி அருந்தப்பட்ட அருமையான உணவாகும். அந்த ஆட்டையும் கொன்று உண்கிறோம்.

எம்மை ஈன்ற மாதாவுக்குப் பிறகு, எமது குழந்தைப் பருவம் முதல் நாம் இறக்கும்வரை, தன் பாலையும் பால் சார்ந்த உணவுப் பொருட்களையும் நமக்கு கொடுக்கின்ற, 'கோ மாதா' என்று தெய்வமாக வணங்கப்படுகின்ற எமது இரண்டாம் தாயான பசுவையும் விவசாய நிலங்களில் ஏர் உழுவதற்கும் நீர் இறைப்பதற்கும் வண்டி இழுப்பதற்கும் மேலும் தன் சாணத்தை விவசாய நிலத்துக்கு அற்புதமான எருவாகக் கொடுக்கிற உழவர்களின் நண்பனாகவும் அவர்தம் குடும்பத்தில் ஓர் பிள்ளை போலவும் உழைக்கின்ற எருதுகளையும் கூட கொன்று உண்டு விடுகிறோம். ஆனால், வருடாவருடம் மாட்டுப் பொங்கல் கொண்டாடத் தவறுவதில்லை.

பாலைவனத்தில் கொளுத்தும் வெயிலிலும் பொதிகளையும் மனிதர்களையும் சுமந்து சென்று தன் பாலையும் உணவாகத் தருகின்ற ஒட்டகங்களையும் வெட்டிச்சாய்த்து உண்டு விடுகிறோம்.

வேதாத்திரி மகரிஷி தனது 'தென் வாழ்க்கை விளக்கம்' என்ற நூலில் கூறியுள்ள செய்தியைக் காண்போம். அவர் சிறுவனாக இருந்தபோது ஒரு புத்தகத்தில் ஒரு பாடலைப் படித்திருக்கிறார்.

அம்மாவென அலற ஆருயிரைக் கொன்றருந்தி இம்மானிடரெல்லாம் இன்புற்றிருக்கிறார்,

**அம்மாவெனும் ஓசை கேட்டகன்ற மாதவர்க்கும் பொய்மா நரகமெனில், புசித்தவர்க்கென் சொல்லுவதோ**

என்பது அந்தப் பாடல். அதாவது, ஓர் உயிரைக்கொல்லும்போது அது அம்மா என்று அலறும். அப்படி அலறுகின்ற உயிர்களைக் கொன்று, அதை உண்டு மனிதரெல்லாம் இன்பமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அப்படி அந்த உயிர் அம்மா என்று அலறும்போது, அந்த அலறலைக் கேட்ட பிறகும், அதைக் கண்டுகொள்ளாமல், அந்த இடத்தை விட்டு அகன்று செல்லுகின்ற ஒருவர், பெரும் தவம் புரிந்த யோகியோ அல்லது ஞானியோ ஆயினும் அவருக்கும் நரகம்தான் வாய்க்கும். அப்படியெனில் அதை உணவாகப் புசித்தவர்க்கு என்ன கதி ஆகுமோ, அதைப்பற்றி என்ன சொல்லுவதோ என்பது அதன் பொருள். இந்தப் பாடலைப் படித்தபின், அந்த வேதனையை உணர்ந்து, அன்றுமுதல் புலால் உண்பதில்லை என்று சபதமேற்று, பின்னாளில் மிகப் பெரிய ஞானியாக வாழ்ந்து, இந்த மண்ணுலகுக்கு மனவளக்கலை என்ற பொக்கிஷத்தை கொடுத்துச் சென்றுள்ளார்.

தன் உணவுக்காக மனிதன் பிற உயிர்களைக் கொல்லும்போது அவன் நான்கு குற்றங்களைச் செய்வதாகக் கூறுகிறார்.

*01. **கொலைக்குற்றம்*** - பிற உயிரைக் கொல்வது என்னும் கொலைக்குற்றம்.

*02. **வாழும் சுதந்திரத்தைப் பறித்தல்*** - இறைநிலை எல்லா உயிர்களுக்கும் இந்த மண்ணில் வாழும் சுதந்திரத்தைக் கொடுத்திருக்கிறது. அந்த சுதந்திரத்தைப் பறிப்பதற்கு யாருக்கும் உரிமையில்லை.

*03. **பிறர் பொருளைப் பறித்து உண்ணுதல்*** - ஒரு குறிப்பிட்ட விலங்கைக் கொன்று, அவ்விலங்குக்குச் சொந்தமான உடலை, அவ்விலங்கின் சம்மதமின்றி பறித்து உண்ணுதல். இது பல தருணங்களில் நம்மிடமுள்ள பொருட்களை குரங்குகள் நம் மீது பாய்ந்து பறித்து உண்பதற்கு ஒப்பாகும்.

*04. **பிறர் பொருள் திருடுதல்*** - மற்றொரு உயிருக்குத் தெரியாமல் அதன் உடலை நாம் உண்பதற்காகத் திருடுவது என்கிற குற்றம்.

நம்மையோ நம் உறவுகளையோ முன்பகை போன்ற ஏதோ சில காரணங்களால் சக மனிதர்கள் வெட்டிக் கொன்றால் நாம் பொறுத்துக் கொள்கிறோமா? உடனே பதறிப்போய்,பொலிஸிலும் நீதி மன்றங்களிலும் முறையிட்டு நீதி கேட்கிறோம். வாயில்லா ஜீவன்கள் எங்கே செல்லும்? எமது மனச்சாட்சிதான் மற்ற உயிர்களுக்கான நீதிமன்றம். நாம் நல்ல நீதிபதிகளாய் வாழ்வோம்.

கடவுளால் நமக்கு கொடுக்கப்பட்ட எமது உயிரை மாய்த்துக் கொள்வதற்குப் பெயர் தற்கொலை. தற்கொலை செய்வது சட்டப்படி குற்றம். எமது உயிரை நாமே மாய்த்துக் கொள்ள நமக்கே உரிமை இல்லாதபோது, பிற உயிர்களைக் கொல்வதற்கு நமக்கு யார் உரிமை கொடுத்தார்கள்? காட்டிலுள்ள வனவிலங்குகள் எவற்றையும் வேட்டையாடக் கூடாது என்பது சட்டம். ஆனால், நாம் வீட்டில் வளர்க்கும் ஆடு, மாடு, கோழி யாவற்றையும் கொல்வதற்கு எந்தச் சட்டம் இடம் கொடுக்கிறது?

இன்று தெரு நாய்களைப் பிடிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் கருணை கொண்ட நல் இயக்கங்கள், நாள்தோறும் இலட்சக்கணக்கான உயிர்களை உணவுக்காகக் கொன்று உயிர் வாழும் மனிதர்களையும் அந்த உணவால் நாள்தோறும் பல கோடிகளைக் குவித்துக் கொண்டிருக்கின்ற உணவகங்களையும் நட்சத்திர விடுதிகளையும் ஏன் எதிர்ப்பதில்லை, ஏன் இந்த முரண்பாடு? நல் உள்ளம் படைத்தோர் சிந்திக்கட்டும்.

***மா. கல்யாண மோகன்***
***நன்றி***
***தினமணி***

## தவக்கால சிந்தனை

### என் அன்பார்ந்த மைந்தர் இவரே



**அக்காலத்தில் இயேசு பேதுருவையும் யாக்கோபையும் யோவானையும் அழைத்து, ஓர் உயர்ந்த மலைக்கு அவர்களை மட்டும் தனிமையாகக் கூட்டிக்கொண்டு போனார். அங்கே அவர்கள்முன் அவர் தோற்றம் மாறினார். அவருடைய ஆடைகள் இவ்வுலகில் எந்த சலவைக்காரரும் வெளுக்க முடியாத அளவுக்கு வெள்ளை வெளேரென ஒளிவீசின. அப்போது எலியாவும் மோசேயும் அவர்களுக்குத் தோன்றினர். இருவரும் இயேசுவோடு உரையாடிக்கொண்டிருந்தார்கள். பேதுரு இயேசுவைப் பார்த்து, "ரபி, நாம் இங்கேயே இருப்பது நல்லது. உமக்கு ஒன்றும் மோசேக்கு ஒன்றும் எலியாவுக்கு ஒன்றுமாக மூன்று கூடாரங்களை அமைப்போம்" என்றார். தாம் சொல்வது என்னவென்று அவருக்குத் தெரியவில்லை. ஏனெனில் அவர்கள் மிகுந்த அச்சம் கொண்டிருந்தார்கள். அப்போது ஒரு மேகம் வந்து அவர்கள் மேல் நிழலிட, அந்த மேகத்தினின்று, "என் அன்பார்ந்த மைந்தர் இவரே; இவருக்குச் செவிசாயுங்கள்" என்று ஒரு குரல் ஒலித்தது. உடனடியாக அவர்கள் சுற்றுமுற்றும் பார்த்தார்கள். தங்கள் அருகில் இயேசு ஒருவரைத் தவிர வேறு எவரையும் காணவில்லை. அவர்கள் மலையிலிருந்து இறங்கி வந்துகொண்டிருந்தபோது அவர், "மானிடமகன் இறந்து உயிர்த்தெழும்வரை, நீங்கள் கண்டதை எவருக்கும் எடுத்துரைக்கக் கூடாது" என்று அவர்களுக்குக் கட்டளையிட்டார்.**

## நக்கல் நமசிவாயம்

***வனவிலங்கு கணக்கெடுப்பில் காட்டுப்பன்றிகள், நரிகளை மறந்திட்டாங்க.. மிருங்களுக்கும் அநீதி செய்திட்டாங்க பாருங்கோ..***



## இன்றைய நாளில்...

- **1950 – கலிபோர்னியா பல்கலைக்கழக ஆய்வாளர்கள் 'கலிபோர்னியம்' என்ற 98ஆவது தனிமத்தைக் கண்டுபிடித்ததாக அறிவித்தனர்.**
- **1958 – ஐக்கிய அமெரிக்கா வங்கார்ட்-1 என்ற செயற்கைக்கோளை ஏவியது.**
- **1959 – 14ஆவது தலாய்லாமா டென்சின் கியாட்சோ, திபெத்திலிருந்து வெளியேறி இந்தியா வந்து சேர்ந்தார்.**
- **1992 – தென்னாபிரிக்காவில் இன ஒதுக்கலை முடிவுக்குக் கொண்டுவர நடத்தப்பட்ட பொது வாக்கெடுப்பில் 68.7% மக்கள் ஆதரவாக வாக்களித்தனர்.**
- **1996 – இலங்கை அணி அவுஸ்திரேலியாவைத் தோற்கடித்து கிரிக்கெட் உலகக் கிண்ணத்தை வென்றது.**

## தினசரி பலாபலன்கள்

**குரோதி வருடம் பங்குனி மாதம் 03ஆம் நாள் வியாழக்கிழமை**

**மேஷம்** கூட்டு வியாபாரத்தில் இலாபங்கள் உண்டு. காதல் களியாட்டங்கள் நிறைந்த நாள்.

**ரிஷபம்** விரோதிகளை புத்தியால் வெற்றி கொள்வீர்கள். நினைத்த காரியம் இன்று நிறைவேறும்.

**மிதுனம்** அதிர்ஷ்டம் நிறைந்த நல்ல நாள். தெளிந்த மனதுடன் அனைத்தையும் வெற்றி கொள்வீர்கள்.

**கடகம்** அனைத்து பெருமைகளையும் அடைவீர்கள். தான தர்மங்களால் மன நிறைவு கொள்வீர்கள்.

**சிம்மம்** குறுகிய பயணங்கள் மன உளைச்சளைத் தரும். இளைய சகோதர வகையில் உதவிகள் உண்டு.

**கன்னி** வீண் மனக்குழப்பங்கள் வேண்டாம். நிதானமாகச் செயற்பட்டால் வெற்றி உங்களுக்கே.

**துலாம்** ஞாபக மறதியால் முக்கிய சில காரியங்களைத் தவறவிடுவீர்கள். மனதைக் கட்டுப்படுத்திக் கொள்ளுங்கள்.

**விருச்சிகம்** உங்கள் கையில் உள்ள பணம், பொருள் என்பவற்றைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள். தேவையற்ற செலவுகள்.

**தனுசு** தொட்டது துலங்கும் நாள். தொழில் வியாபாரத்தால் அதிக நன்மைகளையும் இலாபத்தையும் அடைவீர்கள்.

**மகரம்** செய்தொழிலில் பகைவர்களை வெற்றிக் கொள்வீர்கள். அரச நன்மைகள் உதவிகள் உண்டு.

**கும்பம்** எதிர்பாராத உறவினர் வருகையால் சற்று செலவுகள் உண்டு. பிள்ளைகளால் இலாபங்கள் உண்டு

**மீனம்** வீணான டென்ஷனால் மனதை போட்டுக் குழப்பிக்கொள்வீர்கள். அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம்.

| | |
|---|---|
| **திதி** | : திருதியை மு.இ.7.33 வரை பின் சதுர்த்தி |
| **நட்சத்திரம்** | : சித்திரை பி.ப.2.47 வரை பின் சுவாதி; |
| **பிறை** | : தேய்பிறை |
| **யோகம்** | : மரண யோகம்; பி.ப.2.47 வரை பின் சித்த யோகம் |
| **வார சூலை** | : கிழக்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது |
| **நல்ல நேரம்** | : காலை- 6.16 – 7.16 மணிவரை. பகல் - 1.16 – 2.16 மணி வரை. மாலை- 3.16 – 4.16 மணிவரை |
| **ராகு காலம்** | : 7.46 – 9.16 மணிவரை |
| **எமகண்டம்** | : 10.46 – 12.16 மணிவரை. |
| **குளிகை** | : 1.46 – 3.16 மணிவரை |
| **சந்திராஷ்டமம்** | : மீன ராசியினர் எச்சரிக்கையாக செயல் படவும். |

**அதிர்ஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள்**

**இன்று பிற்பகல் 2.47 வரை**
பரணி, ரோஹிணி, திருவாதிரை, புனர்பூசம், ஆயிலியம், பூரம், அஸ்தம், சுவாதி, விசாகம், கேட்டை, பூராடம், திருவோணம், சதயம், பூரட்டாதி, ரேவதி

**இன்று பிற்பகல் 2.47 மேல்**
அஸ்வினி, கார்த்திகை, மிருகசீரிடம், புனர்பூசம், பூசம், மகம், உத்திரம், சித்திரை, விசாகம், அனுஷம், மூலம், உத்திராடம், அவிட்டம், பூரட்டாதி, உத்திரட்டாதி

**போன்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கும், தொழில், வியாபார இலாபங்கள், கல்விச் சிறப்பு, திடீர் தன அதிர்ஷ்டம், உடல் ஆரோக்கியம், தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும். அதிர்ஷ்டம், சுகம் உண்டு.**

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**



(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்) ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325 078-6759739

# பொது மக்களுக்காக தலதா கண்காட்சியின் காலத்தை நீடிக்க அரசாங்கம் ஆலோசனை

## அமைச்சர் ஹினிதும சுனில் செனவி தெரிவிப்பு

(எம்.ஏ.அமீனுல்லா)



சித்திரைப் புத்தாண்டின் பின்னர் பொது மக்களுக்காக காட்சிப் படுத்தப்படும் விசேட தலதா காட்சிப் படுத்தலின் காலத்தை நீடிக்கும் யோசனை அரசுக்கு உள்ளதாக பௌத்த கல்வி, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனவி தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் அமைதியான சூழலில் தலதாவை தரிசனம் செய்யவும் வழிபடவும் ஏராளமான மக்கள் கண்டிக்கு வருவார்கள் என எதிர்பார்க்கப்படும் நிலையில், மகாநாயக்கர்களின் அனுமதியுடன் காட்சிப்படுத்தும் காலத்தை நீடிக்க நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

மேலும் இவர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் செய்துகொடுக்க அரசு அனைத்து திட்டங்களையும் தயார் செய்துள்ளது எனவும் குறிப்பிட்டார்.

ஸ்ரீ தலதா மாளிகையில் நேற்று முன்தினம் (15) இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த அமைச்சர் ஹினிதும சுனில் செனவி, மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அமைச்சர் அங்கு மேலும் கூறுகையில்,

''ஏப்ரல் 18 முதல் 27 வரை கண்டிக்கு வரும் மக்களின் சிந்தனையை வளர்க்கும் தலதா தரிசனம் மற்றும் திட்டமிடல் நிகழ்ச்சிகள் தொடர்பான முன் பிரசாரப் பணிகளை எவ்வாறு மேற்கொள்வது என்பது குறித்து கலந்துரையாடப்பட்டது.

தலதா தொடர்பான மாபெரும் பாரம்பரியத்தின்படி ஊடக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். இதில் தொலைக்காட்சி, வானொலி மற்றும் சமூக ஊடகங்கள் அடங்கும். இது தொடர்பான வழிகாட்டல்கள் மற்றும் ஆலோசனைகளை உலக மக்கள் அனைவரும் விரைவாகப் பெறுவதை இந்த நடவடிக்கை உறுதிசெய்கிறது.

தலதா கண்காட்சி நடைபெறும் கண்டி வளாகத்தில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் ஊடாக முறையான பதிவு செய்த பின்னரே பணியாற்ற முடியும். ஆதலால், ஊடகவியலாளர்கள் அதிகாரமிக்க பொறுப்புடன் தகவல்களை தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இன்று பக்தர்கள் கூட நொடிப்பொழுதில் பத்திரிகையாளர்களாக மாறும் நிலை உள்ளது. தலதா பாரம்பரியத்தை மதித்து, தகவல்களை உலகுக்கு கொண்டுசெல்வோம். இலங்கை ஒரு தேசிய மறுமலர்ச்சிக்கான எங்கள் நம்பிக்கையாகும். புத்த பெருமானின் புனித தந்தம் ஒரு உலக பாரம்பரியம். பௌத்த மறுமலர்ச்சிக்கு அப்பால் ஒரு தேசிய மறுமலர்ச்சியை உருவாக்குவதற்கான வாய்ப்பாக இதை நாம் பயன்படுத்த வேண்டும்'' என அவர் கேட்டுக்கொண்டார்.

# கண்டியில் 103 வயது முதியவர் காலமானார்

(ஜே.எம்.ஹாபீஸ்)



100 வருடங்களுக்கு மேல் திடகாத்திரமாக உயிர் வாழ்ந்த, கண்டி மாவட்ட, யஹலதென்ன பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட அப்பாஸ் தனது 103ஆவது வயதில் காலமானார்.

அன்றாடம் தனது சுய வேலைகளை தாமே செய்துகொண்டு வாழ்ந்த இவர், தமது சமய விடயங்களுக்கு முன்னுரிமை கொடுத்து, அதனை முறையாகப் பின்பற்றி வாழ்ந்த ஒருவராவார். மரணிப்பதற்கு சில நாட்கள்வரை அதாவது முதல் எட்டு நோன்புகள் வரை இவர் நோற்றதாக குடும்பத்தினர் தெரிவித்தனர்.

இவர் நான்கு புதல்விகளதும் நான்கு புதல்வர்களதும் தந்தையாவார். இவரது ஜனாஸா கடந்த 13ஆம் திகதி இரவு 10 மணியளவில் யஹலதென்ன ஜும்ஆ பள்ளி மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இவரது குடும்ப அங்கத்தவர்கள் மற்றும் 100 வருட ஆயுளில் இவர் சம்பாதித்த உறவுகள் எனப் பெருமளவு மக்கள் இரவுநேரம் எனப் பாராது இவரது நல்லடக்கத்தில் கலந்துகொண்டனர்.




**அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரழி) அறிவிக்கின்றார்கள், நபி(ஸல்) அவர்கள் மக்களில் அதிகமாக கொடை கொடுப்பவராக இருந்தார்கள். ஜிப்ரீல் (அலை) நபி(ஸல்) அவர்களை ரமழானில் சந்திக்கும்போது அவர் வேகமாக வீசும் காற்றைவிட கொடை கொடுப்பவராக இருந்தார்கள்.**

**(ஆதாரம், புகாரி, முஸ்லிம்)**

**ரமழான் நன்மைகளை அள்ளித்தரும் மாதம். அந்த நன்மைகளை பூரணமாக பெற்றுக்கொள்வதற்கு முயற்சிக்கவேண்டும். இதற்காக எங்களால் முடிந்த ஸதகாக்களை (தானதர்மங்களை) வறிய மக்களை தேடி வழங்குவோம்.**

**(தொழுகை நேரங்கள்)**
**(14ஆம் திகதி முதல் 18ஆம் திகதிவரை)**

| | | |
|---|---|---|
| சுபஹ் | - | 5.03 |
| சூரிய உதயம் | - | 6.18 |
| ளுஹர் | - | 12.21 |
| அஸர் | - | 3.35 |
| மஃரிப் | - | 6.22 |
| இஷா | - | 7.31 |

# வடக்கு மாகாண குடிசார் அமைப்புகளின் சம்மேளனங்கள் அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜிடம் மகஜர் கையளிப்பு

(சாவகச்சேரி நிருபர்)



வடக்கு மாகாண குடிசார் அமைப்புகளுடைய சம்மேளனங்களால் மகளிர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜிடம் ஐந்து கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற மகளிர் தின நிகழ்வின்போதே மேற்படி கோரிக்கைகள் அடங்கிய மகஜரை அமைச்சரிடம் கையளித்திருந்தனர்.

குடிசார் அமைப்புகளின் சம்மேளனங்கள் அமைச்சரிடம் கையளித்த மகஜரில்,

வடக்கு மாகாண உள்ளூராட்சி மன்ற மகளிர் உறுப்பினர்களுடைய ஒன்றியத்தினை நிறுவன ரீதியாக மேம்படுத்துவதுடன் அரசியலில் போதுமான பெண்கள் பிரதிநிதித்துவத்தினை உறுதி செய்ய வேண்டும். அத்துடன் கட்சிகளின் மத்திய மற்றும் நிர்வாகக் குழுக்களில் பெண்களை உள்ளீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பொதுப் போக்குவரத்தின்போது பெண்களுடைய பாதுகாப்பினை உறுதி செய்ய வேண்டும்.

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில் பஸ் மற்றும் ரயிலில் பயணம் செய்யும் பெண்களில் 90சதவீதமான பெண்கள் பாலியல் துன்புறுத்தல்களுக்கு முகம் கொடுக்கின்றனர். இவ்வாறான பாலியல் ரீதியான துன்புறுத்தல்களைக் குறைப்பதற்கு போக்குவரத்துத்துறை ஊழியர்களுக்கு பால்நிலை அடிப்படையிலான பயிற்சிகளை வழங்க வேண்டும்.

பெண்களுடைய பொருளாதார வளங்களை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக, சில கடன் உதவிகளின் போது ஆண்களின் ஒப்புதல் தேவைப்படுகிறது. அவ்வாறான சில விதிமுறைகளை நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பாலின அடிப்படையிலான வன்முறைகளைத் தடுத்து நீதி அணுகலை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். குறிப்பாக வடக்கு மாகாணத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களில் தமிழ்ப் பேசும் பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களை அதிகரிக்க வேண்டும்.

மேலும் கிளிநொச்சி, மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் பெண்களுக்கான பாதுகாப்பு இல்லங்களை நிறுவ வேண்டும். அத்துடன் வன்முறைகளுக்கு முகம் கொடுக்கும் பெண்களுக்கு இலவச சட்ட உதவிகளை வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இரண்டு வயது குழந்தைகளை வேறு நபர்களின் பராமரிப்பில் விட்டு விட்டு தாய்மார்கள் தொழில் தேடி வெளிநாடு செல்வதனால் குழந்தைகள் பல்வேறு வகையான பாதிப்புகளை எதிர்கொள்கின்றனர்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் அனுமதியை 02 வயதில் இருந்து 05 வயதாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதனை விட முக்கியமாக நாட்டுக்குள்ளேயே சிறந்த வருமானத்தை ஈட்டக்கூட்டிய வருமான வழிமுறைகளை பெண்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்து புலம்பெயர்வைக் கட்டுப்படுத்தி குழந்தைகளின் நலனைப் பேண நடவடிக்கை எடுக்க வேண்டும் ஆகிய கோரிக்கைகளை மகளிர் விவகார அமைச்சரிடம் முன்வைத்திருந்தனர்.

மேற்படி மகஜரை யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த குடிசார் அமைப்புகளின் சம்மேளனப் பிரதிநிதிகள் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

**வாகன ஏலத்திற்கு – கொட்டாவ**

| வாகன இல. | தயாரிப்பு | மாதிரி |
|---|---|---|
| WP BAQ-85xx | BAJAJ | PLATINA |
| WP BGE-56xx | BAJAJ | PULSAR 200 NS |
| SG BDM-29xx | BAJAJ | PULSAR 150 UG 4.5 |
| WP BJF-77xx | BAJAJ | DISCOVER 125 |
| SG BDA-17xx | BAJAJ | CT 100 |
| WP BIT-40xx | BAJAJ | PULSAR 200 NS |
| WP BEW-79xx | BAJAJ | PULSAR 150 UG 4.5 |
| WP BJG-44xx | BAJAJ | DISCOVER 125 |
| WP BHH-70xx | HONDA | DIO SCV 110 |
| WP BDE-05xx | HONDA | DIO SCV 110 |
| WP BBX-10xx | HONDA | DIO SCV 110 |
| NW BFW-95xx | HONDA | DIO SCV 110 |
| WP BGR-24xx | HONDA | DIO SCV 110 |
| WP BHS-14xx | HONDA | DIO SCV 110 |
| WP BFQ-97xx | HONDA | DIO SCV 110 |
| NW BGA-76xx | HONDA | DIO SCV 110 |
| WP BDA-95xx | HONDA | DIO SCV 110 |
| WP BEB-14xx | HONDA | DIO SCV 110 |
| WP BHG-42xx | HONDA | DIO SCV 110 |
| WP BBW-69xx | HONDA | DIO SCV 110 |
| NW BEU-57xx | HONDA | DIO SCV 110 |
| WP BFD-00xx | HONDA | DIO SCV 110 |
| WP BHH-49xx | HONDA | DIO SCV 110 |
| WP BDQ-35xx | HONDA | DIO SCV 110 |
| WP BGJ-89xx | HONDA | DIO SCV 110 |
| WP BGR-39xx | HONDA | DIO SCV 110 |
| NW BFV-41xx | HONDA | DIO SCV 110 |
| CP BIB-78xx | HONDA | DIO SCV 110 |
| WP BGT-27xx | HONDA | DIO SCV 110 |
| SG BGY-94xx | HONDA | DIO SCV 110 |
| NW BGT-49xx | HONDA | DIO SCV 110 |
| SP BDF-43xx | HONDA | DIO SCV 110 |
| WP BBO-99xx | YAMAHA | FZ-S |
| WP BCN-86xx | YAMAHA | FZ16 |
| WP BDH-77xx | YAMAHA | FZ16 |
| NW BHZ-47xx | YAMAHA | RAY-ZR |
| WP BHL-86xx | TVS | WEGO |
| WP BII-09xx | TVS | NTORQ |
| WP BDO-96xx | TVS | METRO |

பார்வையிடுதல் கம்பனி வாகன வளாகத்தில் 2025,மார்ச்17ஆம்,18ஆம் திகதி (மு.ப.8.30மணி முதல் பி.ப.4.30வரை)
இலக்கம்.17/1, பின்ஹேன சந்தி, ஹொரண வீதி, கொட்டாவ
வாகன சந்தையிலிருந்து எந்தவொரு வாகனத்தையும் முன்னறிவித்தலின்றி அகற்றுவதற்கு நிறுவன முகாமைத்துவத்துக்கு அதிகாரம் உண்டு.
மோட்டார் சைக்கிள் விற்பனைதிகதி: 2025, மார்ச் 19 ஆம் திகதி காலை 10.30மணி
சுகாதர நடைமுறைகளை பின்பற்றுமாறு அறிவுறுத்துப்படுகின்றது
நிபந்தனைக்கு உட்பட்டது
விஸ்வா:–0774787096 விதுசர:–0774229302
துரிதஅழைப்பு:–0117308080 வட்ஸ்அப்:– 0710356125
A N ALGEWATHTHA AUCTIONEER
அசோசியேட், மோட்டர்ஸ் பைனேன்ஸ் கம்பனி பிஎல்சி.
தலைமை அலுவலகம், 146, ஹெவ்லொக் வீதி, திம்பிரிகஸ்யாய
தொலைபேசி: 011-5553663

# சகல உள்ளூராட்சி மன்றங்களிலும் தமிழரசு ஆட்சியைக் கைப்பற்றும்

## சுமந்திரன் நம்பிக்கை

(விஜயரத்தினம் சரவணன்)

''இலங்கைத் தமிழரசுக்கட்சி போட்டியிடுகின்ற சகல உள்ளூராட்சி சபைகளிலும் ஆட்சியைக் கைப்பற்றும்'' என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உள்ளூராட்சி சபைத் தேர்தல் நியமனங்கள் தொடர்பான கலந்துரையாடல் நேற்று (16) முல்லைத்தீவு, கள்ளப்பாடு பகுதியில் இடம்பெற்றது.

இதன்போது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளராக புதிதாக பொறுப்பேற்றுள்ள பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரனுக்கு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முல்லைத்தீவு



மாவட்ட செயலாளருமான துரைராசா ரவிகரன் பொன்னாடைபோர்த்தி மதிப்பளித்தார்.

இக்கலந்துரையாடலின் பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் சுமந்திரன் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

''முல்லைத்தீவு மாவட்டத்தில் இலங்கைத் தமிழரசுக்கட்சி போட்டியிடுகின்ற உள்ளூராட்சித் தேர்தல் நியமனம் தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றது.

சில இடங்களில் வேட்பாளர் நியமனங்களில் இருந்த பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு, பெரும்பாலும் வேட்பாளர் நியமனங்கள் தொடர்பான முடிவுகள் எய்தப்பட்டிருக்கின்றன.

எனவே மிகவிரைவாக அடுத்தவாரம் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்வோம்.

அந்தவகையில் போட்டியிடுகின்ற அனைத்து உள்ளூராட்சி சபைகளையும் இலங்கைத் தமிழரசுக்கட்சி கைப்பற்றும் என்ற நம்பிக்கையிருக்கின்றது'' - என்றார்.

# வேட்புமனுக்கள் நிராகரிக்கப்படுவதற்கான காரணங்களை வெளியிட்டது தேர்தல் ஆணைக்குழு

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலுக்காக சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுக்களை நிராகரிப்பதற்கான சாத்தியமான காரணங்கள் குறித்து தேர்தல் ஆணைக்குழு விசேட அறிவிப்பை வெளியிட்டுள்ளது.



11 அம்சங்களை கோடிட்டுக் காட்டும் அறிவிப்பின்படி, ஒரு வேட்பாளர் வேட்புமனுவில் கையெழுத்திடவில்லை என்றால், வேட்பாளரின் பெயர் நீக்கப்படும் என்றும் மாற்றுப் பெயரைச் சேர்க்க முடியாது என்றும் ஆணைக்குழு கூறியுள்ளது.

அதேநேரம், வேட்பாளர் சார்பாக செலுத்தப்பட்ட வைப்புத்தொகை பறிமுதல் செய்யப்படும் என்றும் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையத்தின் கூற்றுப்படி, வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டதற்கான காரணங்கள் பின்வருமாறு:

01. அங்கீகரிக்கப்படாத நபரால் சமர்ப்பிக்கப்பட்டது.

02. பரிந்துரைக்கப்பட்ட எண்ணிக்கையிலான வேட்பாளர்கள் இல்லாமை அல்லது பரிந்துரைக்கப்பட்ட எண்ணிக்கையை விட அதிகமாக இருத்தல்.

03. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக் குழுவால் தேவையான வைப்புத் தொகையை செய்யத் தவறுதல்.

04. கட்சி செயலாளர் அல்லது சுயேச்சை குழுத் தலைவரின் கையொப்பத்தைப் பெறத் தவறுதல்.

05. கட்சி செயலாளர் அல்லது சுயேச்சை குழுத் தலைவரின் கையொப்பத்தை சமாதான நீதிபதி அல்லது சான்றுறுதி அலுவலர் மூலம் சான்றளிக்கத் தவறுதல்.

06. இளைஞர் மற்றும் பெண் வேட்பாளர்கள் உட்பட பரிந்துரைக்கப்பட்ட எண்ணிக்கையிலான வேட்பாளர்களைச் சேர்க்கத் தவறியது.

07. வேட்புமனுவில் இளம் வேட்பாளராகப் பட்டியலிடப்பட்ட வேட்பாளரின் பிறப்புச் சான்றிதழின் சான்றளிக்கப்பட்ட நகலை சமர்ப்பிக்கத் தவறுதல் அல்லது பிறப்புத் திகதி குறைபாடுகளுடன் இருப்பதை உறுதிப்படுத்தும் பிரமாணப் பத்திரத்தை சமர்ப்பித்தல்.

08. வேட்பு மனுவில் வேட்பாளர் கையொப்பமிடத் தவறுதல்.

09. அரசியலமைப்பின் ஏழாவது அட்டவணையில் பிரமாணப் பத்திரம் இல்லாதது அல்லது அதில் ஏதேனும் குறைபாடுகள் இருப்பது.

10. வேட்புமனுவில் ஒரே ஒரு பெயர் மட்டுமே நிராகரிக்கப்பட்டு, நீக்கப்படும் வேட்பாளர் இளைஞர் (ஆண் அல்லது பெண்) அல்லது பெண் வேட்பாளராக இருந்தால், குறைந்தபட்ச இளைஞர் அல்லது பெண்கள் பிரதிநிதித்துவம் பூர்த்தி செய்யப்படாததால், முழு வேட்புமனுவும் நிராகரிக்கப்படும்.

11. வேட்புமனுவில் ஒரே ஒரு பெயர் மட்டும் நிராகரிக்கப்பட்டு, அது இளைஞர் அல்லது பெண் பிரதிநிதித்துவத்தை பாதிக்கவில்லை என்றால், தொடர்புடைய வேட்பாளரின் பெயர் நிராகரிக்கப்படும்.

# பிரதமர் ஹரிணி - சர்வதேச வர்த்தக மையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளருக்கிடையில் சந்திப்பு



சர்வதேச வர்த்தக மையத்தின் (ITC) நிறைவேற்றுப் பணிப்பாளர் திருமதி பமீலா ரோஸ்மேரி கோக் - ஹமில்டன் மற்றும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய ஆகியோருக்கு இடையிலான சந்திப்பொன்று அண்மையில் பாராளுமன்ற வளாகத்தில் இடம்பெற்றது.

இந்த சந்திப்பில், டிஜிட்டல் பரிவர்த்தனை, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் அபிவிருத்தி மற்றும் பெண்களின் பொருளாதார வலுவூட்டல் உள்ளிட்ட முக்கிய பொருளாதார முன்னுரிமைகள் குறித்து கலந்துரையாடப்பட்டதுடன், டிஜிட்டல் மயமாக்கல், சந்தை அணுகலை வலுப்படுத்துதல் மற்றும் நிறுவன கட்டமைப்பின் மூலம் பொருளாதாரத்தை மேம்படுத்துவதன் முக்கியத்துவம் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை (SMEs) விரிந்த பொருளாதாரத்தில் ஒருங்கிணைத்தல், பொருளாதாரத்தில் இளைஞர் சமூகம் மற்றும் பெண்களின் அதிக பங்கேற்பு மற்றும் நீண்டகால பொருளாதார ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்த முதலீட்டு நட்பு கொள்கைகளை நடைமுறைப்படுத்துதல் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

சுற்றுலா, ஏற்றுமதி, எரிசக்தி, தகவல் தொழில்நுட்பம், கல்வி, தொழில்நுட்பம் மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி (TVET) போன்ற முக்கிய துறைகளை கண்டறிந்து கிராமிய பொருளாதாரத்தை வலுப்படுத்த அரசு அர்ப்பணிப்புடன் உள்ளதாக பிரதமர் வலியுறுத்தினார்.

சேதனப் பொருட்களின் ஏற்றுமதியை அதிகரிப்பதற்கு சர்வதேச வர்த்தக மையம் மற்றும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை (EDB) உடனான கூட்டாண்மையை வலுப்படுத்துவதன் அவசியம் குறித்தும் இதன்போது ஆராயப்பட்டது.

ஜூலை மாதம் நடைபெறவுள்ள உலகளாவிய மாநாட்டில் இலங்கை பங்குபற்றவுள்ள நிலையில், இச்சந்திப்பு ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்துவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிகழ்வில் பிரதமரின் மேலதிக செயலாளர் திருமதி சாகரிகா போகஹவத்த மற்றும் வெளிவிவகார அமைச்சின் பொருளாதார விவகார (இருதரப்பு) பிரிவின் சிரேஷ்ட பணிப்பாளர் நாயகம் தர்ஷன எம்.பெரேரா உட்பட ஐ.நா. இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை (EDB) மற்றும் வெளிவிவகார அமைச்சு ஆகியவற்றை பிரதிநிதித்துவப்படுத்தி சிரேஷ்ட பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

# நெல்லை உலர வைப்பதற்கு இடமின்றி தோப்பூர் விவசாயிகள் அசௌகரியம்



**(தோப்பூர் நிருபர்)**

திருகோணமலை, மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தோப்பூர் பிரதேசத்தில் இம்முறை மேற்கொள்ளப்பட்ட பெரும்போக வேளாண்மை அறுவடை நெல்லினை உலர வைப்பதற்கு தனியான களம் இன்மையினால் விவசாயிகள் பாலத்தோப்பூர் - தோப்பூர் பிரதான வீதியில் பல இடங்களில் நெல்லினை உலரவைப்பதால் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக உள்ளதோடு விபத்து ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளதாகவும் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அறுவடையின்போது மழை குறுக்கிட்டு நெல் நனைகின்றபோதும், நெல்லுக்கான விலை குறைகின்றபோதும் நெல்லினை உலர வைத்து சேமித்து வைப்பதற்கு தனியான களம் இன்றி அசௌகரியப்படுவதாக விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே, தோப்பூர் பிரதேசத்தில் பிரதான வீதிக்கருகில் அமைந்துள்ள 10 வீட்டுத்திட்ட அரச காணியில் பொதுமக்கள் நலன் கருதி பொதுவான நெல் உலரவைக்கும் களம் ஒன்றினை அமைத்துத் தருமாறு உரிய அதிகாரிகளிடம் தோப்பூர் பிரதேச விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# ஐஸ் – கேரள கஞ்சாவுடன் கிரிபத்கொடையில் ஒருவர் கைது



**(ஹனபி எம் தாஸீம்)**

ஹுணுப்பிட்டிய, நாதுடுவ பகுதியில் வீடொன்றை வாடகைக்கு எடுத்து இரகசியமாக போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டுவந்த போதைப்பொருள் கடத்தல்காரர் ஒருவர் பிற்பகல் கிரிபத்கொடை பொலிஸாரால் சுமார் 1.8 மில்லியன் ரூபா மதிப்புள்ள ஐஸ் மற்றும் கேரள கஞ்சாவுடன் கைதுசெய்யப்பட்டார்.

இங்கு, கடத்தல்காரருடன் 54 கிராம் ஐஸ் போதைப்பொருளும் 02 கிலோகிராம் கேரள கஞ்சாவும் பறிமுதல் செய்யப்பட்டன.

மேலும், போதைப்பொருட்களை எடைபோடப் பயன்படுத்தப்படும் ஒரு சிறிய மின்னணு தராசு மற்றும் கையடக்கதொலைபேசியொன்றும் அவரது வாடகை வீட்டிலிருந்து பொலிஸாரால் மீட்கப்பட்டன.

கைதுசெய்யப்பட்ட நபர் கண்டி, கலஹா, பெரவத்தையைச் சேர்ந்த 21 வயதுடைய திருமணமானவர். அவர் தடுத்து வைக்கப்பட்டு, மஹர நீதவான் நீதிமன்றத்திலிருந்து தடுப்புக்காவல் உத்தரவைப் பெற்ற பின்னர் மேலும் விசாரிக்கப்பட்டு வருகிறார்.

கிரிபத்கொடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.



**உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக தேசிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்டத்துக்கான கட்டுப்பணம் செலுத்தும் நடவடிக்கைகள் அண்மையில் நிறைவுபெற்றதையடுத்து, நேற்று (16) வேட்புமனுவில் கையொப்பமிடும் நிகழ்வு நிறைவுபெற்றது. வட கொழும்பு அமைப்பாளர் நாராயண பிள்ளை சிவானந்தராஜா தலைமையில் கொழும்பு மேற்கு தொகுதியில் போட்டியிட எஸ். ஆனந்தகுமார் வேட்புமனுவில் கையொப்பமிட்டார்.**

# பாடசாலை மாணவர்களுக்காக ‘கற்பகச் செல்வம்’ திட்டம் ஆரம்பம்

**(சாவகச்சேரி நிருபர்)**

பாடசாலை மாணவர்களுக்கான “கற்பகச் செல்வம்” என்ற திட்டம் பனை அபிவிருத்திச் சபையினால் ஆரம்பித்து வைக்கப்பட்டிருப்பதாக சபையின் தலைவர் வி.சகாதேவன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

பாடசாலை மாணவர்கள் பனை சார்ந்த ஆராய்ச்சிகளில் ஈடுபடும் செயற்றிட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இதன்போது பாடசாலை மாணவர்களுக்கு பனை சார்ந்த மற்றும் அதன் உற்பத்திகள் சார்ந்த ஆராய்ச்சி விளக்கம் மற்றும் செயன்முறை ஆகிய பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

இந்தத் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வாக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் உயிரியல் பிரிவு மாணவர்கள் கைதடியில் அமைந்துள்ள பனை ஆராய்ச்சி நிறுவனத்துக்கு வருகைதந்து பனை சார்ந்த புத்தாக்க சிந்தனைகளை வளர்த்துக் கொண்டுள்ளனர்.

மாணவர்கள் பனை சார்ந்த ஆராய்ச்சிகளில் ஆர்வமாக இருப்பது மகிழ்ச்சியளிக்கின்றது.

இளைய தலைமுறை இவ்வாறான விடயங்களில் ஆர்வம் காட்டுவதன் ஊடாக எமது வளத்தைப் பேணிப் பாதுகாத்து அதன்மூலம் சிறந்த வருமானத்தைப் பெறுவதுடன் அதனையடுத்த சந்ததியினருக்கும் கடத்த முடியுமென மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

# மௌலானா மௌலவி காலஞ்சென்ற சலாகுதீன் ஞாபகார்த்த சொற்பொழிவும் இப்தார் நிகழ்வும்



**(அஷ்ரப் ஏ சமத்)**

கண்டி மௌலானா மௌலவி காலஞ்சென்ற சலாகுதீன் ஞாபகார்த்த சொற்பொழிவும் இப்தார் நிகழ்வும் மாளிகாவத்தை செரண்டிப் மண்டபத்தில் முஸ்லிம் கல்வி முன்னேற்றச் சங்கத்தின் தலைவர் சிரேஷ்ட ஊடகவியலாளர் அஹ்மத் முனவர் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் (15) நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு அனுசரணையை முஸ்லிம் சலாஹுதீன் வழங்கியிருந்தார்.

இந்நிகழ்வில் தலைமையுரையை தென்கிழக்கு பல்கலைக்கழக வேந்தர் ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா நிகழ்த்தினார். காலம்சென்ற ஸலாஹுத்தீன் மௌலவி பற்றிய நினைவுப் பேருரை ஜாமியா நளீமியா பணிப்பாளர் அகார் முஹம்மத் நிகழ்த்தினார். அத்துடன் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமும் உரை நிகழ்த்தியமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி, முன்னாள் ஆளுநர் அசாத் சாலி உட்பட கண்டி மாவட்ட தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர்கள், கண்டி மாவட்ட உலமாக்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.



கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலயத்தின் வருடாந்த திருவிழா கொண்டாட்டத்தில் இந்திய மற்றும் இலங்கையைச் சேர்ந்த பக்தர்கள் பலர் நேற்று முன்தினம் (15) கலந்துகொண்டனர். (படங்கள்: இஷான் சஞ்சீவ)

# 'கிழக்கு தமிழர் கூட்டமைப்பு' மட்டக்களப்பில் உதயம்

## வியாழேந்திரன் - சந்திரகாந்தன் ஆகியோருக்கிடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்து




(மட்டக்களப்பு செய்தியாளர்)

எதிர்வரும் காலங்களில் இடம்பெறவுள்ள தேர்தல்களை மையமாக வைத்து கிழக்கு மாகாணத்தில் 'கிழக்கு தமிழர் கூட்டமைப்பு' உதயமாகியுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வு சனிக்கிழமை(15) மட்டக்களப்பில் உள்ள தனியார் விடுதியொன்றில் இடம்பெற்றது. இதன்போது முன்னாள் இராஜாங்க அமைச்சர்களான சதாசிவம் வியாழேந்திரன் மற்றும் சிவநேசதுரை சந்திரகாந்தன் ஆகியோர் கலந்துகொண்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்களைப் பகிர்ந்துகொண்டனர்.

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் செயலாளர் பூ.பிரசாந்தன் மற்றும் முற்போக்கு தமிழர் கழகத்தின் செயலாளர் ரோஸ்மண் ஆகியோர் இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். பின்பு உள்ளூராட்சித் தேர்தல்களில் வேட்பாளர்களின் பங்கீடு சம்பந்தமாகவும் இங்கு கலந்துரையாடல்கள் இடம்பெற்றதுடன், எதிர்வரும் வாரங்களில் மேலும் பல கட்சிகள் இந்தக் கூட்டமைப்பின் கீழ் இணையவுள்ளதாகவும் அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புகள் கிழக்கு மாகாண மக்களின் நலன் கருதி இக்கூட்டமைப்பில் இணைந்து கொள்ளுமாறு இராஜாங்க அமைச்சர்கள் இங்கு வேண்டுகோள் விடுத்ததுடன் இவ்வமைப்பின் முக்கியத்துவம் பற்றியும் விளக்கமளித்தனர்.

# திருகோணமலையில் 13 உள்ளூராட்சி மன்றங்களையும் தே.ம.ச.கைப்பற்றும்

## ரொஷான் எம்.பி. நம்பிக்கை

(சீனக்குடா செய்தியாளர்)



''ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றம் ஆகிய இரு தேர்தல்களிலும் நாட்டை வெற்றி கொண்டோம். இப்போது கிராமத்தை வெற்றி கொள்வதற்காக கட்டுப்பணம் செலுத்தியிருக்கிறோம். இதன்மூலம் மாவட்டத்தின் 13 உள்ளூராட்சி மன்றங்களையும் தேசிய மக்கள் சக்தி கைப்பற்றுவது உறுதி'' - என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரொஷான் அக்மீமன தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தின் 13 உள்ளூராட்சி மன்றங்களுக்கும் தேசிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான கட்டுப்பணம் செலுத்தும் நடவடிக்கை திருகோணமலை மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை(14) நடைபெற்றது.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

''இன, மத பேதங்களைக் கடந்து தற்போது அரசாங்கம் மக்களுக்கு சேவையாற்றிக்கொண்டிருக்கிறது. நாட்டுக்குத் தேவையான விடயத்தை நாங்கள் செய்துகொண்டிருக்கிறோம். சிறுபான்மையின மக்களும் அவர்களின் உள்ளூராட்சி மன்றங்களின் ஆட்சி அதிகாரத்தை தேசிய மக்கள் சக்திக்கு வழங்குவதற்கு காத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

திருகோணமலை மாநகர மற்றும் கிண்ணியா நகர சபை உட்பட, மூதூர், குச்சவெளி, கிண்ணியா, தம்பலகாமம், திருகோணமலை பட்டினமும் சூழலும், கந்தளாய், சேருவில, மொறவெவ, வெருகல், பதவிசிறிபுர, கோமரங்கடவெல ஆகிய பிரதேச சபைகளுக்குமே கட்டுப்பணம் செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில், தேசிய மக்கள் சக்தியின் கிண்ணியா பிரதேச அமைப்பாளர் எம்.ஈ.முகமட் ராபிக் மற்றும் மூதூர் பிரதேச அமைப்பாளர் முஹம்மது ஷப்ரான் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

# இ.போ.ச. பஸ் - மோட்டார் சைக்கிள் மோதி விழிப்புலனற்ற மௌலவி பலி

## மற்றொருவர் படுகாயம்



(காத்தான்குடி மேலதிக செய்தியாளர்)

இலங்கை போக்குவரத்துச் சபை மட்டக்களப்பு பஸ் – மோட்டார் சைக்கிள் மோதிய விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையை நோக்கிச் சென்றுகொண்டிருந்த குறித்த பஸ் மோட்டார் சைக்கிளில் மோதுண்டதாலேயே இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லடி பாலதருகில் நேற்று(16) காலை இடம்பெற்ற இவ்விபத்தில் 43 வயதுடைய 03 பிள்ளைகளின் தந்தையும் இஸ்லாமிய மார்க்க அறிஞருமான முற்றிலும் விழிப்புலனற்ற மௌலவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தின்போது குறித்த நபரை ஏற்றி வந்த மற்றொரு மௌலவியான நபரும் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முற்றிலும் கண்பார்வையற்ற நபரான மேற்படி மௌலவி புனித அல்-குர்ஆனை மனனம் செய்த ஹாபிழுமாவார். காத்தான்குடி மொகைதீன் தைக்கா பள்ளிவாசலில் பிரதம இமாமாகக் கடமையாற்றி வரும் இவர் நேற்றுக்காலை தொழுகையை நிறைவேற்றிவிட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள தனது தந்தையைப் பார்வையிடுவதற்காக காயமடைந்த மௌலவியுடன் மோட்டார் சைக்கிளில் சென்று காத்தான்குடிக்கு திரும்பிக் கொண்டிருந்தபோதே கல்லடி பாலத்துக்கருகில் இவ்விபத்து சம்பவித்துள்ளது.

நவகிரியிலிருந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு வந்து கொண்டிருந்த பஸ் மீது குறித்த மோட்டார் சைக்கிள் மோதியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. குறித்த பஸ் சாரதி மட்டக்களப்பு தலைமையக பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். குறித்த நபரின் சடலம் தற்போது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைகளுக்காக வைக்கப்பட்டுள்ளது.

# அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆதரவாளர்கள் முஸ்லிம் காங்கிரஸில் இணைவு



(திகாமடுல்ல செய்தியாளர்)

சம்மாந்துறை பிரதேச சபைத் தேர்தலில் வீரமுனை வட்டாரத்தில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிடுகின்ற கே.ஆர்.எம். நிசாட்டின் வெற்றிக்கு உழைப்பதற்கு அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் ஆதரவாளர்கள் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸில் இணையும் நிகழ்வு கே.ஆர்.எம். நிசாட் தலைமையில் அவருடைய இல்லத்தில் சனிக்கிழமை(15) இடம்பெற்றது.

கடந்த காலங்களில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் வெற்றிக்கு உழைத்த இவர்கள் அக்கட்சியில் பெருத்தமான வேட்பாளர்கள் நியமிக்கப்படாமையின் காரணமாகவும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் சம்மாந்துறை செயற்பாட்டாளர்களின் செயற்பாடுகளில் உள்ள குறைபாடுகள் காரணமாகவும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸில் இணைந்து அக்கட்சியால் வீரமுனை வட்டாரத்தில் வேட்பாளராகப் போட்டியிடுகின்ற நிசாட்டை வெற்றிபெறச் செய்வதற்கு தன்னுடைய முழு ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்குவதற்குத் தயாராக இருப்பதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகி முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் இணைந்தவர்கள் தெரிவித்தனர்.

இவ்விணைவு நிகழ்வில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆதரவாளரான ஏ.நசார் தலைமையிலான குழுவினர் வீரமுனை வட்டாரத்தில் வேட்பாளராகப் போட்டியிடுகின்ற நிசாட்டை வெற்றிக்காக இணைத்துக்கொண்டனர்.

இந்நிகழ்வில், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஐ.எம்.மன்சூர், முன்னாள் சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினர் சட்டத்தரணி எம்.எம். செனபீர், எம்.ஐ.எம். உவைஸ் (ஸ்டார்), வீரமுனை வட்டார வேட்பாளர் எம்.ஏ.சி. உவைஸ், எம்.யூ.எம். றுமைஸ், கட்சி ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# சோழன் உலக சாதனை படைத்த 02 வயது குழந்தை துஷ்யந்தன் மஹிஷெறான் கௌரவிப்பு



(வாழைச்சேனை மேலதிக செய்தியாளர்)

அதிக ஞாபகத்திறன் மூலம் 650க்கும் மேற்பட்ட பட அட்டைகளின் பெயர்களை அடையாளம் கண்டு ஒப்புவித்து சோழன் உலக சாதனை படைத்த 02வயதும் 05மாதங்களுமான மட்டக்களப்பைச் சேர்ந்த குழந்தை துஷ்யந்தன் மஹிஷெறானைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு மட்டக்களப்பு கல்லடியில் உள்ள சுற்றுலா விடுதியில் நடைபெற்றது.

இவர் மட்டக்களப்பு, நாவற்குடாவில் வசித்து வரும் வைத்தியர் துஷ்யந்தன் தர்மசுந்தரம் மற்றும் வைத்தியர் றமாஜினி துஷ்யந்தன் ஆகியோரது குழந்தையாவார்.

சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனம் மற்றும் கதிரவன் சமூக அபிவிருத்தி நிறுவனம் என்பன இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்வில் சாதனைக் குழந்தை சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனத்தின் நடுவர்கள் முன்னிலையில் தமது ஆற்றலை வெளிப்படுத்தியிருந்தார்.

இலங்கைக்கான சோழன் உலக சாதனை புத்தக நிறுவனத்தின் துணைச் செயலாளர் கதிரவன் த.இன்பராசா தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிழக்கு மாகாண சபை பிரதி பிரதம செயலாளர் மு.கோபாலரெத்தினம் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினர்களாக அருட்பணி அ.யேசுதாசன், கிழக்கு பல்கலைக்கழகம் சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகப் பணிப்பாளர் பேராசிரியர் பாரதி கென்னடி, மட்டக்களப்பு தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் மா.சோமசூரியம், கண்ணகி கலை இலக்கிய கூடல் தலைவர் செங்கதிரோன் த.கோபாலகிருஷ்ணன் மற்றும் அதிபர் அ.குலேந்திரராஜா உட்பட பல்வேறு உயரதிகாரிகள் கலந்துகொண்டு சாதனைக் குழந்தையைப் பாராட்டிக் கௌரவித்தனர்.

இதன்போது சோழன் உலக சாதனை தங்கப் பதக்கம், சட்டகம் செய்யப்பட்ட சான்றிதழ், சோழன் சின்னம், சோழன் உலக சாதனை விபரம் அடங்கிய கோவை மற்றும் நினைவுக் கேடயம் என்பன வழங்கி சாதனைக் குழந்தை கௌரவிக்கப்பட்டார்.



சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் பைத்துல் ஸகாத் நிதியத்தால் இவ்வாண்டும் (2025) பைத்துல் ஸகாத் வழங்கும் நிகழ்வு அண்மையில் (13) சாய்ந்தமருது பள்ளிவாசலில் இடம்பெற்றது. பைத்துல் ஸகாத் நிதியத்தின் தலைவர் மௌலவி ஐ.எல்.எம்.ரஃபீ தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆப் பள்ளிவாசலின் புதிய நம்பிக்கையாளர் சபைத் தலைவர் டாக்டர் எம்.எச். சனூஸ் காரியப்பர் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். (பொலிவேரியன் செய்தியாளர்)



விவசாயப் பயிர்களுக்கு சேதம் விளைவிக்கும் வன உயிரினங்கள் பற்றிய கணக்கெடுப்பு சனிக்கிழமை(15) இடம்பெற்றது. இதன்போது தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கோயிலடி கிராம சேவகர் பிரிவிலும் இச்செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது. விவசாய அமைச்சு ஊடாக குறித்த நடவடிக்கையானது தேசிய ரீதியில் இடம்பெற்று வருகின்ற நிலையில், இதன்போது வழங்கப்பட்டட்ட குறித்த படிவம் பூரணப்படுத்தப்பட்டு உரிய உத்தியோகத்தரிடத்தில் கையளிக்கப்பட்டது. (கிண்ணியா செய்தியாளர்)

# ஊடகவியலாளர்களை உள்ளடக்கிய பொது அமைப்புகள் தேர்தலில் போட்டி

## ஊடகர் அறூஸ் தலைமையில் கட்டுப்பணம்

(பாறுக் ஷிஹான்)



நுஜா ஊடக அமைப்பு மற்றும் பல பொது அமைப்புகளை முன்னிலைப்படுத்தி அட்டாளைச்சேனை பிரதேச சபைக்கு சுயேச்சைக் குழுவில் போட்டியிடுவதற்காக வெள்ளிக் கிழமை(14) அம்பாறை மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் காரியாலயத்தில் கட்டுப்பணம் செலுத்தப்பட்டது.

நுஜா ஊடக அமைப்பின் தலைவரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான எஸ்.எம். அறூஸ் தலைமையில் சுயேச்சைக் குழுவுக்கான கட்டுப்பணம் செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்க ததாகும். இதன்போது சுயேச்சைக் குழுவின் ஆலம் குளம் இணைப்பாளரும் எஸ்டோ அமைப்பின் கள உத்தியோகத்தருமான சப்ராஸ் பங்கேற்றிருந்தார்.

குறித்த சுயேச்சைக் குழுவில் சிரேஷ்ட ஊடகவியலாளர்கள், சமூக சேவையாளர்கள் பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள், உலமாக்கள், இளைஞர்கள் என பலரும் போட்டியிடுகின்றனர். ஊழல், மோசடியில்லாத சிறந்த நிர்வாக ஆட்சியைக் கொண்டுவர வேண்டுமென்ற பெரும் எதிர்பார்ப்பில் தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்துள்ளதாக சுயேச்சைக் குழுவின் முதன்மை வேட்பாளர் அறூஸ் தெரிவித்ததுடன் நிச்சயமாக அட்டாளைச் சேனை பிரதேச சபைக்கு தமது அணியிலிருந்து பலரும் உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்படுவதற்கான வாய்ப்புள்ளதாகவும் மக்கள் மாற்றத்தை எதிர்பார்த்துள் ளதாகவும் மேலும் தெரிவித்தார்.

# சந்திவெளி காட்டுப்பகுதியில் உயிரிழந்த ஆண் சிசு மீட்பு

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு, சந்திவெளி பொலிஸ் பிரிவிலுள்ள மொறக்கொட்டான்சேனை காட்டையண்டிய பகுதியில் வீசப்பட்ட நிலையில் ஆண் குழந்தையொன்றை சனிக்கிழமை (15) காலை மீட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த குழந்தையை உரப்பையில் கட்டிக் கொண்டு சென்று அதனை சந்திவெளி பொலிஸ் நிலையத்திலிருந்து சுமார் 03 கிலோமீற்றர் தூரம் கொண்ட மொறக்கொட்டான்சேனை காட்டையண்டிய பகுதியில் வீசிவிட்டுச் சென்றுள்ள நிலையில் சம்பவதினம் காலை 9.00 மணியளவில் சடலமொன்று இருப்பதைக் கண்டு பொதுமக்கள் பொலிஸாருக்கு தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து, பொலிஸார் நீதிமன்ற உத்தரவைப் பெற்று சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்கு வைத்தியசாலையில் ஒப்படைப் பதற்கான நடவடிக்கையில் ஈடுபட் டதுடன் குறித்த குழந்தை சம்பவதினமே பிறந்துள்ளதாகவும் குழந்தையைப் பெற்றெடுத்து இவ்வாறு வீசிச் சென்ற பெண்ணைத் தேடிவருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சந்திவெளி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.



கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரிவில் சுகாதார வைத்திய அதிகாரி ஏ.எம்.எம்.அஜீத் தலைமையிலான பொதுச் சுகாதாரப் பரிசோதகர் குழுவினர் தைபோயிற்று காய்ச்சலை தடுப்பதற்கான தடுப்பூசி ஏற்றல் நிகழ்வு சனிக்கிழமை (15) நடைபெற்றது. இதன்போது கிண்ணியா பிரதேசத்திலுள்ள சகல உணவகங்களிலும் கடமையாற்றுவோருக்கு இத்தடுப்பூசி ஏற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (தம்பலகாமம் செய்தியாளர்)

# சக மாணவியை காதலிப்பதாக தெரிவித்த மாணவன்: கண்டித்த அதிபருக்கு எதிராக பொலிஸில் முறைப்பாடு

(கனகராசா சரவணன்)

பாடசாலையொன்றில் தரம் 10இல் கல்விகற்கும் மாணவியொருவரைக் காதலிப்பதாகத் தெரிவித்த அதே வகுப்பில் கல்விகற்கும் சக மாணவனை அதிபர் பிரம்பால் கண்டித்ததையடுத்து மாணவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன் அதிபருக்கெதிராக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் செய்துள்ள சம்பவம் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பாடசாலையொன்றில் வெள்ளிக்கிழமை (14) இடம்பெற்றுள்ளதாக அந்தப் பிரதேச பொலிஸ் நிலையப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதுபற்றித் தெரியவருவதாவது, குறித்த பாடசாலை ஆண், பெண் பிள்ளைகள் கற்றுவரும் கலவன் பாடசாலை. சம்பவதினம் குறித்த பாடசாலையில் தரம் 10இல் கல்விகற்றுவரும் மாணவியொருவரைப் பார்த்து அதே வகுப்பில் கல்விகற்றுவரும் மாணவன் காதலிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, குறித்த மாணவி பாடசாலை அதிபரிடம் சென்று சம்பவம் தொடர்பில் முறைப்பாடு செய்ததையடுத்து அதிபர் குறித்த மாணவனை தனது காரியாலயத்துக்கு வரவழைத்து பிரம்பால் மாணவன் மீது இரண்டு அடி கொடுத்து ஒழுக்கமாக நடக்குமாறு தெரிவித்து எச்சரித்து அனுப்பியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து வீட்டுக்குச் சென்ற மாணவன் அதிபர் தனக்கு அடித்துள்ளார் எனத் தெரிவித்ததையடுத்து மாணவனை பெற்றோர் மட்டு. போதனா வைத்தியசாலையில் அனுமதித்ததுடன் அதிபருக்கெதிராக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து அதிபரை விசாரணைக்கு அழைத்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சிறுவர் பெண்கள் பிரிவுப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# திருமலையில் 13 உள்ளூராட்சி மன்றங்களுக்கு கட்டுப்பணம் செலுத்தியது ஐக்கிய மக்கள் சக்தி

(சீனக்குடா செய்தியாளர்)

திருகோணமலை மாவட்டத்தின் 13 உள்ளூராட்சி மன்றங்களுக்கும் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான கட்டுப்பணம் திருகோணமலை மாவட்டத் தேர்தல் அலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (14) செலுத்தப்பட்டது.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த திருகோணமலை மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப்,

''மக்களுடைய அபிலாஷைகளையும் எண்ணங்களையும் நாடிபிடித்து அறிந்து கொண்டுதான் இந்த மாவட்டத்திலுள்ள 13 உள்ளூராட்சி சபைகளிலும் நாங்கள் தனித்து போட்டியிடுகின்றோம். எங்களுடைய வேட்பாளர் பட்டியலில் இளைஞர்கள், பெண்கள், படித்தவர்களுக்கு இடம் கொடுத்திருக்கிறோம். இதன்மூலம் பெரும்பாலான சபைகளை நாங்கள் கைப்பற்றக்கூடிய சாதக நிலைமை தோன்றியிருக்கின்றது.

ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களில் மாற்றத்தை எதிர்பார்த்து வாக்களித்த மக்களுக்கு கிடைத்திருப்பது ஏமாற்றமே. இந்நிலையில், மக்கள் எதிர்பார்க்கின்ற மாற்றங்களை கிராமங்களிலிருந்து ஐக்கிய மக்கள் சக்தி ஆரம்பித்து வைக்குமென்பதை



எமது வாக்காளர்களுக்கு சொல்லிவைக்க விரும்புகிறோம்'' - என்றும் அவர் தெரிவித்தார்.

திருகோணமலை மாநகர மற்றும் கிண்ணியா நகர சபை ஆகிய உள்ளூராட்சி மன்றங்களுக்கும் மூதூர், குச்சவெளி, கிண்ணியா, தம்பலகாமம் , திருகோணமல பட்டிணமும் சூழலும், கந்தளாய், சேருவில, மொறவெவ, வெருகல், பதவிசிறிபுர மற்றும் கோமரங்கடவெல ஆகிய பிரதேச சபைகளுக்குமே ஐக்கிய மக்கள் சக்தியால் கட்டுப்பணம் செலுத்தப்பட்டது.

# மு.கா.தேசியப் பட்டியல் வெற்றிடம்; உள்ளூராட்சித் தேர்தலில் செல்வாக்கை நிரூபிப்பவருக்கே முன்னுரிமை

## செயலாளர் நிஸாம் காரியப்பர் தெரிவிப்பு

(அஸ்லம் எஸ்.மௌலானா)



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியப்பட்டியல் எம்.பி. பதவியானது குறைந்தபட்சம் ஐந்து பிரதேசங்களுக்கு தலா ஒரு வருடம் என்ற அடிப்படையில் சுழற்சி முறையில் வழங்கப்படுமென்பதுடன், இந்த உள்ளூராட்சித் தேர்தலில் செல்வாக்கை நிரூபிப்பவருக்கே முன்னுரிமை வழங்கப்படுமென்றும் அக்கட்சியின் செயலாளர் நாயகமும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.நிஸாம் காரியப்பர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், ''எமது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.நளீம் தன்னுடைய பதவியை இராஜிநாமா செய்த விவகாரம் முஸ்லிம் காங்கிரஸின் சரித்திரத்தில் மாத்திரமல்ல, இலங்கை அரசியல் சரித்திரத்திலும் ஒரு தாக்கத்தை உருவாக்கியிருக்கிறது.

இது கட்சிக்கும் மக்களுக்கும் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுகின்ற விடயத்தில் முன்னுதாரணமாக அமைந்திருப்பது மாத்திரமல்ல, முஸ்லிம் காங்கிரஸ் சரித்திரத்தில் கட்சியின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு தனக்கு வழங்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் பதவியை 04 மாதங்களுக்குள் இராஜிநாமா செய்த முதல் சந்தர்ப்பமுமாகும்.

இதனால் இக்கட்சியின் செயலாளர் என்ற வகையில் நான் மிகவும் பெருமிதமடைந்துள்ளேன். கட்சி சார்பாக அவருக்கு நன்றி தெரிவிக்க நான் கடமைப்பட்டுள்ளேன்.

மேலும் இந்தப் பாராளுமன்ற உறுப்பினர் வெற்றிடம் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடியும் வரை நிரப்பப்பட மாட்டாது. அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் பாராளுமன்ற உறுப்பினர் பதவி தங்களுக்கு அல்லது தங்களது பிரதேசத்துக்கு வழங்கப்படவேண்டுமென்று எதிர்பார்ப்பவர்கள் இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தங்களுடைய செல்வாக்கை கட்சிக்கு நிரூபித்துக்காட்ட வேண்டும்.

அதாவது, இதனை எதிர்பார்க்கும் கட்சி உறுப்பினர்கள் அந்தந்தப் பிரதேசத்தில் போட்டியிட்டு, வெற்றி பெற்று, அதிகாரத்தை நிலைநாட்டி தங்களுக்கும் தங்களுடைய பிரதேசத்துக்கும் இப்பதவி வழங்கப்படுவதற்கு நியாயபூர்வமான உரித்துள்ளது என்பதை நிரூபிக்க வேண்டும்''- என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

# பெண் வைத்தியர் துஷ்பிரயோகம் பெண்கள் தின மாதத்தின் கரிநாள்

## மன்னார் பெண்கள் வலையமைப்பு பிரதமருக்கு கடிதம்




(பு.கஜிந்தன்)

அநுராதபுரத்தில் 2025.03.10ஆம் திகதி பெண் வைத்தியருக்கு நடைபெற்ற பாலியல் துஷ்பிரயோகத்தைக் கண்டித்தும் பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கோரியும் மன்னார் பெண்கள் வலையமைப்பு கூட்டாக பிரதமருக்கு எழுத்துமூலம் கடிதம் அனுப்பியுள்ளது.

குறித்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

''நாங்கள் அனைவரும் இன்று துயரமான இதயங்களுடன் உங்கள் முன், இலங்கை முழுவதையும் உலுக்கிய சம்பவம் தொடர்பாக எடுத்துரைப்பதற்கு ஒன்றுகூடியுள்ளோம். அநுராதபுரத்தில் பணியாற்றும் பெண் வைத்தியருக்கு இராணுவத்திலிருந்து தப்பியோடிய இராணுவச் சிப்பாயால் கத்தி முனையில் இழைக்கப்பட்ட துஷ்பிரயோகம் என்பது ஒரு தனிமனிதன் மீதான வன்முறையல்ல. மாறாக, இது இலங்கையில் வாழுகின்ற ஒட்டுமொத்தப் பெண்களினதும் கண்ணியம், பாதுகாப்பு, நம்பிக்கை மீது இழைக்கப்பட்ட குற்றச்செயலாகும்.

இந்தக்கொடூரமான துஷ்பிரயோகமானது பெண்கள் நலிந்த நிலையில் உள்ளார்கள் என்பதை எடுத்துரைக்கின்றது. அத்துடன், இது சாதாரணப் பெண்களுக்கு மட்டுமல்ல, தங்களது வாழ்க்கையை ஏனையவர்களின் உயிர்களைக் காப்பாற்ற தங்களை அர்ப்பணித்த வைத்தியமாது மீதும் நடந்தேறியுள்ளதென்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும்.

பெண்களாகிய நாங்கள் வலிமையான மற்றும் உடனடியான மேன்முறையீட்டை முன்வைக்கின்றோம். இந்தப் பாரதூரமான குற்றச்செயலைப் புரிந்த கொடும்பாவி சட்டத்தின் கீழ் மிகவும் கொடூரமான முறையில் தண்டிக்கப்படவேண்டும்.

இந்தச் சம்பவத்துக்கான நீதி உடனடியாகவும் கடுமையாகவும் எவ்வித காலதாமதமின்றியும் எதுவித இணக்கப்பாடுகளுமின்றியும் வழங்கப்படவேண்டும். இது ஒரு சம்பவம் தொடர்பானதல்ல.

மாறாக, இதன் மூலம் ஒரு தெளிவான கருத்து முன்வைக்கப்படவேண்டும். அதாவது, இலங்கையில் இவ்விதமான பாரதூரமான செயல்கள் மற்றும் பெண்களுக்கெதிரான வன்முறைகள் எவ்விதத்திலும் பொறுத்துக் கொள்ளப்படமாட்டாது என்பதாகும்.

பெண்களுக்கான பாதுகாப்பு மற்றும் நீதி முதன்மைப்படுத்தப்படவேண்டும். சட்ட நடைமுறைகள் மீள் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும்.

இதில் ஆறாத்துயரமாக அமைவது மார்ச் மாதம் உலகளாவிய ரீதியில் அனைத்துப் பெண்களையும் மேன்மைப்படுத்தவும் பாராட்டவும் அவர்களது சேவைகளுக்காக நன்றி செலுத்தவும் என்பதுடன், மார்ச் மாதம் 8ஆம் திகதி சர்வதேச மகளிர் தினமாக அனுஷ்டிக்கப்பட்டும் வருகின்றது.

சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்பட்டு இருதினங்கள் கடந்த நிலையில் இந்த நெஞ்சை உலுக்கும் சம்பவம் நடைபெற்றமை மிகுந்த வேதனையளிக்கின்றது. மேலும், இந்நிகழ்வு மார்ச் மாதத்தின் கொண்டாட்டங்களில் ஒரு காரிருளைப் படரச்செய்துள்ளது.

நாடளாவிய ரீதியில் பெண்களின் மனதில் கடும் கோபத்தையும் துயரத்தையும் ஏற்படுத்தியுள்ளது. உண்மையில் சொல்லப்போனால் பெண்கள் மார்ச் மாதத்தில் மட்டுமல்ல மாறாக அவர்களது வாழ்நாளில் ஒவ்வொரு நாளும் மதிக்கப்படவும் கொண்டாடப்படவும் பாதுகாக்கப்படவும் வேண்டியவர்கள்.

இந்த துயரமான சம்பவம் பெண்களாகிய நாங்கள் சமஉரிமைக்காகவும் நீதிக்காகவும் இன்னும் நீண்டதூரம் பயணிக்க வேணடியுள்ளதென்பதை உணர்த்துகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் கொந்தளிப்பை ஏற்படுத்தக்கூடிய விடயம், இந்தச் குற்றச்செயலில் ஈடுபட்ட நபர் இராணுவத்திலிருந்து தப்பியோடி வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சமகாலங்களில் நடைபெறுகின்ற குற்றச்செயல்களை உற்று நோக்குகின்றபோது காணக்கூடியது யாதெனில், இவ்வாறாக இராணுவத்திலிருந்து தப்பியோடிய நபர்களால் சமூகங்களில் இழைக்கப்படுகின்ற குற்றச்செயல்களில் பெரும்பங்கை வகிக்கின்றனர். இந்த இழிவான செயல்கள் ஆயுதம் தாங்கி பாதுகாப்பில் ஈடுபடுகின்றவர்களின் பொறுப்புடைமையையும் ஒழுக்கத்தையும் கேள்விக்குறியாக்குகின்றது. இந்நிலையில், அப்பாதுகாப்புத்துறையில் பணிபுரியும் தனிநபர்கள் இவ்வாறான கொடூரமான குற்றச்செயல்களில் ஈடுபடும்போது இலங்கையில் வாழ்கின்ற மக்கள் எவ்வாறு பாதுகாப்புத்துறையின் மீது நம்பிக்கை கொள்ளமுடியும்?

இலங்கை அரசாங்கம் இந்தத் தப்பியோடிய இராணுத்தினர் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு எதிர்வரும் காலங்களில் இவ்வாறான குற்றச்செயல்கள் நடைபெறுவதை முற்றாகத் தவிர்க்கவேண்டுமென்பதை நாங்கள் வலியுறுத்துகின்றோம்'' என குறித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஹெரோயினுடன் ஒருவர் கைது

(அநுராதபுரம் நிருபர்)

முச்சக்கரவண்டியொன்றில் போதைப்பொருட்களை எடுத்துச்சென்ற சந்தேக நபரொருவரை அநுராதபுரம் வலயக் குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

வலயக் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாருக்கு கிடைத்த தகவலொன்றுக்கமைய நேற்று முன்தினம் (15) அநுராதபுரம் பொலிஸ் பிரிவின் நீராவிய பகுதியில் நடத்திய சுற்றிவளைப்பின்போதே சந்தேக நபரை கைதுசெய்துள்ளனர்.

மேலும் 101 கிராம் 20 மில்லிகிராம் நிறையுடைய ஹெரோயின் போதைப் பொருட்களை கைப்பற்றியுள்ளதுடன், முச்சக்கர வண்டியையும் வலய குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர் 41 வயதுடைய அநுராதபுரம், திசாவெவ பகுதியை வசிப்பிடமாகக் கொண்டவரென்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் வலய குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# 70 வயதுக்கு மேற்பட்ட முதியோருக்கு 3,000 ரூபா உதவித்தொகை இம்மாதத்தில்

முதியோருக்கு வழங்கப்படும் 3,000 ரூபா கொடுப்பனவு மார்ச் 20ஆம் திகதியிலிருந்து செலுத்தப்படுமென கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சு அறிவித்துள்ளது.

அஸ்வெசும குடும்பங்களில் உள்ள 70 வயதுக்கும் மேற்பட்ட முதியோர்களுக்காக 2024 ஆண்டின் நவம்பர் மாதத்திலிருந்து நலன்புரி பயனாளிகள் சபையால் நேரடியாக ஸ்லிப்முறையூடாக அஸ்வெசும கணக்குகளுக்கு சம்பந்தப்பட்ட தொகை வைப்பிலிடப்பட்டதாக கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சு அறிவித்துள்ளது.

அதன்படி அஸ்வெசும குடும்பங்களில் உள்ள முதியவர்கள் தவிர்ந்த இதுவரை கொடுப்பனவு பெற்றுவரும் முதியவர்களுக்கு மாத்திரம் தபால்/ உபதபால் அலுவலகங்களூடாக கொடுப்பனவுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், 2025 மார்ச் மாதக் கொடுப்பனவு மற்றும் மீதிக் கொடுப்பனவு தபால்/ உபதபால் அலுவலகங்களூடாக மார்ச் 20ஆம் திகதியிலிருந்து செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது.



நோன்பு காலத்தை முன்னிட்டு வருமானம் குறைந்த சுமார் 200க்கும் மேற்பட்ட தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வு இளம் முஸ்லிம் மாதர் அமைப்பின் தலைவி பவாஸா தாஹா தலைமையில் தெமட்டகொட வை.எம்.எம்.ஏ. தலைமைக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் (15) இடம்பெற்றது. (ஏ.எஸ்.எம்.ஜாவித்)

# கிளீன் ஸ்ரீலங்கா திட்டத்தின் கீழ் நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாக்கும் வேலைத்திட்டம்



உலக நுகர்வோர் உரிமை தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் (15) நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக சமூகத்துக்குள் அணுகுமுறைகளை மேம்படுத்தும் வேலைத்திட்டமொன்றை 'கிளீன் ஸ்ரீலங்கா'வின் கீழ் முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

அது தொடர்பிலான கலந்துரையாடல் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க தலைமையில் சுகாதார மற்றும் விவசாய அமைச்சுகளின் அதிகாரிகளுடன் நேற்று முன்தினம் (15) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, பிரஜைகளுக்கு தரமான மற்றும் பாதுகாப்பான உணவு வேளையை வழங்குவதற்காக சுகாதார அமைச்சிடமுள்ள கொள்கை மற்றும் திட்டங்களை செயற்படுத்த வேண்டுமெனத் தெரிவித்தார்.

தரமான மற்றும் சுகாதாரப் பாதுகாப்புடன் கூடிய உணவு வேளையைப் பெற்றுக்கொள்வதற்கு நுகர்வோர் கொண்டிருக்கும் உரிமை தொடர்பில் இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், சுகாதார தரங்களுக்கமைவாக உணவுகளைப் பெற்றுக்கொள்வதற்கான சூழலை உருவாக்குதல், நுகர்வோர் நம்பிக்கையைப் பலப்படுத்த எடுக்கவேண்டிய நடவடிக்கைகள், அது தொடர்பாக அரச மற்றும் தனியார் துறை ஒத்துழைப்புகளைப் பலப்படுத்துவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

உணவு தரப்படுத்தல் மற்றும் தரமாக்கலுக்காக நாட்டில் காணப்படும் கொள்கை மற்றும் திட்டங்களை 'கிளீன் ஸ்ரீலங்கா'வேலைத்திட்டத்தினூடாக நடைமுறைக்கு கொண்டு வருவது தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

விவசாய அமைச்சின் தேசிய இலக்கை அடைந்துகொள்ளல், உற்பத்தி பயிர்களை பாதுகாத்தல் மற்றும் களஞ்சியப்படுத்தலுக்காக 'கிளீன் ஸ்ரீலங்கா" வேலைத்திட்டத்தை ஒருங்கிணைத்தல் தொடர்பிலும் கவனஞ்செலுத்தப்பட்டது. உணவகங்களுக்கு சான்றிதழ் அளித்தல், வீதியோர வியாபாரிகளை வரையறுத்தல்,வீதியோர உணவகங்கள் மற்றும் வண்டிகளைப் பதிவு செய்தல், நபர்களின் பயிற்சி பதிவு தொடர்பில் தற்போது காணப்படும் சட்டத்தை நடைமுறைப்படுத்தல் தொடர்பிலும் இதன்போது கவனஞ்செலுத்தப்பட்டது.

ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ஜீ.எம்.ஆர்.டி.அபோன்ஸு, மேலதிக செயலாளர் எஸ்.பீ.சீ.சுகீஷ்வர ஆகியோரும் விவசாய மற்றும் சுகாதார அமைச்சின் அதிகாரிகளும் இதில் கலந்துகொண்டிருந்தனர்.

அரச நிர்வாக,மாகாண சபைகள், உள்ளூராட்சி சபைகள் அமைச்சு, சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு, விவசாய, கால்நடை வளங்கள் மற்றும் நீர்ப்பாசன அமைச்சு, வர்த்தக,வாணிப,உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு, உணவு ஆணையாளர் திணைக்களம்,விவசாயத் திணைக்களம், சுகாதார சேவைத் திணைக்களம், நுகர்வோர் அதிகார சபை, இலங்கை தரப்படுத்தல் நிறுவனம், தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை, கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம், மத்திய சுற்றாடல் அதிகாரசபை, தேசிய உணவு மேம்பாட்டு சபை, அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம் என்பவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகளும் இதில் கலந்துகொண்டனர்.

# முல்லை மஹ்பூப் சுபுஹானி ஜும்ஆ பள்ளியில் இப்தார் நிகழ்வில் பங்கேற்றார் ரவிகரன் எம்.பி.



(விஜயரத்தினம் சரவணன்)

முல்லைத்தீவு நகர்ப்பகுதியில் அமைந்துள்ள மஹ்பூப் சுபுஹானி ஜும்ஆ பள்ளிவாசலில் மௌலவி பாஷிமாம் முகமது அப்துல் காதர் ஜாஸ்மின் தலைமையில் இப்தார் நிகழ்வு மிகச் சிறப்பாக இடம்பெற்றது.

இந்நிலையில், பள்ளிவாசல் நிர்வாகத்தினரின் அழைப்பை ஏற்று வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் குறித்த இப்தார் நிகழ்வில் கலந்துகொண்டார்.

# தமிழன் வணிக உலகம்

Thamilan Business World

www.thamilan.lk businessthamilan@gmail.com

## வங்கிக்காப்புறுதித் துறையில் மிகச்சிறந்த 20 வருட சிறப்பைக் கொண்டாடும் AIA



இலங்கையில் வங்கிக்காப்புறுதித் துறையில் முன்னோடியான AIA இன்சூரன்ஸ் சமீபத்தில் இத்துறையில் 20 ஆண்டுகாலச் சிறப்பைக் கொண்டாடியிருந்ததுடன் அதன் வங்கிப் பங்காளர்கள், தரகர் கூட்டாளர்கள் மற்றும் AIA இன் கூட்டாண்மை விநியோகப் பிரிவு மற்றும் சிரேஷ்ட நிர்வாகத்தினருக்காக ஒரு கவர்ச்சிகரமான நிகழ்வையும் நடத்தியிருந்தது. 'கூட்டாண்மை விநியோகத்தின் 20 ஆண்டுகள்' சாதனையைக் கௌரவிக்கும் இந்த நிகழ்வானது கொழும்பிலுள்ள சினமன் லைஃப் சிட்டி ஒஃப் ட்ரீம்ஸில் இடம்பெற்றிருந்தது.

இந்த முக்கிய சிறப்பான நிகழ்வைக் கொண்டாடும் வகையில் AIA இன்சூரன்ஸ் கூட்டாண்மை விநியோகத்தில் இரண்டு தசாப்த கால வெற்றியைப் பதிவுசெய்து 'பரிபூரணத்தை முயற்சித்தல்' (In Pursuit of Perfection) எனும் தலைப்பிலான வெளியீட்டின் முன்னோட்டத்தையும் வெளியிட்டிருந்தது. இலங்கையில் வங்கிக்காப்புறுதி மற்றும் காப்புறுதித் துறையில் இது இவ்வாறான முதலாவது நிகழ்வாகும். மேலும் இந்த வெளியீடானது இந்த ஆண்டின் பிற்பகுதியில் வெளியிடப்படவுமுள்ளது.

AIA இன்சூரன்ஸின் மீது NDB வங்கி, DFCC வங்கி, கொமர்ஷல் வங்கி, அதேபோல் NDB வெல்த் மெனஜ்மென்ட், பான் ஆசியா வங்கி மற்றும் தரகர் பங்காளர்கள் வைத்திருக்கும் நம்பிக்கை மற்றும் ஆதரவுக்காக நிறுவனம் நன்றி தெரிவிக்கும் அதேவேளை, AIA காப்புறுதித் துறைக்கு புதிய தரநிலைகளை அமைத்து வங்கிக்காப்புறுதிக் கூட்டாண்மை விநியோகத்தில் தொடர்ந்தும் முன்னணியில் உள்ளது.

## (Warrant) செயன்முறையை டிஜிட்டல் மயப்படுத்தும் SLT-MOBITEL - இலங்கை ரயில் திணைக்களம்



அனைவருக்கும் டிஜிட்டல் தீர்வுகள் கிடைப்பதை உறுதிசெய்யும் வகையில் SLT-MOBITEL, இலங்கை ரயில் திணைக்களம் மற்றும் ஓய்வூதிய திணைக்களம் ஆகியன இணைந்து ஓய்வூதியம் பெறுவோருக்கு தமது ரயில் பயணங்களை இலகுவாகப் பதிவு செய்துகொள்ளக்கூடிய வகையில், SLT-MOBITEL இன் நவீன வசதிகள் படைத்த mTicketing கட்டமைப்பில் ஓய்வூதியம் பெறுவோருக்கான ரயில் அனுமதிப்பத்திரங்கள் (warrant) செயன்முறையை ஒன்றிணைத்துள்ளன.

ஓய்வூதியம் பெறுவோருக்கான ரயில் அனுமதிப்பத்திரங்கள் (warrant) டிஜிட்டல் மயப்படுத்தி அறிமுகம் செய்யும் நிகழ்வு அண்மையில் கொழும்பு பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இதில் அரச நிறுவனங்கள், இலங்கை ரயில் திணைக்களம், ஓய்வூதிய திணைக்களம் மற்றும் SLT-MOBITEL ஆகியவற்றின் சிரேஷ்ட பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

முன்னர், SLT-MOBITEL இன் சகல வசதிகளையும் கொண்ட டிஜிட்டல் கட்டமைப்பினூடாக பொது மற்றும் அரச சேவையாளர்களுக்கு டிக்கெட்டுகளை ஒன்லைனில் முற்பதிவு செய்து கொள்ளும் வகையில் eTickets மற்றும் eWarrant வசதி வழங்கப்பட்டது. இலங்கையில் ரயில் சேவைகளை நவீனமயப்படுத்துவதில் முக்கிய முன்னேற்றமாக தற்போது ஓய்வூதியம் பெறுவோருக்கும் தமது இல்லங்களில் சௌகரியமாக இருந்தவாறே டிஜிட்டல் கட்டமைப்பினூடாக பயணச் சீட்டுகளை சுலபமாக முற்பதிவு செய்து கொள்ளலாம்.

தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குனர் எனும் வகையில் SLT-MOBITEL, தேசத்தின் ஓய்வூதியம் பெறுவோ ருக்காக டிஜிட்டல் தீர்வுகளை வழங்குவதையிட்டு பெருமைகொள் கின்றது. டிஜிட்டல் மாற்றியமைப்பு செயற்பாடுகளுக்கான நிறுவனத்தின் அர்ப்பணிப்பை இந்தத் திட்டம் வெளிப்படுத்துவதுடன், ஓய்வூதியம் பெறுவோர், நாட்டுக்காக பல வருடங்களாக ஆற்றியுள்ள சேவைக்கான நன்றியை வெளிப்படுத்தும் வகையிலும் அமைந்துள்ளது.

## ICC விருதுகள் 2024 இல் சிறந்த ஆயுள் காப்புறுதி சேவை வழங்குனராக யூனியன் அஷ்யூரன்ஸ் தெரிவு

இலங்கையின் முன்னணி ஆயுள் காப்புறுதி சேவை வழங்குனரான யூனியன் அஷ்யூரன்ஸ், 5ஆவது Emerging Asia Insurance Conclave & Awards 2024 நிகழ்வில் இலங்கையின் சிறந்த ஆயுள் காப்புறுதி நிறுவனம் எனும் விருதைச் சுவீகரித்தது. இந்தியாவின் வர்த்தக சம்மேளனத்தினால் (ICC), தாய்லாந்தின், பாங்கொக்கில் முன்னெடுக்கப்பட்ட இந்நிகழ்வினூடாக ஆசியாவைச் சேர்ந்த முன்னணி காப்புறுதி நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்ட புத்தாக்கம், நிலைபேறாண்மை மற்றும் ஆயுள் காப்புறுதி தீர்வுகளின் சகாயத்தன்மை போன்ற முயற்சிகள் கொண்டாடப்பட்டிருந்தன.



இந்த உயர் கௌரவிப்பினூடாக நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, சிறந்த வாடிக்கையாளர் மையப்படுத்திய தீர்வுகளினூடாக இலங்கையின் ஆயுள் காப்புறுதித் துறையை மாற்றியமைப்பதற்கான யூனியன் அஷ்யூரன்ஸ் நிறுவனத்தின் ஒப்பற்ற அர்ப்பணிப்பு மேலும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

## தசாப்தகால பராமரிப்புப் பணியைக் கொண்டாடும் லங்கா ஹொஸ்பிடல்ஸ் மகளிர் நல மையம்



லங்கா ஹொஸ்பிடல்ஸ் அதன் மகளிர் நல மையத்தை (Women's Wellness Centre - WWC) பெண்களின் சுகவாழ்வைப் பேணுவதிலான விசேடத்துவத்தின் ஒரு தசாப்தத்தை நெருங்கி இவ்வேளையில், சர்வதேச மகளிர் தினத்தைக் கொண்டாடும் ஒரு முக்கியமான தருணத்தை இணைக்கிறது. இது வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் பெண்களின் தனித்துவமான தேவைகளுக்கேற்ப உலகத்தரம் வாய்ந்த சுகாதார சேவையை வழங்குவதில் லங்கா ஹொஸ்பிடல்ஸ் மருத்துவமனை கொண்டுள்ள தொடர்ச்சியான அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுகிறது.

முதன் முதலில் 2016 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட மகளிர் நல மையமானது, முழுமையான சுகாதார சேவைகளின் நம்பகமான வழங்குநராக இருந்து வருகிறது. முழுமையான நோய் கண்டறிதல் பொதிகள்,மேம்பட்ட நோயறிதல் மற்றும் அதற்கான சிகிச்சைத்தெரிவு வசதிகளை இது வழங்குகிறது. இந்த முக்கிய தருணத்தில் மேம்படுத்தப்பட்ட மருத்துவ தொழில் நுட்பங்கள், பரந்த அளவிலான விசேட சேவைகள், வசதியான மற்றும் பிரத்தியேகமான சூழலில் பெண்களுக்கான உலகத்தரம் வாய்ந்த சுகாதாரப் பராமரிப்பு சேவைகளை வழங்க வடிவமைக்கப்பட்ட, நோயாளிகளின் தேவைகளை கருத்திற்கொண்டு அவர்களை மையமாகக் கொண்ட அணுகு முறையை WWC அறிமுகப் படுத்துகிறது.

இந்தப் பிரத்தியேக சலுகைகளைப் பயன்படுத்திக் கொள்ளவும் தங்கள் உடல்நலன் மற்றும் சுகவாழ்வுக்கு முன்னுரிமையளித்து, லங்கா ஹொஸ்பிடல்ஸ் மகளிர் சுகவாழ்வு மையத்தைப் பார்வையிடுமாறு பெண்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இது தொடர்பான மேலதிக தகவல்கள் மற்றும் சந்திப்புகளை மேற்கொள்ள +94 11 543 1106, +94 11 543 1103, +94 11 543 1104 ஆகிய தொலைபேசிகளூடாக அல்லது லங்கா ஹொஸ்பிடல்ஸ் மருத்துவமனைக்கு நேரடியாக விஜயம் செய்வதன் மூலம் அறிந்துகொள்ளலாம்.

## INTREPID பிரயாண சர்வதேச நிகழ்வு இலங்கையில் வெற்றிகரமாக முன்னெடுப்பு



உலகின் மாபெரும் சாகச பிரயாண ஏற்பாட்டு நிறுவனமான Intrepid Travel, தனது மாபெரும் சர்வதேச மாநாட்டு நிகழ்வை இலங்கையில் (பெப்ரவரி 24 - 27) வெற்றிகரமாக ஏற்பாடு செய்திருந்தது. இதில் 50 நாடுகளைச் சேர்ந்த 200 சர்வதேச அணியினரை அழைத்து வந்திருந்ததுடன், 300 உள்நாட்டு அணி அங்கத்தவர்களும் ஈடுபட்டிருந்தனர். இந்நிகழ்வு சுமார ஒரு வாரம் வரை நடைபெற்றதுடன், கைகோர்ப்பு மற்றும் கொண்டாட்டம் ஆகியவற்றை உள்ளடக்கியிருந்தது.

அவுஸ்திரேலியாவின், மெல்பேர்ன் நகரில் அமைந்துள்ள தலைமையகத்துக்கு அப்பால் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்த இரண்டாவது தடவையாக இது அமைந்துள்ளது. கொழும்பிலுள்ள Intrepid இன் அணி, சர்வதேச ரீதியில் காணப்படும் மிகப்பெரிய அணியாக அமைந்துள்ளதுடன், இலங்கையில் பிரயாண செயற்பாடுகளில் பெருமளவு ஆதரவை வழங்குவதுடன், சர்வதேச வியாபாரத்துக்கு பகிரப்பட்ட சேவைகளையும் வழங்குகிறது. இந்த மாநாட்டினூடாக இலங்கையின் பொருளாதாரத்தில் ரூ. 50 மில்லியனுக்கு அதிகமான தொகை பங்களிப்பு செய்யப்பட்டிருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

## கண்டியில் சாதனையாளர்கள் கௌரவிப்பு





■ பு.கஜிந்தன்

சாதனையாளர்களைக் கௌரவிக்கும் Top 100 விருது வழங்கும் விழா நேற்று முன்தினம் (15) கண்டியில் இடம்பெற்றது. இந்நிகழ்வானது இலங்கை - இந்திய நட்புறவு ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்டது.

இதில் இலங்கை முழுவதுமுள்ள கலைஞர்கள், ஆசிரியர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகத்துறை சார்ந்தவர்கள் எனப் பலரும் கௌரவிக்கப்பட்டனர்.

இதில் இலங்கை முழுவதுமுள்ள பல ஆளுமைகளைக் கௌரவிக்கும் வகையில் பல விண்ணப்பம் கோரப்பட்ட நிலையில், சில ஆளுமைகளே தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இவ் விருது வென்ற ஆளுமைகளே இன்று நினைவுச்சின்னம் மற்றும் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன.

இவ்விருது வழங்கல் நிகழ்வில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அரச ஊடகவியலாளர் பி.லின்ரன் மற்றும் சுயாதீன ஊடகவியலாளர் கே.எம்.வித்தகன் கௌரவிக்கப்பட்டு யாழ். மண்ணுக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

இவ் விருது விழாவில் பல மக்கள், அரசியல்வாதிகள் மற்றும் தன்னார்வத் தொண்டர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## குற்றச்செயல்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் ஹெரோயினுடன் கைது

■ பு.கஜிந்தன்

பல்வேறு கொள்ளை மற்றும் மோட்டார் சைக்கிள் திருட்டுகளுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் இருவர் கடந்த ஒருவருட காலமாகத் தலைமறைவாகியிருந்த நிலையில் நேற்று முன்தினம் (15) கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி - விநாயகபுரம் பகுதியில் வைத்து கிளிநொச்சி குற்றப்புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பதிகாரி விஜயராஜா தலைமையிலான பொலிஸ் குழுவினரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இதன்போது அவர்கள் களவாடிய 5 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் தங்க நகைகள் என்பன மீட்கப்பட்டன. இதன்போது ஒருவரிடமிருந்து 5.5 கிராம் நிறையுடைய ஹெரோயின் போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டது.

சந்தேகநபர்கள் நேற்று (16) கிளிநொச்சி நீதிமன்றத்தின் பதில் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்ட நிலையில், அவர்களை 6 நாட்கள் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்ய நீதிவான் அனுமதி வழங்கினார். இது குறித்து கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பிரதான சந்தேகநபர் ஏறாவூர், கரடியனாறு, அக்கராயன்குளம், யாழ்ப்பாணம், போன்ற பகுதிகளில் நடத்திய பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர் என்ற ரீதியில் தேடப்பட்டு வந்தவரென்றும் அவருக்கு 10க்கும் மேற்பட்ட பிடியாணைகளும் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.


**Now you can subscribe to the below Newspapers mentioned Published by Liberty Publishers.**

| Paper | Period | Cost Per Copy | No of Days | Rate |
|---|---|---|---|---|
| the daily morning | One Month | 70.00 | 22 | 1540.00 |
| | Three Month | | 64 | 4480.00 |
| | Six Month | | 129 | 9030.00 |
| | One Year | | 261 | 18270.00 |
| the sunday morning | One Month | 180.00 | 4 | 520.00 |
| | Three Month | | 13 | 2340.00 |
| | Six Month | | 26 | 4680.00 |
| | One Year | | 52 | 9360.00 |

| Paper | Period | Cost Per Copy | No of Days | Rate |
|---|---|---|---|---|
| தமிழன் | One Month | 40.00 | 22 | 880.00 |
| | Three Month | | 64 | 2560.00 |
| | Six Month | | 129 | 5160.00 |
| | One Year | | 261 | 10440.00 |
| தமிழன் (Sunday) | One Month | 130.00 | 4 | 520.00 |
| | Three Month | | 13 | 1690.00 |
| | Six Month | | 26 | 3380.00 |
| | One Year | | 52 | 6760.00 |

FOR MORE INFORMATION PLEASE CONTACT

Address : - The Manager Circulation
Liberty Publishers Private Limited
46/8, Dompe Road,
Kalukondayawa,Malwana.

DELIVERY FREE

Hotline :- 076 136 7623

Tel No: - 0112 127 209

# ஈராக்கில் அமெரிக்க ஏவுகணை தாக்குதல்: ஐ.எஸ்.ஐ.எஸ். முக்கிய தலைவர் உயிரிழப்பு





ஈராக் உளவுத்துறையுடன் இணைந்து அமெரிக்கப் படை நடத்திய ஏவுகணை தாக்குதலில், ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் செயற்பாடுகளை கவனித்து வந்த முக்கியத் தலைவர் அபு காதிஜா (Abu Khadija) உயிரிழந்துள்ளார்.

ஈராக்கில் தீவிரவாத தடுப்பு நடுவடிக்கைகளுக்கு ஆதரவளிக்க அமெரிக்க வீரர்கள் 2,500 பேர் முகாமிட்டுள்ளனர். ஈராக்கின் தொலைதூர பகுதிகள் ஐ.எஸ். தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டிலுள்ளது. ஐ.எஸ். அமைப்பில் 2ஆவது இடத்திலுள்ள முக்கியத் தலைவர் அபு காதிஜா. இவர் உலகின் பல நாடுகளில் ஐ.எஸ். அமைப்பின் செயற்பாடுகளை ஈராக்கில் இருந்தபடியே கவனித்து வந்தார். ஐ.எஸ். அமைப்புக்கு தேவையான ஆயுதங்கள், பொருட்கள், நிதி ஆகியவற்றை இவர் பல நாடுகளுக்கு அனுப்பி வந்தார். ஈராக் மற்றும் சிரியாவிலுள்ள ஐ.எஸ். தீவிரவாதிகள் இவரது கட்டுப்பாட்டில் இருந்து வந்தனர். இவருக்கு அமெரிக்கா கடந்த 2023ஆம் ஆண்டே தடை விதித்திருந்தது.

ஈராக்கின் அல்-அன்பர் பகுதியில் அபு காதிஜாவின் நடமாட்டம் இருப்பதாக ஈராக் உளவுத்துறைக்கு தகவல் கிடைத்தது. இத்தகவல் அங்குள்ள அமெரிக்க இராணுவத்திடம் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து அபு காதிஜா தீவிரமாக கண்காணிக்கப்பட்டார். அபு காதிஜா பற்றிய தகவல் உறுதிசெய்யப்பட்டதும், அங்கு அமெரிக்க இராணுவம் ஏவுகணை தாக்குதல் நடத்தியது. இதில் அபு காதிஜா மற்றும் அவருடன் இருந்த மற்றொரு ஐ.எஸ். தீவிராதியும் உயிரிழந்துள்ளனர். அவர்கள் தற்கொலைப் படையினர் அணியும் வெடி குண்டுகள் பொருத்தப்பட்ட உடையை அணிந்திருந்துள்ளனர். டிஎன்ஏ பரிசோதனைக்குப் பின்னர் அபு காதிஜாவின் உயிரிழப்பை ஈராக் மற்றும் அமெரிக்க அதிகாரிகள் உறுதி செய்தனர்.

இதையடுத்து ஈராக்கிலுள்ள அமெரிக்க இராணுவ கொமாண்டர் ஜெனரல் மைக்கேல் எரிக் குரில்லா தெரிவிக்கையில், '' ஐ.எஸ். அமைப்பின் நடவடிக்கைகளை உலகம் முழுவதும் கவனித்து வந்த முக்கிய தலைவர் அபு காதிஜா. அமெரிக்காவுக்கு அச்சுறுத்தலாக இக்கும் ஐ.எஸ். தீவிரவாதிகளை நாங்கள் தொடர்ந்து வேட்டையாடி ஒழிப்போம்'' - என்றார்.

அபு காதிஜா கொல்லப்பட்டதை வரவேற்றுள்ள ஈராக் பிரதமர் முகமது ஷியா அல்-சூடானி, ''ஈராக் மற்றும் உலக நாடுகளுக்கு மிகவும் அபாயகரமான தீவிரவாதிகளில் ஒருவராக அபு காதிஜா இருந்து வந்தார். அமெரிக்க இராணுவ உதவியுடன் இந்த ஒபரேஷன் மேற்கொள்ளப்பட்டது'' - என்றார்.

இதேவேளை, இதுகுறித்து அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் சமூக ஊடகத்தில் விடுத்துள்ள செய்தியில்,

''ஈராக்கில் ஐ.எஸ். தலைவரை அமெரிக்க இராணுவத்தினர் வேட்டையாடியுள்ளனர். அவரது பரிதாப வாழ்க்கை முடிவடைந்துவிட்டது. அவருடன் மற்றொரு தீவிரவாதியும் உயிரிழந்தார். ஈராக் மற்றும் குருது அரசு ஒத்துழைப்புடன் இந்த ஒபரேஷன் மேற்கொள்ளப்பட்டது'' எனத் தெரிவித்துள்ளார்.

# 43 நாடுகளுக்கு அமெரிக்கா தடை!

## விசா வழங்குவதில் கெடுபிடி



பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் உள்ளிட்ட காரணங்களை காட்டி, 43 நாடுகளைச் சேர்ந்தவர்கள் அமெரிக்காவுக்குச் செல்வதற்கு முழுமையாக அல்லது பகுதியாக தடை விதிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த பட்டியலில், பாகிஸ்தான், ரஷ்யா, வட கொரியா, பூட்டான் போன்ற நாடுகள் இடம்பெற்றுள்ளன.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் 2ஆவது முறையாக பதவியேற்ற பின்னர் பல அதிரடி நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். அந்த வரிசையில் அடுத்ததாக ட்ரம்ப் நிர்வாகம் 43 நாடுகளுக்கு பயணத் தடை விதிக்கவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இதற்கான உத்தேசப் பட்டியல் வெளியாகியுள்ளது. விரைவில் இது குறித்த அதிகாரப்பூர்வ தகவல் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த உத்தேச பட்டியலில், 3 பிரிவாக நாடுகள் பிரிக்கப்பட்டுள்ளன. சிவப்பு பிரிவில் ஆப்கானிஸ்தான் பூட்டான், வடகொரியா, ஈரான், யேமன், சூடான் உள்ளிட்ட 11 நாடுகள் உள்ளடங்கியுள்ளன. இந்த நாடுகளிலிருந்து எவருமே அமெரிக்காவுக்குச் செல்லமுடியாது.

அடுத்ததாக செம்மஞ்சள் (ஒரெஞ்ச்) பட்டியலில் பாகிஸ்தான், ரஷ்யா, மியன்மார் உள்ளிட்ட 10 நாடுகள் உள்ளடங்கியுள்ளன. இந்த நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்படும். கோடீஸ்வர தொழிலதிபர்கள் அமெரிக்கா வர எளிதில் அனுமதிக்கப்படுவார்கள். அதுவே குடியேற்றம் அல்லது சுற்றுலா விசா வழங்கப்படாது. இந்த நாடுகளைச் சேர்ந்த குடிமக்கள் விசா நேர்முகப் பரீட்சையில் (இன்டர்வியூவில்) கட்டாயம் நேரில் வந்து கலந்துகொள்ள வேண்டும். எனவே இப்பட்டியலிலுள்ள நாடுகளிலிருந்து எவரும் அவ்வளவு எளிதில் அமெரிக்காவுக்கு சென்றுவிட முடியாது.

மூன்றாவதாக மஞ்சள் பட்டியலில் பெரும்பாலும் ஆபிரிக்க நாடுகள் உள்ளன. மொத்தம் 22 நாடுகள் இதில் இடம்பெற்றுள்ளன. இந்த நாடுகள் 60 நாளில் அமெரிக்காவின் சில சட்ட விதிகளுக்கு இணங்க வேண்டும். அதாவது, அமெரிக்கா வரும் பயணிகளின் விவரங்களை பகிர்ந்து கொள்ள வேண்டும், கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்) வழங்குவதிலுள்ள பாதுகாப்பு நடைமுறைகள், தடை செய்யப்பட்ட நாடுகளை சேர்ந்த மக்கள் குடியுரிமை பெற்று அதன்மூலம் அமெரிக்காவில் குறுக்கு வழியில் நுழைவதை தடுத்தல் போன்றவற்றை உறுதிசெய்ய வேண்டும். இல்லாவிட்டால், ஒரெஞ்ச் அல்லது சிவப்பு பட்டியலுக்கு மாற்றப்படும். இந்த தகவல் உலக நாடுகள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

**தாய்லாந்து அதிகாரிகளுக்கு தடை**

சீனாவில் உய்குர் மக்கள் பல்வேறு சித்ரவதை மற்றும் இன அழிப்புக்குள்ளாக்கப்பட்டு வரும் நிலையில், தப்பிவந்த 40இற்கும் மேற்பட்ட உய்குர் முஸ்லிம்களை சீனாவுக்கு நாடு கடத்திய தாய்லாந்து அரசு அதிகாரிகள் மீது அமெரிக்கா தடை விதித்துள்ளது.

அதிகாரிகள் குறித்த விபரங்களை வெளியிடாத அமெரிக்கா அவர்கள் தங்கள் நாட்டுக்கு வர தடை விதித்துள்ளது. இதேபோல, மாணவர்கள் பரிமாற்ற திட்டத்தின் அடிப்படையில், அமெரிக்காவுக்கு சீன மாணவர்கள் வர தடை விதிக்கக் கோரி ரெய்லி மோரே தலைமையில் குடியரசு கட்சி எம்.பிக்கள் பாராளுமன்றத்தில் மசோதாவொன்றை தாக்கல் செய்துள்ளார். சீனா தனது மாணவர்கள் மூலமாக அமெரிக்க இராணுவத்தை உளவு பார்ப்பதாகவும், அறிவுசார் சொத்துக்களை திருடி நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருப்பதாகவும் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஏற்கனவே தடுத்த நீதிமன்றம்**

ட்ரம்ப் தனது முதல் பதவிக் காலத்திலேயே இதுபோன்ற பயணத் தடை உத்தரவை கொண்டுவந்தார். ஆனால், அப்போது பெரும்பாலும் முஸ்லிம் நாடுகளுக்கு மட்டுமே பயணத் தடை விதிக்கப்பட்டிருந்ததால் சர்ச்சையானது. பல வழக்குகள் தொடரப்பட்டதால் அமெரிக்க நீதிமன்றங்கள் மூலம் அந்த உத்தரவு அமுல்படுத்தப்படாமல் தடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# 20இல் பூமிக்கு திரும்பும் சுனிதா



சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தில் கடந்த 9 மாதங்களாக சிக்கியுள்ள விண்வெளி வீரர்களான சுனிதா வில்லியம்ஸ் மற்றும் வில்மோர் ஆகியோரை பூமிக்கும் அழைத்து வருவதற்காக அனுப்பப்பட்ட விண்கலம், சர்வதேச விண்வெளி நிலையத்தை அடைந்துள்ளது. இந்நிலையில் சுனிதா மற்றும் வில்மோர் ஆகிய இருவரும் விரைவில் பூமிக்குத் திரும்பவுள்ளனர்.

அமெரிக்காவின் போயிங் நிறுவனமும், நாசாவும் இணைந்து தயாரித்த புதிய ஸ்டார்லைனர் விண்கலத்தில் சுனிதா வில்லியம்ஸ், வில்மோர் ஆகியோர் கடந்த ஜூன் 5ஆம் திகதி விண்வெளிக்கு சென்றனர். ஹீலியம் கசிவு உள்ளிட்ட கோளாறு காரணமாக சுனிதா வில்லியம்ஸ், வில்மோர் இருவரும் சர்வதேச விண்வெளி மையத்தில் தொடர்ந்து தங்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இந்நிலையில் அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் பொறுப்பேற்ற பின்னர் சுனிதா வில்லியம்ஸை பூமிக்கு அழைத்து வரும் நடவடிக்கை விரைவுபடுத்தப்பட்டன. இந்நிலையில், எலான் மஸ்கின் ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனத்தின் பால்கன் ரொக்கெட் மூலம் டிராகன் க்ரூ-10 விண்கலம் வெள்ளிக்கிழமை புளோரிடா மாகாணத்திலுள்ள கென்னடி விண்வெளி ஆய்வு மையத்திலிருந்து வெற்றிகரமாக ஏவப்பட்டது. இதில், அமெரிக்காவைச் சேர்ந்த 2 விண்வெளி வீரர்கள், ஜப்பான் மற்றும் ரஷ்யாவை சேர்ந்த தலா ஒரு வீரர்கள் உட்பட 4 பேர் அனுப்பப்பட்டனர்.

இந்நிலையில் விண்கலம், நேற்று முன்தினம் (15) சர்வதேச விண்வெளி நிலையத்தை அடைந்தது. பூமியிலிருந்து வந்தவர்களை விண்வெளி மையத்துக்கு சுனிதா வில்லியம்ஸ் குழு உற்சாகமாக வரவேற்றது. எதிர்வரும் 20ஆம் திகதி அவர்கள் பூமிக்குத் திரும்புவர் என நாசா தெரிவித்துள்ளது.

# அமெரிக்க வான் தாக்குதல் யேமனில் 32 பேர் பலி



யேமன்மீது அமெரிக்க போர் விமானங்கள் நடத்திய வான் தாக்குதலில் 32பேர் கொல்லப்பட்டுள்ளனர்.


யேமனில் ஈரான் ஆதரவு பெற்ற ஹவுதி கிளர்ச்சியாளர்கள் பல பகுதிகளில் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். அவர்கள் செங்கடல் பகுதியில் கப்பல்களை வழிமறித்து தாக்குதலிலும் ஈடுபட்டு வருகின்றனர். பிற கப்பல்கள், விமானம் மற்றும் ஆளில்லா விமானங்கள் மீதும் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. இதற்கு எதிராக சர்வதேச நாடுகள் குரல் கொடுத்து வருகின்றன.

இந்நிலையில், யேமனிலுள்ள ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கும்படி அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் உத்தரவிட்டார். அமெரிக்கர்களுக்கு எதிராக கடற்கொள்ளை, வன்முறை மற்றும் பயங்கரவாதத்தில் ஈடுபடுகின்றனர் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் தீர்க்கம் நிறைந்த மற்றும் சக்தி வாய்ந்த நடவடிக்கைகளை எடுக்கும்படி ட்ரம்ப் உத்தரவிட்டார்.

இதனைத் தொடர்ந்து, விமானந்தாங்கி கப்பலிலிருந்து போர் விமானங்கள் புறப்பட்டு சென்றன. இதன் தொடர்ச்சியாக, யேமனில் நடந்த வான் தாக்குதலில் 32 பேர் கொல்லப்பட்டனர். 23 பேர் காயமடைந்தனர்.

இந்த தாக்குதல் இன்னும் சில நாட்களுக்கு தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஹவுதிக்கு ஆதரவளித்துவரும் ஈரானுக்கும் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார். ஹவுதிக்கான ஆதரவை உடனடியாக நிறுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதென தெரிவித்தார். மத்திய கிழக்கு பகுதியில் இது மிகப் பெரிய இராணுவ நடவடிக்கையாக இருக்கும் எனக் கூறப்படுகிறது.

# பாகிஸ்தானில் குண்டுவெடிப்பு; பாதுகாப்பு படையினர் 90 பேர் பலி



பாகிஸ்தானில் பாதுகாப்பு படையினர் சென்ற பஸ்சில் குண்டு வெடித்ததில்,90 பேர் உயிரிழந்தனர். மேலும் பலர் பலத்த காயமடைந்துள்ளனர். இந்த தாக்குதலுக்கு பலூசிஸ்தான் விடுதலை படை பொறுப்பேற்றது.

பாகிஸ்தானின் பலுசிஸ்தானிலுள்ள நுஷ்கி என்ற இடத்தில் பாதுகாப்பு படையினர் சென்று கொண்டிருந்த பஸ்சில் குண்டு வெடித்தது. இதில் சம்பவ இடத்திலேயே, 90 பேர் உயிரிழந்தனர். மேலும் பல பேர் பலத்த காயமடைந்தனர். இவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். காயமடைந்தோரில் பலரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளதால் உயிரிழப்புகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடுமென அஞ்சப்படுகிறது.

சமீபத்தில், பலூசிஸ்தான் மாகாணத்திலுள்ள குவெட்டாவிலிருந்து, கைபர் பக்துன்குவா மாகாணத்தில் உள்ள பெஷாவர் நோக்கி சென்று கொண்டிருந்த ரயிலில் 450 பயணியரை பயங்கரவாதிகள் சிறைபிடித்தனர். அதன்பிறகு, பயங்கரவாதிகளை சுட்டுக் கொன்று விட்டு, மக்களை அந்நாட்டு இராணுவத்தினர் மீட்டனர். இந்த சம்பவம் நடந்து பரபரப்பு ஓயவில்லை. அதற்குள் தற்போது மீண்டும் பயங்கரவாதத் தாக்குதல் சம்பவம் அரங்கேறியுள்ளமை பரபரப்பை கிளப்பியுள்ளது.

# சூறாவளி - காட்டுத்தீயில் சிக்கி அமெரிக்காவில் 32 பேர் உயிரிழப்பு




அமெரிக்காவில் பல மாகாணங்களில் ஒரே நேரத்தில் சூறாவளி, புழுதிப்புயல், காட்டுத்தீ காரணமாக 32 பேர் உயிழந்துள்ளதுடன், 2 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அமெரிக்கா முழுவதும் ஒரே நேரத்தில் சூறாவளி, புழுதிப்புயல், காட்டுத்தீ ஆகிய பேரிடர்கள் பேரழிவை ஏற்படுத்தியுள்ளன. குறிப்பாக, மிசோரி, அர்கன்சாஸ் மற்றும் கன்சாஸ் ஆகிய மாகாணங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. மிசோரியில், இரவு முழுவதும் சூறாவளி தாக்கி, வீடுகளை இடித்து தரைமட்டமாக்கியது. மரங்கள் வேரோடு சாய்ந்தன. இதனால் 12 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

இதற்கிடையில், டெக்சாஸில், புழுதிப்புயலால் ஏற்பட்ட கார் விபத்துகளில் மூன்று பேர் உயிரிழந்துள்ளனர். புயல்கள் கிழக்கு நோக்கி நகர்ந்து வருவதால், மேலும் பேரழிவை எதிர்கொள்ள அதிகாரிகள் தயாராகி வருகின்றனர். புயல் அமெரிக்கா முழுவதும் இலட்சக்கணக்கான மக்களை ஆபத்தில் தள்ளியுள்ளது. இதுவரை மொத்தம் 32 பேர் உயிரிழந்தனர்.

# மாசிடோனியாவில் தீ: 59 பேர் உயிரிழப்பு



மாசிடோனியாவில் இரவுநேர கேளிக்கை விடுதியொன்றில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் 59 பேர் உயிரிழந்துள்ளதுடன், 155இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். படுகாயமடைந்த அனைவரும் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

## கட்டுத் துப்பாக்கி வெடித்து
# ஒருவர் காயம்

(ராமு தனராஜா)

கிராந்துருகோட்டை கின்னோருவ மயானத்துக்கருகாமையில் வயல் வெளியில் கட்டுத் துப்பாக்கி வெடித்ததில் நபரொருவர் பலத்த காயமடைந்து மஹியங்கனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கிராந்துருகோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த நபர் இரத்தினபுரி பகுதியைச் சேர்ந்தவரெனத் தெரியவந்துள்ளது.

குறித்த நபர் கிராந்துருகோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வயல் வெளியில் நெல் அறுவடையில் ஈடுபட்டிருந்தபோது விலங்குகளை வேட்டையாடுவதற்காக கட்டி வைக்கப்பட்டிருந்த கட்டுத் துப்பாக்கியே வெடித்துள்ளது.

இதனையடுத்து குறித்த நபரின் வலது காதில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளதாகவும் காயமடைந்த நபர் மஹியங்கனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக கண்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் அங்கு அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த துப்பாக்கியை மிருகங்களை வேட்டையாடுவதற்கு கட்டி வைத்திருந்ததாக சந்தேகிக்கப்படும் கின்னேருவ, கிராந்துருகோட்டை பகுதியைச் சேர்ந்த நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் சந்தேக நபரிடம் விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர் மஹியங்கனை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளை கிராந்துருகோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சுரேஷ் சத்துரங்க தலைமையிலான குழுவினர் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





சாமிமலை ஓல்டன் நிலாவத்தை தோட்ட ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய மஹா கும்பாபிஷேக குடமுழுக்கு பெருசாந்தி பெருவிழா நேற்று (16) ஞாயிற்றுக்கிழமை வெகு கோலாகலமாக இடம்பெற்றது. இதன்போது விக்கிரகங்களுக்கு எண்ணைக்காப்பு, யாகசாலையில் பஞ்ச குண்ட யாகம், ராஜகோபுரம் மற்றும் மூலஸ்தானக் கோபுர கலசங்களுக்கு குடமுழுக்கு செய்யப்பட்டதுடன் கருமாரியம்மனுக்கு விஷேட அலங்கார அபிஷேகம் இடம்பெற்று அதனைத் தொடர்ந்து கும்பாபிஷேகத்துக்கான கிரியைகள் பிரதான குருக்கள் சத்யோயாத சிவாச்சாரியார் தலைமையில் இடம்பெற்று அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கிவைக்கப்பட்டது.
(பொகவந்தலாவ நிருபர்)

# கம்பளையில் தீக்காயங்களுக்குள்ளான மாணவன் குறித்து விசாரணையை ஆரம்பித்த பொலிஸார்

(கலஹா செய்தியாளர்)

தின்னரை திருடிய மாணவனை ஆசிரியரிடம் காட்டிக்கொடுத்ததாக சந்தேகித்து சகமாணவனை பழிவாங்குவதாகக் கூறி வகுப்பறைக்குள் வைத்து திரவத்தை பற்றவைத்து குறித்த மாணவன் மீது வீசி தீ வைத்துக் கொளுத்தியதாகக் கூறப்படும் ஐந்தாம் வகுப்பு மாணவர்கள் மூவருக்கெதிராக கம்பளை குருந்துவத்த பொலிஸார் நேற்று முன்தினம் (15) விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கம்பளை கல்வி வலயத்துக்குட்பட்ட (சிங்கள மொழி மூல) யடபான ஆரம்ப பாடசாலையில் கல்வி கற்றுவந்த குருந்துவத்தை உடஹேன்தென்ன வீராத்தோட்டத்தைச் சேர்ந்த திருச்செல்வம் செல்வகுமார் என்ற 14 வயது மாணவனுக்கே மேற்படி இத்துயரச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

மேற்படி சம்பவமானது கடந்த 13.02. 2025 அன்று நடைபெற்றிருந்தபோதும் ஒரு மாதம் கடந்த பின்னரே நேற்று முன்தினம் (15) மாலையே தீவைத்த மாணவர்களை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

சம்பவதினம் குறித்த வகுப்பாசிரியை விடுமுறையில் இருந்ததாகத் தெரியவருகிறது. இந்நிலையில், வகுப்பறையிலிருந்த தின்னர் திரவத்தை மூன்று மாணவர்கள் திருடி மலசல கூடம் அமைந்துள்ள பகுதியில் தீ மூட்டி விளையாடியதாகவும் அதில் ஒரு மாணவன் போத்தலொன்றில் திரவத்தை ஊற்றி தனது பைக்குள் ஒழித்துவைத்துக்கொண்டுள்ளார்.

மேற்படி சம்பவம் விசாரணைக்கு வந்த சந்தர்ப்பத்தில் குறித்த மாணவர்களை அடையாளம் காட்டியமைக்குப் பழிவாங்கும் விதமாக, அதே வகுப்பைச் சேர்ந்த மூன்று மாணவர்கள் வகுப்பறையில் பாதுகாப்பின்றி வைக்கப்பட்டிருந்த பெயிண்ட் கொள்கலனில் தினர் திரவத்தை ஊற்றி, தீ வைத்து, குறித்த மாணவன் மீது வீசி பழிதீர்க்க



முயன்றதில் கால்களில் தீப்பற்றியதையடுத்து பிறிதொரு வகுப்புக்குள் ஓடியுள்ளான். அங்கிருந்த ஆசிரியை தண்ணீரை ஊற்றி தீயை அணைத்துள்ளார். இதன்போது பலத்த தீக்காயங்களுக்குள்ளான நிலையில், குருந்துவத்தை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கம்பளை போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளான்.

மேற்படி சம்பவம் குறித்து பாடசாலை அதிபர் உட்பட ஆசிரியர்களும் இணைந்து உரிய நடவடிக்கையை மேற்கொள்ளாது பொய் கூறும் வகையில் வகுப்பறையிலுள்ள புத்தர் சிலைக்கு வைக்கப்பட்ட விளக்கு தவறி கீழேயிருந்த தின்னர் திரவ டப்பாவுக்குள் வீழ்ந்து தீப்பிடித்ததாகவும் இதனால் மாணவன் மீது தீப்பற்றியதாகவும் ஆசிரியர்கள் கூறி உண்மையை மூடி மறைத்துள்ளனர். மேலும் ஐந்து நாட்களாக மருத்துவமனையிலிருந்த குறித்த மாணவன் நடந்த சம்பவத்தை பொலிஸாரிடம் வாக்குமூலமாகக் கூறியிருந்தாலும் அது குறித்து கவனஞ்செலுத்தியிருக்கவில்லை.

பாதிக்கப்பட்ட மாணவனின் தாயார், குருந்துவத்தை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளித்துள்ளார். மேலும், இதனால் தனது பிள்ளையின் கற்றல் நடவடிக்கைகள் ஒரு மாதமாகத் தடைப்பட்டுள்ளதோடு, மகனின் காயங்களுக்கு சிகிச்சையளிக்க அதிக செலவிட்டு மருத்துவமனைக்குச் செல்ல வேண்டியிருப்பதாகவும் இந்தச் சம்பவத்துக்கு சரியன நீதியை கோருவதாகவும் கூறுகிறார்.

சிறிய வயது மாணவர்கள் இருந்த இடத்தில் ஆபத்தான எரியக்கூடிய திரவங்கள் வைக்கப்பட்டிருப்பது குறித்தும், சம்பவத்தை மறைக்க முயற்சித்தது குறித்தும் அறிந்துகொண்டதன் பிரகாரம் பாடசாலையின் அதிபர் நிலந்தி பிரதீபிகாவை ஊடகவியலாளர்கள் விசாரிக்க முற்பட்ட வேளையிலும் நாம் தொலைபேசியில் தொடர்புகொள்ள பல தடவைகள் முயன்ற போதிலும் ஊடகவியாலாளர்கள் என்று அறிந்துகொண்டதும் தொலைபேசியை அவர் துண்டித்துவிட்டார்.

குருந்துவத்தை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, தலைமை ஆய்வாளர் சரத் விஜேசிங்க மேற்படி சம்பவம் குறித்து கம்பளை நீதவான் நீதிமன்றத்தில் முறைப்பாடளிக்க நடவடிக்கை எடுத்துள்ளார். சிறார்களுக்கு எதிராக நடவடிக்கையெடுப்பது குறித்து ஆலோசனை பெறுவதற்காக பொலிஸார் சட்டப் பிரிவுக்கு சம்பவத்தைப் பரிந்துரைத்துள்ளனர்.

## சிவனொளிபாதமலையில் போதைப்பொருட்களுடன்
# 11 பேர் கைது

(மஸ்கெலியா நிருபர்)

பல்வேறு போதைப்பொருட்களை எடுத்துக்கொண்டு ஹட்டன் வழியாக சிவனொளிபாதமலைக்கு வந்த 11 பேரை கைது செய்த பொலிஸார். அவர்களை ஹட்டன் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய பின்னர் ஹட்டன் மாவட்ட நீதிபதி மற்றும் நீதவான் எம். பாருக் சந்தேக நபர்களை பிணையில் விடுவித்து மீண்டும் நீதிமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (18)ஆஜர்படுத்த உத்தரவிட்டார்.

சிவனொளிபாதமலைக்குச் செல்லும்போது பல்வேறு போதைப்பொருட்களை எடுத்துச் செல்லும் நபர்களைக் கைதுசெய்வதற்காக நல்லதண்ணி பொலிஸார் இந்த மாதம் 12 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையில் சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றங்களில் ஆஜர்படுத்தப்பட்டதாக நல்லதண்ணி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இ.ஏ.பி.எஸ். வீரசேகர தெரிவித்தார்.

சந்தேக நபர்கள் 25 முதல் 40 வயதுக்குட்பட்டவர்களென்றும் நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்தவர்களென்றும் பொறுப்பதிகாரி இ.ஏ.பி.எஸ். வீரசேகர மேலும் தெரிவித்தார்.




கண்டி வாழ் மூவின மக்களினதும் இன நல்லுறவை மையப்படுத்தி கண்டி மாநகர சபையின் ஏற்பாட்டில் வருடந்தோறும் முன்னெடுத்துவரும் வருடாந்த இப்தார் நிகழ்வு நேற்று முன்தினம் (15) மாநகர சபை மண்டபத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. கண்டி மாநகர சபை முன்னாள் உறுப்பினர் எம்.முஹ்மான் மாநகர சபை ஆணையாளர் திருமதி இந்திகா குமாரி அபேசிங்க தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மதப் பெரியார்கள் , கண்டி மீரா மக்கம் பள்ளிவாசல் தலைவர் இலாஹி ஆப்தீன், மத்திய மாகாண பிரதான செயலாளர் அஜித் பிரேமசிங்க, கண்டி முஸ்லிம், தமிழ் மற்றும் சிங்கள வர்த்தக சங்கங்கள் உட்பட ஏனைய அமைப்புகளின் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துகொண்டனர்.
(எம்.ஏ.அமீனுல்லா)

# வவுனியாவில் கம்பர் நினைவுதினம்



வவுனியாவில் கம்பர் நினைவுதினம் நேற்று (16) நகரசபை ஏற்பாட்டில் இடம்பெற்றிருந்தது.

இதன்போது கம்பனின் உருவச் சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலியும் செலுத்தப்பட்டிருந்ததுடன், பாடசாலை மாணவர்களால் கம்பர் தொடர்பான நினைவுப் பேருரைகளும் நடத்தப்பட்டிருந்தன.

இந்நிகழ்வில் சமூக ஆர்வலர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மன்னாரில் திருடப்பட்ட
# நகைகள் மீட்பு
### சந்தேகநபர்கள் மூவர் கைது



(ஜோசப் நயன்)

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாந்திபுரம் பகுதியில் கடந்த சிவராத்திரி தினத்தன்று இரவு திருடப்பட்ட பல இலட்சம் ரூபா பெறுமதியான நகைகள் மன்னார் பொலிஸாரால் நேற்று முன்தினம் (15) மீட்கப்பட்டதுடன், திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாந்திபுரம் பகுதியில் உள்ள வீடொன்றில் கடந்த சிவராத்திரி தினத்தன்று பல இலட்சம் ரூபா பெறுமதியான நகைகள் திருடப்பட்டன.

இதனையடுத்து பாதிக்கப்பட்டவர் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த நிலையில், குறித்த திருட்டுச் சம்பவம் தொடர்பாக மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜயதிலக்கவின் பணிப்புரைக்கமைவாக குற்ற விசாரணைப் பிரிவுப் பொறுப்பதிகாரி மகேஷ் தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேற்கொண்ட தேடுதல் மற்றும் விசாரணைகளின்போது மூன்று சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட நபர்களிடம் இருந்து சுமார் 28 இலட்சம் ரூபா பெறுமதியான நகைகள் மீட்கப்பட்டதுடன், கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் மன்னார் சாந்திபுரம் மற்றும் பனங்கட்டுகொட்டு பகுதியைச் சேர்ந்த 28, 29 மற்றும் 33 வயதுடைய நபர்கள் எனத் தெரியவந்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட மூவரும் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் என முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

# வட்டுக்கோட்டை பிரதேச வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் நிர்வாகத் தெரிவு



(பு.கஜிந்தன்)

வட்டுக்கோட்டை பிரதேச வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் நிர்வாகத் தெரிவும் பொதுச்சபைக் கூட்டமும் நேற்றையதினம் வைத்தியசாலையில் நடைபெற்றன.

இதில் வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி கஜானா கெங்காதரன் தலைவராகவும் அ.இன்பராசா செயலாளராகவும்பேரின்பநாதன் பொருளாளராகவும் குலசிங்கம் உப தலைவராகவும் திருமதி கலைமதி உப செயலாளராகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

அத்துடன், வட்டுக்கோட்டைப் பகுதியில் உள்ள ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவுகளிலுமிருந்து ஒவ்வொரு நிர்வாக சபை உறுப்பினரும் தெரிவுசெய்யப்பட்டதுடன், கணக்காய்வாளர்களாக பு.கஜிந்தன் மற்றும் திருமதி தாரணி ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

நிர்வாகத் தெரிவின் பின்னர் வைத்தியசாலையின் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டன. பின்னர் நன்றியுரையுடன் கூட்டம் நிறைவுக்கு வந்தது.

# வவுனியாவின் 5 உள்ளூராட்சி மன்றங்களுக்கு கட்டுப்பணம் செலுத்திய மஸ்தான் எம்.பியின் கங்காரு

(சி.திவியா)



வவுனியா மாவட்டத்தின் 5 உள்ளூராட்சி சபைகளிலும் போட்டியிட வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தானின் இலங்கை தொழிலாளர் கட்சி நேற்று (16) வவுனியா மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகத்தில் கட்டுப்பணம் செலுத்தியது.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் எதிர்வரும் 19ஆம் திகதிவரை கட்டுப்பணம் செலுத்த முடியும். அதற்கமைவாக வவுனியா மாவட்டத்தின் வவுனியா மாநகரசபை, வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபை, வவுனியா வடக்கு பிரதேச சபை, வெண்கல செட்டிகுளம் பிரதேச சபை, வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபை ஆகிய ஐந்து உள்ளூராட்சி மன்றங்களிலும் இலங்கை தொழிலாளர் கட்சி கங்காரு சின்னத்தில் போட்டியிடவுள்ளது.

அதற்கான கட்டுப்பணத்தை கட்சி முக்கியஸ்தர்கள் வவுனியா மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள தேர்தல் அலுவலகத்தில் செலுத்தியிருந்தனர்.

# வவுனியா மாணவனின் இலத்திரனியல் வாக்களிப்பு இயந்திரத்தை பார்வையிட்ட தேர்தல் ஆணைக்குழுவின் மேலதிக ஆணையாளர்

(சி.திவியா)

இலங்கையில் முதன்முறையாக இலத்திரனியல் வாக்களிப்பு இயந்திரத்தினூடாக வாக்களிப்பு மேற்கொண்டு வவுனியா மாணவன் சாதனை படைத்துள்ள நிலையில், தேர்தல் ஆணைக்குழுவின் மேலதிக ஆணையாளர் எஸ்.அச்சுதன் அதனைப் பார்வையிட்டார்.

வவுனியா விபுலானந்தா கல்லூரிக்கு நேற்று முன்தினம் (15) சென்றிருந்த தேர்தல் ஆணைக்குழுவின் மேலதிக ஆணையாளர் தலைமையிலான குழுவினர் குறித்த மாணவனின் கண்டுபிடிப்பைப் பார்வையிட்டனர்.

வவுனியா விபுலானந்தா கல்லூரி மாணவன் கபிலாஸ் அண்மையில் புத்தாக்க போட்டிக்காக கண்டுபிடித்து, தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்ற இலத்திரனியல் முறையிலான வாக்களிப்பு இயந்திரத்தைப் பயன்படுத்தி பாடசாலையில் மாணவர் பாராளுமன்றத் தேர்தல் வாக்களிப்பு செயற்பாடு இடம்பெற்றிருந்தது.

மாணவனால் கண்டுபிடிக்கப்பட்ட இந்த இலத்திரனியல் வாக்களிப்பு இயந்திரம் இலங்கையில் ஒரு தேர்தலுக்கு பயன்படுத்தப்பட்டிருந்தமை இதுவே முதல் தடவையாகும்.

இலங்கை தேர்தல் முறையில் கடதாசிப்




பாவனை இல்லாது இலத்திரனியல் வாக்களிப்பு முறையை அறிமுகப்படுத்த வேண்டுமென்கின்ற நோக்கோடு குறித்த மாணவனால் கண்டுபிடிக்கப்பட்ட இந்தப் பொறிமுறை முதல் தடவையாக மாணவர் பாராளுமன்றத்துக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், குறித்த இலத்திரனியல் வாக்களிப்பு இயந்திரம் தொடர்பாக அறிந்து கொண்ட தேர்தல் ஆணைக்குழுவினர் அதனை பாடசாலைக்குச் சென்று பார்வையிட்டதுடன், அதன் செயன்முறை தொடர்பாகவும் அறிந்துகொண்டு மாணவனுக்கு தமது பாராட்டையும் தெரிவித்தனர்.

அத்துடன், அதனை மேலும் விருத்தி செய்வது தொடர்பாகவும் ஆலோசனைகளை வழங்கியதுடன், எதிர்காலத்தில் இதனை மேலும் விருத்திசெய்து தேர்தல் நடவடிக்கைகள், தேர்தல் பயிற்சிகளில் பயன்படுத்துவது குறித்தும் தமது ஆணைக்குழுவுடன் பேசி ஆலோசிப்பதாகவும் தெரிவித்திருந்தனர்.

இதன்போது, வவுனியா உதவித் தேர்தல் ஆணையாளர் அமல்ராஜ், பாடசாலை பிரதி அதிபர்களான திருமதி சுரேந்திரன், எஸ்.தர்சன், பாடசாலை ஆசிரியர்கள், உயர்தர மாணவர்கள், மாணவனின் பெற்றோர், பழைய மாணவர் சங்கத்தினர் ஆகியோரும் வருகை தந்திருந்தனர்.

# போதைப்பொருள் வழக்கில் சிக்கிய ஆஸி. கிரிக்கெட் வீரர் குற்றவாளியென நீதிமன்றம் தீர்ப்பு



அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் ஸ்டூவர்ட் மெக்கில் போதைப்பொருள் விநியோக வழக்கில் குற்றவாளி என நியூ சவுத் வேல்ஸ் மாவட்ட நீதிமன்றம் பரபரப்பு தீர்ப்பை வழங்கியுள்ளது. விசாரணையின்போது 330,000 அவுஸ்திரேலிய டொலர்கள் மதிப்புள்ள கொக்கெய்ன் பரிமாற்றம் பற்றிய விபரங்கள் வெளிவந்துள்ளன.

மெக்கில் நேரடியாக போதைப்பொருள் விநியோகத்தில் ஈடுபடவில்லை என்றாலும், அதன் விநியோகத்தில் தெரிந்தே பங்கேற்றதற்காக குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்டுள்ளார். விசாரணையில் ஸ்டூவர்ட் மெக்கில் கொக்கெய்ன் போதைப் பொருளை பயன்படுத்தியதை ஒப்புக்கொண்டார்.

அத்துடன் தனது கூட்டாளியின் சகோதரர் மரினோசொடிரோ பௌலோஸை போதைப் பொருள் விற்பனை யாளரான நபருக்கு அறிமுகப்படுத் தியதையும் ஒப்புக் கொண்டுள் ளார்.

இதையடுத்து அவருக்கு மே மாதம் தண்டனை விதிக்கப்படும் எனவும் தெரியவந்துள்ளது.

# நியூஸிலாந்து மகளிர் அணியுடனான T20 தொடரை கைப்பற்றுமா இலங்கை?

(அகீல் சிஹாப்)

இலங்கை மற்றும் நியூஸிலாந்து மகளிர் அணிகள் மோதும் ரி20 தொடரின் தொடர் வெற்றியாளரை தீர்மானிக்கும் மூன்றாவதும் இறுதியுமான ஆட்டம் நாளை அதிகாலை நடைபெறவுள்ளது.

நியூஸிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி அந்நாட்டு மகளிர் அணிக்கெதிராக தலா 03 போட்டிகள் கொண்ட ஒருநாள் மற்றும் ரி20 தொடர்களில் விளையாடி வருகிறது. இதில் முதலில் நடைபெற்ற ஒருநாள் தொடரை நியூஸிலாந்து 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இதனையடுத்து இவ்விரு அணிகளுக்கு இடையேயான ரி20 தொடரின் முதல் ஆட்டத்தில் இலங்கை அணி வெற்றியீட்டிய நிலையில் 2ஆவது போட்டி நேற்று நடைபெற்றது. போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 20 ஓவர்களில் 07 விக்கெட்டை இழந்து 113 ரன்கள் மட்டுமே எடுத்தது.

114 என்ற இலகுவான இலக்கை நோக்கி பதிலெடுத்தாடிய நியூஸிலாந்து மகளிர் அணி 18.3 ஓவர்களில் 07 விக்கெட்டுகளினால் வெற்றிபெற்று தொடரை சமப்படுத்தியது. இந்நிலையில், தொடர் வெற்றியாளரை தீர்மானிக்கும் இறுதியாட்டம் நாளை இலங்கை நேரப்படி அதிகாலை 2.45 மணிக்கு ஆரம்பமாகிறது.



## விளையாட்டுத் துளிகள்

அண்மையில் நிறைவடைந்த சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் ஆப்கானிஸ்தானுக்கு எதிரான போட்டியின்போது உபாதைக்குள்ளான இங்கிலாந்து வேகப் பந்துவீச்சாளர் மார்க் வுட்டின் ஸ்கேன் பரிசோதனையின் முடிவில், இடது முழங்காலில் காயம் ஏற்பட்டிருப்பது உறுதியானது. இதனையடுத்து, அவருக்கு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளது. இதன் காரணமாக அவர் குறைந்தது அடுத்த 04 மாதங்களுக்கு கிரிக்கெட் விளையாட முடியாத சூழல் உருவாகியுள்ளது.

★★★★★★★★★★★★★★★

டெல்லி கேபிடல்ஸ் அணியின் புதிய தலைவராக சகலதுறை வீரர் அக்ஸர் படேல் நியமிக்கப்பட்டுள்ளார். கே.எல். ராகுல் தலைவராக நியமிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அவர் தலைவர் பதவி வாய்ப்பை நிராகரித்து விட்டார். அக்ஸர் படேல் கடந்த ஆண்டு டெல்லி அணியின் உதவி தலைவராக செயற்பட்டு வந்தார்.

★★★★★★★★★★★★★★★

இங்கிலாந்து கிரிக்கெட் வீரர் ஹாரி ப்ரூக் ஐ.பி.எல். தொடரிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்கு தடை செய்யப்பட்டுள்ளார். இந்தாண்டு தொடரிலிருந்து வெளியேறுவதாக அறிவித்ததன் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஐ.பி.எல். ஏலத்தில் இடம்பெற்ற பிறகு போட்டியில் விளையாட மறுக்கும் எந்தவொரு வீரருக்கும் இரண்டு ஆண்டுகளுக்கு தடை விதிக்கப்படும் என்ற சட்டத்தின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

★★★★★★★★★★★★★★★

அண்மையில் நிறைவடைந்த சம்பியன்ஸ் கிண்ணத் தொடரினை நடத்தும் உரிமை கொண்டிருந்த பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் அதிகாரிகள், இறுதி நாள் பரிசளிப்பு நிகழ்வில் அனுமதிக்கப்படாத சம்பவம் குறித்து ஐ.சி.சி யிடம் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை விளக்கம் கோரியுள்ளது. இறுதி நிகழ்வில் ஐ.சி.சி. இன் தலைவர் ஜெய் ஷா, பி.சி.சி.ஐ. தலைவர் ரோஜர் பின்னி, செயலாளர் தேவரஜித் சாய்க்கியா மற்றும் நியூஸிலாந்து கிரிக்கெட் நிர்வாக இயக்குனர் ரோஜர் வோஸ் ஆகிய நான்கு பேர் மாத்திரமே கலந்து கொண்டனர்.

# நியூஸிலாந்திடம் படுதோல்வியடைந்த பாகிஸ்தான்



பாகிஸ்தான் அணியுடனான 05 போட்டிகள் கொண்ட ரி20 சர்வதேச தொடரின் முதல் ஆட்டத்தில் நியூஸிலாந்து அணி 09 விக்கெட்டுகளினால் அபார வெற்றியீட்டியது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி, நியூஸிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து 05 ஆட்டங்கள் கொண்ட ரி20 தொடர் மற்றும் 03 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடுகிறது. இதில் முதல் தொடராக முதலாவது ரி20 போட்டி கிறைஸ்ட்சர்ச்சில் நேற்று நடைபெற்றது.

நாணய சுழற்சியில் வென்ற நியூஸிலாந்து அணியின் கேப்டன் மைக்கேல் பிரெஸ்வெல் பந்துவீச்சை தெரிவு செய்தார். அதன்படி ஆரம்பம் முதல் நியூஸிலாந்து அணியின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் பாகிஸ்தான் அணி அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்து 18.4 ஓவர்கள் முடிவில் 91 ரன்களுக்கு சுருண்டது.

மிக இலகுவான இலக்கை நோக்கி ஆடிய நியூஸிலாந்து அணி 10.1 ஓவர்களில் ஒரு விக்கெட் இழப்புக்கு 92 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது. 2ஆவது ரி20 போட்டி நாளை இலங்கை நேரப்படி காலை 6.45 மணிக்கு ஆரம்பமாகிறது.

# மகளிர் பிரீமியர் லீக் சம்பியன் பட்டத்தை இரண்டாவது தடவையாக வென்ற மும்பை இந்தியன்ஸ்

## மூன்றாவது முறையாகவும் கோட்டைவிட்ட டெல்லி



பி.சி.சி.ஐ யின் ஏற்பாட்டில் நடைபெற்ற 3ஆவது மகளிர் பிரீமியர் லீக் (டபிள்யூ.பி.எல்.) தொடரின் சம்பியன் பட்டத்தை ஹர்மன்பிரித் கௌர் தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணி இறுதிப்போட்டியில் டெல்லி கேப்பிடல்ஸ் அணியை வீழ்த்தி இரண்டாவது தடவையாக கைப்பற்றியது. தொடரின் மூன்று பருவங்களிலும் இறுதிப்போட்டிக்கு முன்னேறிய டெல்லி கெப்பிட்டல்ஸ் அணி இம்முறையும் சம்பியன் பட்டத்தை கோட்டைவிட்டது.

மும்பையில் நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிப்போட்டியில் முதலில் ஆடிய மும்பை அணி 20 ஓவர்களில் 07 விக்கெட்டுகளை சந்தித்து 149 ரன்களை எடுத்தது. 150 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய டெல்லி 20 ஓவர்களில் 09 விக்கெட்டுகளை இழந்து 141 ரன்கள் மட்டுமே எடுத்து 08 ரன்களினால் தோல்விகண்டது.

இதன்மூலம் 2023 மற்றும் 2025ஆம் ஆண்டு தொடர்களை மும்பை இந்தியன்ஸ் அணி கைப்பற்றியது. 2024ஆம் ஆண்டு தொடரை ஸ்மிருத்தி மந்தனா தலைமையிலான ஆர்.சி.பி கைப்பற்றியிருந்தது.





பொத்துவில் மைட் ஸ்டார் கழகத்தின் புதிய நிர்வாகத் தெரிவும் ஜேர்சி அறிமுக நிகழ்வும் அதனையொட்டிய இப்தார் நிகழ்வும் கடந்த வெள்ளிக்கிழமை (14) கழகத்தின் ஆலோசகர் எம்.ஆர்.எம் வாஸித் இல்லத்தில் நடைபெற்றது. இதன்போது கழகத்தின் தலைவராக ஏ.பி.எம் சியாம், செயலாளராக எஸ்.எல்.எம் றாஸித், பொருளாளராக எம்.எஸ். பௌசுல் அமீன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். குறித்த புதிய ஜேர்சிக்கான நிதியானது மதுரஞ்சேனை வட்டார அமைப்பாளர் மனாப் முயற்சியினால் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி ஊடாக கிடைக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (படங்கள் - அகீல் சிஹாப்)




Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7